SHANKAR IAS ACADEMY™

Best Academy for Civil Services Exam Coaching

SINCE 2004







# TNPSC

# தேர்வுப் பெட்டகம்

tnpscthervupettagam.com

## மைக்ரோ நடப்பு நிகழ்வுகள்

**ஜனவரி 2025**

www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 2
தமிழ்நாடு செய்திகள் ........ 16
தேசியச் செய்திகள் ........ 25
சர்வதேசச் செய்திகள் ........ 43
பொருளாதாரச் செய்திகள் ........ 54
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 58
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 65
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 74
மாநிலச் செய்திகள் ........ 80
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 86
விளையாட்டுச் செய்திகள் ........ 93
முக்கிய தினங்கள் ........ 94
இதரச் செய்திகள் ........ 95

# TNPSC துளிகள்

- BEML லிமிடெட் நிறுவனமானது, நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்படுத்தப் பட்ட வகையிலான BD475-2 எனப்படும் மண் வெட்டு மற்றும் இழுவை இயந்திரத்தினை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியப் பிரதமர், இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் கூடிய தமிழ் கற்பித்தல் என்ற திட்டத்தினை ஃபிஜி நாட்டில் தொடங்கி வைத்துள்ளார்.
- லடாக்கில் 14,300 அடி உயரத்தில் பாயும் பாங்காங் சோ ஏரியின் கரையில் அமைக்கப் பட்டுள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜா அவர்களின் சிலையினை இந்திய இராணுவம் திறந்து வைத்துள்ளது.
- மும்பையினைச் சேர்ந்த காம்யா கார்த்திகேயன் (17) ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயரமான சிகரங்களை ஏறிய இளம் பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- முகமூடி அணிந்த நடன முறைகள் மூலம் புத்தாண்டிற்கான அமைதி மற்றும் பெரும் செழுமையைக் கொண்டாடும் சிக்கிமின் காகியேட் நடன விழா ஆனது காங்டாக் நகரில் உள்ள சுக்லகாங் அரண்மனையில் நடைபெற்றது.
- தென் கொரியாவின் முவான் சர்வதேச விமான நிலையத்தில் ஜெஜு ஏர் நிறுவனத்தின் விமானம் ஆனது ஓடுபாதையில் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 181 பேரில் 179 பேர் உயிரிழந்தனர்.
- இந்திய இராணுவம் ஆனது, பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துடன் உடன் இணைந்து செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களின் மேம்பாடு மற்றும் ஏற்பினை விரைவுபடுத்துவதற்காக வேண்டி பெங்களூருவில் செயற்கை நுண்ணறிவு தொழில்துறை காப்பக மையத்தினை (IAAIIC) நிறுவியுள்ளது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, ஓர் அதிர்வு அலை அடிப்படையிலான ஊசி இல்லாத ஒரு மருந்துப் பீச்சுக்குழாயினை உருவாக்கியுள்ளது என்ற நிலையில் இது தோலுக்கு மிகக் குறைவான சேதம் மற்றும் குறைவான நோய்த் தொற்று அபாயத்துடன் வலியற்ற மற்றும் பாதுகாப்பான மருந்து உட்செலுத்துதலை உறுதி செய்கிறது.
- 18வது யானைகள் மற்றும் சுற்றுலா விழாக்கள் ஆனது நேபாளத்தின் சௌராஹா எனுமிடத்தில் நடைபெற்றது.
- இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோர் சாராத நுழைவு இசைவுச் சீட்டுகளை வழங்கியுள்ளது என்பதோடு இது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த மைல் கல்லை எட்டியுள்ளதைக் குறிக்கிறது.
- ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் ‘குறள் வாரம்’ (திருக்குறள் வாரம்) ஆகக் கொண்டாடப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- வனவிலங்கு வளங்காப்பிற்கு என மகத்தானப் பங்களிப்பினை ஆற்றிய ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்திற்கு, ஒரு புகழ்பெற்ற வனவிலங்கு உயிரியலாளரான மறைந்த AJT ஜான்சிங்கின் பெயரில் ஒரு விருது வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இஸ்ரோ தனது 100வது ஏவுகலத்தின் ஏவுதலை, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ளதையடுத்து குறிப்பிடத்தக்க சாதனையைப் படைக்க உள்ளது.

- மகாராஷ்டிராவானது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட SSI மந்திர மந்த்ரா அறுவை சிகிச்சை எந்திர மனிதன் எனப்படுகின்ற தனது முதல் அறுவை சிகிச்சை எந்திர மனிதனைப் புனேவின் நோபல் மருத்துவமனைகள் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்ற கிங் கோப்பை சர்வதேச பேட்மிண்டன் ஓபன் போட்டியில் இந்தியாவின் பேட்மிண்டன் வீராங்கனையான லக்சயா சென் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.
- மத்தியப் பாதுகாப்பு அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டினை ‘சீர்திருத்த ஆண்டாக’ அறிவித்துள்ளது.
- மத்திய அமைச்சரவையானது, ஒரு மெட்ரிக் டன்னுக்கு 3,500 ரூபாய் என்ற விகிதத்தில் டைஅமோனியம் பாஸ்பேட் (DAP) உரத்திற்கு வழங்கப்படும் ஒற்றை முறைச் சிறப்பு மானியத்தினை 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை நீட்டித்துள்ளது.
- இந்திய எஃகு ஆணையம் நிறுவனம் (SAIL)ஆனது, இந்தியாவின் கிரேட் பிளேஸ் டு வொர்க் இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனத்தினால், தொடர்ந்து இரண்டாவது முறையாக 'வேலை செய்வதற்கான சிறந்த இடமாக' அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ஜவுளித் துறை அமைச்சகம் ஆனது, இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் கைத்தறிப் புடவைகளைக் கொண்டாடும் வகையில் 3வது “விராசத் புடவை திருவிழா 2024” என்ற மாபெரும் நிகழ்வினை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- அமெரிக்காவின் நியூயார்க்கில் நடைபெற்ற உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் R.V.வைஷாலி வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.
- நான்காம் ஆண்டு சென்னை மலர் கண்காட்சியானது செம்மொழிப் பூங்காவில் தொடங்கப் பட்டுள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் (MeitY) கூடுதல் செயலாளரான புவனேஷ் குமார், இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI) தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) பொறுப்பேற்றுள்ளார்.
- தேசியப் புலனாய்வு முகமை (NIA) ஆனது, 2024 ஆம் ஆண்டில் 25 வழக்குகளில் 68 குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதன் மூலம் 100% தண்டனை பெற்றுத் தந்த விகிதத்தை அடைந்துள்ளது.
- கேரள அணியானது, கேரளாவில் நடைபெற்ற முதுநிலை தேசிய ஆடவர் ஹேண்ட்பால் சாம்பியன்ஷிப் போட்டியில் சண்டிகர் அணியினைத் தோற்கடித்து தங்களது முதல் பட்டத்தை வென்றுள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு நிகழ்வு ஆனது, புதுக்கோட்டை மாவட்டத்தின் கந்தர்வகோட்டை தாலுக்காவில் உள்ள தச்சங்குறிச்சி கிராமத்தில் நடத்தப் பட்டது.
- மொத்த விற்பனை விலைக் குறியீடுக்கான (WPI) அடிப்படை ஆண்டினை 2022-23 ஆக மாற்றியமைப்பதற்காக நிதி ஆயோக் அமைப்பின் டாக்டர் ரமேஷ் சந்த் தலைமையில் 18 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது, ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் (EPS) கீழ் வருங்கால வாய்ப்பு நிதி ஓய்வூதியங்களை வழங்கச் செய்வதற்காகப் புதிய மையப்படுத்தப்பட்ட ஓய்வூதிய வழங்கீட்டு முறையை (CPPS) முழு அளவில் செயல்படுத்தி முடித்துள்ளது.

- சோமாட்டோ நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு விரைவு வர்த்தக சேவை வழங்கீட்டு தளமான பிளிங்க்இட், 2000 ரூபாய் தொகையில் 10 நிமிட அவசர கால மருத்துவ ஊர்தி சேவையை அரியானாவின் குருகிராமில் வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச வழித்தடங்களில் விமானங்களில் Wi-Fi (அருகலை) சேவை வழங்கும் முதல் விமான நிறுவனமாக ஏர் இந்தியா மாறியுள்ளது.
- தமிழக முதல்வர் சர் ஜான் மார்ஷல் சிலைக்கான அடிக்கல்லினை நாட்டியதுடன் சிந்து சமவெளி நாகரிக மாநாட்டினையும் தொடங்கி வைத்தார்.
- 1988 ஆம் ஆண்டில் இராஜீவ் காந்தி அரசினால் இறக்குமதி செய்ய தடை செய்யப்பட்ட சல்மான் ருஷ்டியின் சர்ச்சைக்குரிய புத்தகமான "The Satanic Verses" தற்போது டெல்லி புத்தகக் கடைகளில் கிடைக்கப் பெறுகிறது.
- ஜப்பானில் ஹோண்டா மோட்டார் மற்றும் நிசான் மோட்டார் ஆகிய மகிழுந்து நிறுவனங்களானது அவற்றின் சாத்தியமான இணைப்புக்கான ஒரு முழு அளவிலான பேச்சு வார்த்தையைத் தொடங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டு அஜந்தா-எல்லோரா சர்வதேச திரைப்பட விருது விழாவில் (AIFF) மூத்த திரைப்பட இயக்குனர்-எழுத்தாளர் சாய் பரஞ்ச்பே என்பவர் பத்மபானி வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற உள்ளார்.
- தமிழக மாநில அரசானது, ஃபெங்கல் புயலினை கடுமையான இயற்கைப் பேரிடராக அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- தமிழக அரசானது, கோயம்பத்தூர், ஈரோட்டில் உள்ள சத்தியமங்கலம் மற்றும் நீலகிரியின் மிகவும் முக்கியப் பகுதிகளில் ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளால் (NSAID) உள்நாட்டுக் கழுகு இனத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது.
- ஒடிசா அரசானது, வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (SDRF) இழப்பீடு வழங்குவதற்கு ஏதுவாக டிசம்பர் மாதம் பெய்த பருவமழை சாராத மழைப் பொழிவினை இயற்கைப் பேரிடராக அறிவித்து உள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் NH-44 சாலையில் ரம்பன்-பனிஹால் பிரிவில் அமைந்துள்ள 2.35 கிலோ மீட்டர் நீளமுள்ள பெரும் உத்தி சார் ரீதியான பயன்பாடு மிக்க நான்கு வழிச் சாலையின் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- ஆஸ்திரேலிய அணியானது, இந்திய அணிக்கு எதிரான ஐந்து போட்டிகளை உள்ளடக்கிய கிரிக்கெட் டெஸ்ட் போட்டித் தொடரைக் கைப்பற்றியயதையடுத்து, பார்டர் கவாஸ்கர் கோப்பையினை 10 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் வென்றுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள சாஹிபாபாத்தை டெல்லியில் உள்ள புதிய அசோக் நகருடன் இணைக்கும் டெல்லி-மீரட் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பின் (RRTS) 13 கிலோ மீட்டர் நீளப் பிரிவினைப் பிரதமர் திறந்து வைத்தார் (டெல்லி மெட்ரோ ரயில்).
- வியட்நாமின் தலைநகர் ஹனோய் நகரானது, சமீபத்திய வாரங்களாக அடர்ந்த புகைப் பனி மூட்டத்தால் சூழப்பட்டுள்ளதால், உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- மேற்கு வங்காள மாநில அணியானது, இந்தியாவின் தலைசிறந்த மாநில அளவிலான கால்பந்துப் போட்டியான சந்தோஷ் கோப்பை போட்டியில் 33வது முறையாக வெற்றி பெற்றுள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரின் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பினை மிக மேம்படுத்தும் வகையில், ஒரு புதிய ஜம்மு இரயில்வே கோட்டத்தினை (இந்தியாவின் 69வது) பிரதமர் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.

- அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி சபையானது (AICTE), இந்தியாவினை செயற்கை நுண்ணறிவில் உலகளாவிய முதன்மைத்துவம் பெறச் செய்வதற்காக என்று 2025 ஆம் ஆண்டை "செயற்கை நுண்ணறிவு ஆண்டாக" நியமித்துள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் முதன் முறை ஆக நடைபெற உள்ளன.
- மத்திய உள்துறை அமைச்சர் புது டெல்லியில் தீவு மேம்பாட்டு முகமையின் (IDA) 7வது கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- புது டெல்லியின் பாரத மண்டபத்தில் கிராமீன் பாரத் மஹோத்சவ் 2025 நிகழ்வினை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- 18வது பிரவாசி பாரதீய திவாஸ் மாநாடு ஆனது, ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் “Diaspora's Contribution to a Viksit Bharat” என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்று வருகிறது.
- 82வது வருடாந்திர கோல்டன் குளோப் விருது விழாவானது அமெரிக்காவின் கலிபோர்னியாவின் பெவர்லி ஹில்ஸ் எனுமிடத்தில் உள்ள பெவர்லி ஹில்டன் தங்கும் விடுதியில் நடைபெற்றது.
- ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதியில் பிப்ரவரி 05 ஆம் தேதியன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்து உள்ளன.
- தமிழக அரசு ஆனது, காங்கிரஸ் தலைவர் K.V. தங்கபாலுவினை 2024 ஆம் ஆண்டிந பெருந்தலைவர் காமராஜர் விருதிற்குத் தேர்வு செய்துள்ளது.
- தமிழகத்தின் முதல் மிதக்கும் உணவகம் ஆனது சென்னை அருகே உள்ள முட்டுக்காடு உப்பங்கழியில் திறக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசானது, V.நாராயணனை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) புதியத் தலைவராகவும், விண்வெளித் துறையின் செயலாளராகவும் நியமித்து உள்ளது.
- புனேவைச் சேர்ந்த ஒரு புத்தொழில் நிறுவனமான ஆத்ரேயா இன்னோவேஷன்ஸ் என்பது, ஆயுர்வேத பயிற்சியாளர்களுக்காக, நோயாளிகளின் ஆரோக்கியத்தினை 22 அளவுருக்கள் மூலம் கண்காணித்து 10 இந்திய மொழிகளில் அது குறித்த ஒரு முக்கிய அறிக்கையினை உருவாக்கக் கூடிய நாடி தரங்கிணி எனப்படுகின்ற ஒரு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான நாடித்துடிப்பு கண்டறியும் கருவியை உருவாக்கி உள்ளது.
- PMMSY என்ற முன்னெடுப்பின் கீழ், சிக்கிம் மாநிலத்தின் சோரெங் மாவட்டத்தில் இந்தியாவின் முதல் கரிம மீன்வளத் தொகுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.
- BRICS நாடுகளின் தற்போதைய தலைமை பொறுப்பினை வகிக்கும் நாடான பிரேசில், இந்தோனேசிய நாடானது இந்தக் கூட்டமைப்பின் முழு உறுப்பினராக இணைந்து உள்ளதை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- இந்தியாவில் கல்வி பயில விரும்பும் சர்வதேச மாணாக்கர்களுக்காக வேண்டி இந்திய அரசானது 'இணையவழி-மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு' மற்றும் ‘இணையவழி-மாணாக்கர்-X நுழைவு இசைவுச் சீட்டு’ ஆகிய இரண்டு சிறப்பு வகை நுழைவு இசைவுச் சீட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - 'இணையவழி-மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு என்பது இந்தியாவில் தங்கள் கல்வியைத் தொடர விரும்புபவர்களுக்கானது என்பதோடு மட்டுமல்லாமல் இணைய வழி - மாணாக்கர் -X நுழைவு இசைவுச் சீட்டு என்பது இணைய வழியில் மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு வைத்திருப்பவர்களைச் சார்ந்தவர்களுக்கு ஆனது.

- விபத்துகளைத் தடுப்பதற்காக வேண்டி, ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை - பெங்களூரு நெடுஞ்சாலையில் (NH 44) விபத்துகள் அதிகம் நடைபெறும் இடங்களாக அடையாளம் காணப்பட்ட சுமார் 13 இடங்களில் எஃகினால் ஆன தடுப்புகளை நிறுவும் பணியை இந்தியத் தேசிய நெடுஞ் சாலை ஆணையம் (NHAI) தொடங்கியுள்ளது.
- டிட்டகர்ஹ் இரயில் சிஸ்டம்ஸ் நிறுவனமானது, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட அதன் முதல் ஓட்டுநர் இல்லாத இரயில்களை பெங்களூரு மெட்ரோ இரயில் கழகத்தின் (BMRCL) மஞ்சள் வழித்தடத்தில் இயக்குவதற்காக ஒப்படைத்துள்ளன.
- கடலோரக் காவல் படைக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப் பட்ட 'அமுல்யா' மற்றும் 'அக்சய்' எனப்படும் இரண்டு விரைவு ரோந்துக் கப்பல்களின் (FPV) செயல்பாடுகள் சமீபத்தில் தொடங்கப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டு இந்தியக் குடியரசு தின விழாவில் இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ தலைமை விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.
- புது தில்லியில் இராஷ்ட்ரிய ஸ்மிருதி வளாகத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தினை நிறுவுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தியாவின் முதல் கம்பி வடந் தாங்கி இரயில் பாலமான அஞ்சி காட் பாலத்தில், இந்திய இரயில்வே நிர்வாகமானது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு (டவர் வேகன்) வாகனத்தின் சோதனை ஓட்டத்தினை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் தங்கள் முதன்முதலான பாதுகாப்புப் பேச்சுவார்த்தையினை புது டெல்லியில் மேற்கொண்ட நிலையில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் மலேசியாவின் ராஜ நுஷிர்வான் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தைக்குத் தலைமை தாங்கினர்.
- தமிழக சட்டமன்றம் ஆனது, 2025 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் (பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்களின் நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கான குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் உயர்கல்வியில் தரநிலைகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகள்) வரைவு விதிமுறைகளை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று மிகவும் வலியுறுத்தும் விதமாக முன் வைக்கப்பட்ட ஒரு அரசு தீர்மானத்தினை "ஒருமனதாக" நிறைவேற்றியுள்ளது.
- தமிழ்நாடு அரசானது, கோயம்புத்தூரில் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) என்ற ஒரு முறையில் சுமார் 2 மில்லியன் சதுர அடி பரப்பளவில் செயற்கை நுண்ணறிவு (AI) மையத்தினை நிறுவ உள்ளது.
- வன ஆக்கிரமிப்புகள், சட்டவிரோதமான முறையில் மரம் வெட்டும் நடவடிக்கைகள், வேட்டையாடுதல் மற்றும் வனப்பகுதிகளுக்குள் அங்கீகரிக்கப்படாத நுழைவைத் தடுப்பதற்காக கர்நாடக வனத்துறையானது 'கருடாக்சி' எனப்படும் இயங்கலை வழி முதல் தகவல் அறிக்கை பதிவு (FIR) அமைப்பினைத் தொடங்கியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் அருகே தேசிய அனல் மின் கழகத்தின் (NTPC) பசுமை ஆற்றல் உற்பத்தி லிமிடெட் எனப்படுகின்ற இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் மையத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

- தாலிபன் ஆட்சியுடனான முதன்முதல் உயர் மட்ட இருதரப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, துபாயில் (ஐக்கிய அரபு அமீரகம்) இந்திய வெளியுறவுச் செயலாளர் ஆப்கானிஸ்தான் நாட்டின் தற்காலிக வெளியுறவு அமைச்சரைச் சந்தித்தார்.
- பொதுமக்கள் தங்கள் நிலம் தொடர்பான ஆவணங்களின் விவரங்களை கைபேசி மூலம் அறிந்து கொள்வதற்காக "Tamilnilam Geo-Info App" என்ற செயலியைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது, சுய உதவிக் குழுப் பெண்களை நாடு முழுவதும் உள்ள ஒரு ஆலோசனை வழங்கீட்டாளர்கள், சக சுய உதவிக்குழுக்கள் மற்றும் அவர்களின் தயாரிப்புகளை வாங்கும் பிரிவினருடன் மிக நன்கு இணைப்பதன் மூலம் முன்னேற்ற நோக்கமுள்ளப் பெண்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்குவதற்காகவும், அவர்கள் எளிதில் அணுகும் வகையிலுமான மின்மதி 2.0 செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சுந்தரம்-கிளேட்டன் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநரும், சுமார் 70 ஆண்டுகளாக TVS குழுமத்தில் ஓர் முக்கிய நபருமான H. லட்சுமணன் (92) காலமானார்.
- ஜம்மு காஷ்மீரில் 13.14 கி.மீ. நீளமுள்ள Z மோர்ஹ் சுரங்கப் பாதையினைப் பிரதமர் ஆவார்கள் திறந்து வைக்க உள்ளார்.
- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் ஆனது, 22 பட்டியலிடப்பட்ட மொழிகளின் செயல்பாட்டு ஆதரவுடன் கூடிய பன்மொழி e-Shram தளத்தின் செயல்பாட்டினைத் தொடங்கியுள்ளது.
- காடி (Gaddi) நாய் இனமானது, இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நான்காவது பூர்வீக /நாட்டு நாய் இனமாகவும், இமயமலைப் பகுதியினைச் சேர்ந்த முதல் இனமாகவும் மாறியுள்ளது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக (NRI) என்று பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு அதிநவீன சுற்றுலா இரயிலான பிரவாசி பாரதிய விரைவு இரயிலினைப் பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.
- ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி B.N.ஸ்ரீகிருஷ்ணா, அடையாள அட்டை சரி பார்ப்பு மற்றும் தரவுப் பகிர்வுத் தளமான ஈக்வல் நிறுவனத்தின் புதிதாக உருவாக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிற்குத் தலைமை தாங்க உள்ளார்.
- 2026 ஆம் ஆண்டில் காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்றங்களின் சபாநாயகர்கள் மற்றும் அவைத் தலைவர்களின் 28வது மாநாட்டை (CSPOC) இந்தியா நடத்த உள்ளது.
- பெங்களூரு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (BMCRI) ஆனது, தென் இந்தியாவின் முதல் தொற்று நோய் ஆராய்ச்சி மற்றும் நோயறிதல் ஆய்வகத்தினை (IRDL) நிறுவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஒன்றிய இளையோர் விவகாரத் துறையானது, புது டெல்லியில் விக்ஸித் பாரத் இளம் தலைவர்கள் பேச்சுவார்த்தையின் 2வது நாளை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது.
- மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜா சர்வதேச விமான நிலையம் (CSMIA) ஆனது, உலகளவில் புகழ்பெற்ற சர்வதேச விமான நிலைய சபையின் (ACI) மதிப்புமிக்க ஐந்தாம் நிலை அங்கீகாரத்தினைப் பெற்ற இந்தியாவின் முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.
- மலேசிய நாடானது, இந்திய நாட்டினருக்கான நுழைவு இசைவுச் சீட்டு விலக்கினை 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை அதிகாரப்பூர்வமாக நீட்டித்துள்ளது என்ற நிலையில் இதன் மூலம் இந்தியர்கள் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் மலேசிய நாட்டிற்கு 30 நாட்கள் வரையிலான பயணங்களை மேற்கொள்ளலாம்.

- அயலகத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ் மற்றும் நாட்டுப்புற கலைகளைக் கற்பிப்பதற்காக வேண்டி 10 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தினை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
  - இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்ச் சங்கங்களுடன் (சங்கங்கள்) இணைந்து பெரும் பணியாற்றுவதற்காக வேண்டி 100 தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்கள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள்.
- அசாம் மாநிலத்தில் உள்ள ஹோலோங்காபர் கிப்பன் வனவிலங்கு சரணாலயத்தின் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலத்தில் (ESZ) எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்விற்காக துளையிடுதலுக்கு தேசிய வனவிலங்கு வாரியத்தின் (NBWL) நிலைக்குழு அங்கீகரித்து உள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மத்தியச் சுரங்கம் மற்றும் எரிபொருள் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR-CIMFR) ஆனது, இந்தியாவில் முதன்முறையாக மேம்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, நிலச் சமன் எந்திரம் சார்ந்த (டோசர் புஷ்) சுரங்க முறைக்கான முதல் அகழ்வு சோதனையினை சத்தீஸ்கர் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- இந்திய நாடானது, உலகளவில் 10,000 முழு அளவிலான மரபணு மாதிரிகளை அணுகக் கூடிய வசதியினை வழங்கும் வகையிலான தனது சொந்த மரபணு தரவு தொகுப்பு மற்றும் இந்திய உயிரியல் தரவு மைய (IBDC) இணைய தளங்களை அறிமுகப் படுத்த செய்ததன் மூலம் மரபியலில் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.
- SS இன்னோவேஷன்ஸ் நிறுவனமானது, அடுத்த தலைமுறை நுட்பத்திலான மிகவும் மேம்பட்ட SSI Mantra 3 எனும் இயந்திர அறுவைசிகிச்சை கருவியை அறிமுகப் படுத்தி உள்ளது.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது, 2025 ஆம் ஆண்டு மகா கும்பமேளாவிற்காக என்று பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட அகில இந்திய வானொலி கும்பவாணியின் (103.5 MHz) சிறப்பு FM அலைவரிசையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கேரளாவின் கோழிக்கோட்டில் உள்ள கப்பாட் கடற்கரை மற்றும் கண்ணூரில் உள்ள சால் கடற்கரை ஆகியவை டென்மார்க் நாட்டில் உள்ள சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையிலிருந்து (FEE) மதிப்பு மிக்க நீலக் கொடி சான்றிதழைப் பெற்றுள்ளன.
- கல்வி நிறுவன வளாகங்களுக்கு வருகை தரும் அனைத்துப் பார்வையாளர்களையும் கண்காணிக்கவும், நிகழ்நேரக் கண்காணிப்பு அமைப்புகளை நிறுவவும் மற்றும் பார்வையாளர்களின் மேலாண்மை நடைமுறையினை உருவாக்குவதற்குமான புதிய வழிகாட்டுதல்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- சேலம் மாவட்டத்தில் உள்ள தலைவாசலில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிறுவனத்தினை முதலமைச்சர் திறந்து வைத்தார்.
- இந்த ஆண்டு காவல்துறையின் இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவல் துறையின் சிறப்பு துணை ஆய்வாளர்கள் பதவி நிலையில் உள்ள மொத்தம் 3,000 காவல்துறையினர், தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கங்களைப் பெற உள்ளனர்.
- தேவஜித் சைகியா மற்றும் பிரப்தேஜ் சிங் பாட்டியா ஆகியோர் முறையே இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாடு வாரியத்தின் (BCCI) செயலாளராகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

- பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 'சென்னை சங்கமம் - நம்ம ஊர் திருவிழா' எனப் படும் வருடாந்திரக் கலாச்சார விழாவானது சென்னையில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- மனைவி / பெற்றோர் / குழந்தைகளின் இறுதிச் சடங்கில் பங்கேற்கும் கைதியின் ஒரு உரிமையானது இந்திய அரசியலமைப்பின் 25வது சரத்தின் வரம்பிற்குள் வரும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் தலைவர்களின் 25வது தேசிய மாநாடு ஆனது பெங்களூருவில் நடத்தப் பட்டது.
- ஸ்ரீநகர் வானிலை ஆய்வு மையம் ஆனது, உலக வானிலை ஆய்வு அமைப்பினால் (WMO) நூற்றாண்டு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- என்விடியா நிறுவனமானது ஜெட்சன் ஓரின் நானோ சூப்பர் எனப்படும் தனது புதிய சிறிய செயற்கை நுண்ணறிவு (AI) மீத்திறன் கணினியினை மிகச் சமீபத்தில் அறிமுகப் படுத்தியது.
- இந்தியக் கடற்படைக்கான இரண்டாவது பல்நோக்குக் கப்பலான INS உத்கர்ஷ் என்ற கப்பல் சென்னைக்கு அருகிலுள்ள காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- ஆந்திரப் பிரதேச அரசு ஆனது, இந்தியாவின் முதல் தனியார் குறைக்கடத்தி உற்பத்தி மையத்தினை அமைப்பதற்காக என இண்டிசிப் செமிகண்டக்டர் லிமிடெட் நிறுவனம் மற்றும் அதன் ஜப்பான் இணை நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- 6 கிலோ மீட்டர் வரம்பிலான தொலைவிற்குள் உள்வரும் இணை/கூட்டு ஆளில்லா வான்வழி வாகனங்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக வடிவமைக்கப் பட்ட பார்கவாஸ்த்ரா என்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் குறு எறிகணை அமைப்பை இந்தியா மிகவும் வெற்றிகரமாக ஒடிசாவின் கோபால்பூரின் பரிசோதித்து உள்ளது.
- காங்கிரஸ் கட்சியானது, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் நினைவாகப் பெயரிடப்பட்ட, புது டெல்லியில் அமைக்கப்பட்டுள்ள இந்திரா பவன் எனப்படும் புதிய காங்கிரஸ் தலைமையகத்தினைத் திறந்து வைத்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் மூன்றாவது ஏவுதளத்தினை (TLP) நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை தன் ஒப்புதலை அளித்துள்ளது.
- அயர்லாந்து அணிக்கு எதிரான மூன்றாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் ஸ்மிருதி மந்தனா குறைந்த (70) பந்துகளில் சதம் அடித்து சாதனைப் படைத்துள்ளார்.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, உலகிலேயே அதிகக் குதிரைத் திறன் (1200HP) கொண்ட ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில் எஞ்சினை உருவாக்கியுள்ளது.
- இந்தியா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் தங்களது கலாச்சாரம், சுற்றுலா மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒத்துழைப்புகளைக் கொண்டாடுவதற்காக வேண்டி 2026 ஆம் ஆண்டினை 'இரட்டை ஆண்டாக' அறிவித்துள்ளன.
- இந்திய கிராண்ட்மாஸ்டர் அர்ஜுன் எரிகைசி, Chess.com நடத்திய இயர்லி டைட்டில் தியூஸ்டே வீக்லி பிளிட்ஸ் போட்டியில் உலகின் முன்னணிச் சதுரங்க வீரர் மேக்னஸ் கார்ல்சன் மற்றும் உலகளவில் இரண்டாம் இடத்தில் உள்ள ஃபேபியானோ கருவானா ஆகியோரை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

- பல்வேறு பதவித் தரவரிசைகளைச் சேர்ந்த 1,025 பணியாளர்களைக் கொண்ட இரண்டு புதிய படைப்பிரிவுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள மத்தியத் தொழில்துறை பாதுகாப்புப் படையின் (CISF) ஒரு மாபெரும் விரிவாக்கத்திற்கு உள்துறை அமைச்சகம் (MHA) ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய இராணுவம் தனது 77வது இராணுவத் தினத்தை மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள பாம்பே இன்ஜினியர்ஸ் குரூப் மற்றும் சென்டர் அணிவகுப்பு மைதானத்தில் கொண்டாடியது.
    - டெல்லிக்குப் பதிலாக வேறொரு இடத்தில் இராணுவ தின அணிவகுப்பு நடத்தப் படுவது இது மூன்றாவது முறையாகும்.
- சர்ச்சைக்குரிய குறுகிய காலப் பங்கு விற்பனை நடைமுறைகளை வெளிக்கொண்டு வந்த அமெரிக்க நாட்டின் ஹிண்டன்பர்க் நிறுவனமானது அதன் செயல்பாடுகளை நிறுத்த முடிவு செய்துள்ளது.
- தொழில்துறை அமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு மாநிலத்தின் பிரதிநிதிகள் குழுவானது, சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வருடாந்திரக் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளது.
- திரிபுராவில் உள்ள ட்விப்ரா மாணவர் கூட்டமைப்பு (TSF) ஆனது, கோக்போரோக் என்ற மொழிக்கு ரோமானிய எழுத்து வடிவங்களை ஏற்கக் கோரி போராட்டத்தை நடத்தி உள்ளது.
- இந்தியாவின் முன்னணி வாகன கண்காட்சி நிகழ்வான பாரத் மொபிலிட்டி குளோபல் எக்ஸ்போ 2025 ஆனது புது டெல்லியில் நடைபெற்று வருகிறது.
- மத்திய அரசானது, சமீபத்தில் இமாச்சலப் பிரதேசத்தின் மண்டி மாவட்டத்தில் உள்ள ஷிகாரி தேவி வனவிலங்குச் சரணாலயத்தைச் சுற்றி சுற்றுச்சூழல் தாங்குதிறன் மண்டலங்களை (ESZ) நிறுவியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் M. ராஜேஷ்வர் ராவ், முன்னதாக டாக்டர் பத்ராவால் தலைமை தாங்கிய பணவியல் கொள்கைத் துறையின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- தமிழ்நாடு மாநிலக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் (TNSCZMA) ஆனது, முட்டுக்காட்டில் கலைஞர் மாநாட்டு மையத்தினை அமைப்பதற்காக என்று கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அனுமதியை அங்கீகரித்துள்ளது.
- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஆனது, சுவச் சர்வேக்சன் எனப்படும் உலகின் மிகப்பெரிய 9வது நகர்ப்புறத் தூய்மை கணக்கெடுப்பிற்கான (SS) வளத் தொகுப்பினை, புரிந்து கொள்ள மிகவும் எளிமையான, முறை சார்ந்த மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வகையிலான புதிய வடிவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- நோவக் ஜோகோவிச், அதிக கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பங்கேற்றதன் மூலம் ரோஜர் பெடரரின் முந்தைய சாதனையை (429) முறியடித்து டென்னிஸ் போட்டிகளின் வரலாற்றில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல் சாதனையினைப் படைத்துள்ளார்.
- முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா, இந்தியக் கிரிக்கெட் கட்டுபாட்டு வாரியத்தின் குறைதீர்ப்பாளர் மற்றும் நெறிமுறை அதிகாரியாக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- நேபாளத்தில் சுமார் 900 மெகாவாட் அளவு திறன் கொண்ட மேல் மட்ட கர்னாலி நீர்மின் நிலையத்தினை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

மேம்பாட்டு நிறுவனம் லிமிடெட் (IREDA) ஆனது , நேபாள மின்சார ஆணையத்துடன் (NEA) ஒரு கூட்டு துணிகர முன்னெடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- தகவல் தொலைதொடர்பு மேம்பாட்டு மையம் ஆனது, "அலைக்கற்றைப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான அகலப்பட்டை வரிசை அலைக்கற்றை-உணர்வி ASIC-சில்லு" உருவாக்கத்திற்காக வேண்டி ஜம்முவின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்து மண்டியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ஜெர்மனியின் பிராங்பர்ட் நகரில் நடைபெற்று வரும் 2025 ஆம் ஆண்டு சர்வதேச உள்நாட்டு மற்றும் ஒப்பந்த ஜவுளி வர்த்தக கண்காட்சியில் இந்திய அரங்கம் திறக்கப் பட்டுள்ளது.
- உலகின் முதல் 52x52x52 அளவிலான 'மகாமிர்துஞ்சய யந்திரம்' ஆனது உத்தரப் பிரதேச மாநிலத்தின் பிரயாக்ராஜில் உள்ள ஜூன்சி ஹவேலிஸ் என்னுமிடத்தில் உள்ள தபோவன் ஆசிரமத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில் நெகிழிப் பயன்பாடு இல்லாத மகா கும்ப மேளாவிற்காக நெகிழிப் பைகள் மற்றும் ஒரு முறை பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பொருட்களின் பயன்பாட்டினைக் குறைப்பதற்காக "ஒரு தட்டு, ஒரு பை" பிரச்சாரம் தொடங்கப் பட்டு உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவு கொள்கைக்கான பல்வேறு பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் பணிக்காக 16 பேர் கொண்ட ஒரு குழுவை அமைப்பதாக மகாராஷ்டிரா அறிவித்துள்ளது.
- அசாம் மாநில காவல்துறைத் தலைவர் ஞானேந்திர பிரதாப் சிங் மத்திய சேமக் காவல் படையின் (CRPF) தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டில் சுற்றுலா மேற்கொள்ள மிகவும் உகந்த நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிக்கையின் 52 இடங்களின் பட்டியலில் அசாம் 4வது இடத்தைப் பிடித்துள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் உயிரிச் சிதைவுறுதல் சிப்பமிடல் மையம் ஆனது, கழிவுகளற்ற உயிரி நெகிழியினை உருவாக்குவதற்காக ஒரு மையத்தினை நிறுவி வருகிறது.
- இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) பேராசிரியர் உர்பாசி சின்ஹாவிற்கு, பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் 2025 ஆம் ஆண்டு கேட்ஸ்-கேம்பிரிட்ஜ் தாக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை சர்வதேச பனிப்பாறைகள் பெரும் பாதுகாப்பு ஆண்டாகவும், 2025 ஆம் ஆண்டு முதல் மார்ச் 21 ஆம் தேதியினை இனிமேல் ஆண்டுதோறும் உலகப் பனிப்பாறைகள் தினமாகவும் கொண்டாட உள்ளது.
- பெங்களூருவைச் சேர்ந்த ஒரு பெண் வேட்பாளர் ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற இடைத் தேர்தலுக்காக என்று தாக்கல் செய்த வேட்புமனுவினை அவர் இயல்பாக தமிழ்நாட்டில் வசிப்பவர் அல்ல என்று கூறி தேர்தல் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.
- தமிழகத்தைச் சேர்ந்த G. விபூஷா, உத்தரக்காண்ட் மாநிலம் ருத்ராபூரில் நடைபெற்ற கேடட் தேசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று உள்ளார்.
- கர்நாடக கிரிக்கெட் அணியானது, குஜராத் மாநிலதின் வடோதராவின் கோடாம்பி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் விதர்பா அணியினைத் தோற்கடித்து 2024-25 ஆம் ஆண்டு விஜய் ஹசாரே கோப்பையினை வென்றுள்ளது.

- மூத்த இந்திய வெளியுறவுப் பணி அதிகாரி சஞ்சீவ் ரஞ்சன், இந்தியப் பெருங்கடலின் விளிம்போர நாடுகள் சங்கத்தின் (IORA) அடுத்த தலைமைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளானது, வைகை நதியைப் புணரமைப்பதற்காக காலக் கெடுவுடன் கூடிய ஒரு செயல் திட்டத்தினை வகுக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.
- ஏலகிரி-சுவாமிமலை, சென்னை நகருக்கு அருகிலுள்ள குடியம் குகைகள், பரலியார், குற்றாலம்-செண்பகதேவி நீர்வீழ்ச்சி மற்றும் நாகலூர்-சன்னியாசிமலை மலைச் சிகரம் ஆகியவற்றில் உள்ள மலையேற்றப் பாதைகள் தமிழ்நாட்டில் மலையேற்றம் செய்பவர்களிடையே முக்கியமான இடங்களாக உருவெடுத்துள்ளன.
- மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சகம் ஆனது, மேகாலயா மாநிலத்தின் ஷில்லாங்கில் என்னுமிடத்தில், "வடகிழக்கு இந்தியாவில் கால்நடைத் துறையின் முழுமையான மேம்பாட்டிற்கான பேச்சுவார்த்தை" என்ற கருத்துருவின் கீழ் ஒரு மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- பழங்குடியின விவகார அமைச்சகம் (MoTA) ஆனது, பழங்குடியினச் சமூகங்கள் எதிர் கொள்ளும் முக்கியமான சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு சார்ந்த சவால்களை நிவர்த்தி செய்வதற்காக என்று புது டெல்லியில் தேசியப் பழங்குடியின சுகாதார மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் பழவேற்காடு ஏரி மற்றும் நெலபட்டு பறவைகள் சரணாலயம் உள்ளிட்ட இடங்களில் மூன்று நாட்கள் அளவிலான ஃபிளமிங்கோ திருவிழா நடத்தப் பட்டது.
- உத்தரகாண்ட் மாநில அரசு, பொது உரிமையியல் சட்ட (UCC) விதிகளை அங்கீகரித்து, ஜனவரி மாத இறுதிக்குள் அரசாங்கம் சட்டம் இயற்றலுக்கான அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்படும் என்று அறிவித்துள்ளது.
- ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் ராஜ மகேந்திரவரம் என்ற இடத்தில் உள்ள மத்தியப் புகையிலை ஆராய்ச்சி நிறுவனம் (CTRI) ஆனது, அதிகாரப்பூர்வமாக வணிக வேளாண்மைக்கான தேசிய ஆராய்ச்சி நிறுவனம் (NIRCA) என மறுபெயரிடப் பட்டு உள்ளது.
- கீழடியில் ஒரு புதிய திறந்தவெளி அருங்காட்சியகம் மற்றும் கங்கை கொண்ட சோழ புரத்தில் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- அரிட்டாபட்டி பல்லுயிர்ப் பெருக்கத் தளத்திற்கு மிகவும் அருகில் உள்ள தமிழ்நாட்டின் நாயக்கர்பட்டி டங்ஸ்டன் கனிமத் தொகுதியின் ஏலத்தினை ரத்து செய்வதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- நாங்குநேரி, திசையன்விளை மற்றும் சாத்தான் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மழை மறைவுப் பகுதிகளில் 15,000 ஏக்கர் பரப்பிலான நிலங்களுக்கு மிகவும் பயனளிக்கும் வகையிலான தாமிரபரணி – கருமேனியாறு- நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்ட துவக்கத்தினைத் தமிழக முதல்வர் தொடங்கி வைக்க உள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு குடியரசு தினக் கொண்டாட்டத்திற்கான கருத்துரு, 'சுவர்ணிம் பாரத் - விராசத் ஔர் விகாஸ்' (பொன் மயமான இந்தியா- பாரம்பரியம் மற்றும் மேம்பாடு) என்பதாகும்.

- இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ 2025 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவிற்கான தலைமை விருந்தினராக கலந்து கொண்டுள்ளார் என்ற நிலையில் இது இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான அரசு முறை உறவுகளின் 75வது ஆண்டு நிறைவில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.
- இந்திய உயர் ஆணையம் ஆனது, இலங்கையில் உள்ள யாழ்ப்பாணக் கலாச்சார மையத்தினை "சிறந்தத் தமிழ் கவிஞரும் தத்துவஞானியுமான திருவள்ளுவரை நன்கு கௌரவிக்கும் விதமாக" 'திருவள்ளுவர் கலாச்சார மையம்' என்று மறுபெயரிடுவதாக அறிவித்துள்ளது.
- மேற்கு வங்காளத்தின் புருலியா மாவட்டத்தில் உள்ள கர்பஞ்ச்கோட் மலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கிழக்கு இந்தியாவின் முதல் வானியல் ஆய்வகம் ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- உஷா வான்ஸ், அவரது கணவர் J.D.வான்ஸ் அமெரிக்காவின் 50வது துணை அதிபராகப் பதவியேற்றதையடுத்து, முதலாவது இந்திய-அமெரிக்க மற்றும் இந்து மதத்தினைச் சேர்ந்த இரண்டாவது குடிமகள் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- தேசியப் புயல் தயார்நிலை திட்டத்தின் கீழான இந்தியாவின் முதலாவது முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட பேரிடர் முன் எச்சரிக்கை வழங்கீட்டு அமைப்பான 'KaWaCHaM' என்ற நெருக்கடி மற்றும் இடர் மேலாண்மை அமைப்பினை கேரள அரசு அறிமுகப் படுத்தி யுள்ளது.
- மத்திய அரசானது, தற்போது சுமார் 605 ஆக உள்ள புவிசார் குறியீடுகளை 2030 ஆம் ஆண்டிற்குள் 10,000 புவிசார் குறியீடுகளைப் (GI) பெறுவதை இலக்காக நிர்ணயித்து உள்ளது.
- ஜேனட் பெட்ரோ நாசா நிறுவனத்தின் தற்காலிக நிர்வாகியாக நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையடுத்து, இந்த நிறுவனத்திற்குத் தலைமை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையினை அவர் பெற்றுள்ளார்.
- புதுச்சேரியில் பிறந்த தவில் வித்துவான் P. தட்சணாமூர்த்தியும், 2025 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதுகளைப் பெறுபவர்களில் ஒருவர் ஆவார்.
- 1939 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்காக வேண்டி தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த நடராஜன் மற்றும் தாளமுத்து ஆகியோரின் புதுப்பிக்கப்பட்ட நினைவு சின்னத்தினை சென்னையில் மூலக்கொத்தளம் என்னுமிடத்தில் தமிழக முதல்வர் திறந்து வைத்து உள்ளார்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் ஆனது, குஜராத்தின் ஜாம்நகரில் உலகின் மிகப் பெரியத் தரவு மையத்தினைக் கட்டமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவில் மத்திய வங்கி எண்ணிம நாணயத்தினை (CBDC) உருவாக்குவதையும் வெளியிடுவதையும் தடை செய்யும் ஒரு செயலாக்க உத்தரவில் அமெரிக்க அதிபர் கையெழுத்திட்டுள்ளார்.
- மத்தியப் பிரதேச அமைச்சரவையானது, அந்த மாநிலத்தில் உள்ள 17 சமயச் சிறப்பு பெற்ற நகரங்களில் மதுபானத்திற்குத் தடை விதிக்க முடிவு செய்துள்ளது.
- அமெரிக்காவில் பிறப்புரிமை சார்ந்த தன்னிச்சையான குடியுரிமையினை ரத்து செய்யும் செயலாக்க உத்தரவினை "அரசியலமைப்புக்கு விரோதமானது" என்று கூறி அதனை செயல்படுத்துவதை நிறுத்தி வைக்கச் செய்யுமாறு அதன் கூட்டாட்சி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

- பஞ்சாப் கிரிக்கெட் வீரர் அர்ஷ்தீப் சிங், சர்வதேச கிரிக்கெட் சபையின் (ICC) 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்தக் கிரிக்கெட் வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- மெல்போர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் இரண்டு முறை நடப்பு சாம்பியன் பட்டம் பெற்ற பெலாரசின் அரினா சபலென்காவை வீழ்த்தி அமெரிக்காவின் மேடிசன் கீஸ் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தினை வென்று உள்ளார்.
- இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (IWAI) ஆனது, தற்போது உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் அதன் ஆறாவது பிராந்திய அலுவலகத்தினை நிறுவ உள்ளது.
  - தற்போது இது கௌஹாத்தி (அசாம்), பாட்னா (பீகார்), கொச்சி (கேரளா), புவனேஸ்வர் (ஒடிசா) மற்றும் கொல்கத்தா (மேற்கு வங்காளம்) ஆகிய இடங்களில் ஐந்து பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறையானது, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவுப் பிறப்பித்ததைத் தொடர்ந்து, சாம்சங் இந்தியா தொழிலாளர் சங்கத்தினை (SIWU) பதிவு செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று, ஆந்திரப் பிரதேசம் உட்பட தெற்குத் தீபகற்ப இந்தியப் பகுதியில் இருந்து வடகிழக்கு பருவக்காற்று விலகியதாக வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.
- மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள இரண்டு மீனவக் கிராமங்களில் 39 இடங்களில் செயற்கைப் பவளப்பாறைகளை நிறுவுவதற்கு மாநில மீன்வளத் துறை திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் முதன்முதல் வகையான அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மாபெரும் "புத்தாக்க வளாகம்" ஆனது மும்பையில் திறக்கப்பட்டுள்ளது.
- லடாக்கில் உள்ள ஷியோக் மற்றும் நுப்ரா ஆகிய பள்ளத்தாக்குகளுக்கு இடையேயான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தும் வகையில் ஷியோக் நதியின் குறுக்கே முன்னதாகவே கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இரண்டு புதிய பெய்லி பாலங்களை இந்திய இராணுவம் திறந்துள்ளது.
- வக்ஃப் திருத்த மசோதா மீதான பாராளுமன்றக் கூட்டு குழு (JPC) ஆனது, அதன் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட 14 திருத்தங்களை உள்ளடக்கிய ஒருவரைவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஈர நிலங்கள் குறித்த ராம்சர் உடன்படிக்கையின் கீழ் அங்கீகாரம் பெற்ற ஈர நில நகரங்களின் உலகளாவியப் பட்டியலில் இந்தூர் (மத்தியப் பிரதேசம்) மற்றும் உதய்பூர் (ராஜஸ்தான்) ஆகியவை இந்தியாவின் முதல் இரண்டு நகரங்களாக அதில் அங்கீகாரம் பெற்றுள்ளன.
- இந்தியக் கிராண்ட்மாஸ்டர் இனியன் பன்னீர்செல்வம் (தமிழ்நாட்டின் ஈரோட்டினைச் சேர்ந்தவர்), மலேசியாவில் நடைபெற்ற 9வது ஜோகூர் சர்வதேச ஓபன் செஸ் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தனது மகத்தான பங்கேற்பினை வெளிப்படுத்தி உள்ளார்.
- இத்தாலியின் ஜானிக் சின்னர் ஜெர்மனியின் அலெக்ஸ்சாண்டர் வெர்வ் என்பவரை வீழ்த்தி, தொடர்ந்து இரண்டாம் முறையாக ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சாம்பியன் ஷிப் பட்டத்தினையும், ஒட்டு மொத்தமாக 3வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தினையும் வென்றுள்ளார்.

- தூய்மை எரிசக்திக்கு முறையான மற்றும் உள்ளடக்கிய வகையிலான ஒரு பெரும் மாற்றத்திற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும், அதற்கான பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் ஜனவரி 26 ஆம் தேதியன்று சர்வதேச தூய்மை எரிசக்தி தினம் ஆனது அனுசரிக்கப்படுகிறது.
- ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் அமிதவ் கோஷ் 'Wild Fictions' எனப்படும் தனது மிகச் சமீபத்திய புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.
- மதிப்புமிக்க 2025 ஆம் ஆண்டு FIDE சதுரங்க உலகக் கோப்பைப் போட்டியை இந்தியா நடத்த உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு புது டெல்லி உலகப் புத்தகக் கண்காட்சி ஆனது, கல்வித் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியத் தேசியப் புத்தக அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நிதியியல் மற்றும் புதுமை மிக்க பொருளாதார மாதிரிகள் குறித்து விவாதிப்பதற்காக குஜராத் மாநில அரசானது முதலாவது சர்வதேச ஒலிம்பிக் ஆராய்ச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்ய உள்ளது.
- நிதி மோசடியை எதிர்த்துப் போராடுவதற்காக வேண்டி வங்கிகளானது பரிவர்த்தனை சார்ந்த அனைத்து அழைப்புகளுக்கும் '1600xx' என்ற எண் தொடரையும், விளம்பரம் சார்ந்த அழைப்புகளுக்கு '140xx' என்ற ஒரு எண் தொடரையும் பயன்படுத்த வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.
- 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், 'வன்னியர்' இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் நிகழ்த்தப் பட்ட காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 21 "சமூக நீதி ஆர்வலர்கள்" நினைவாக தமிழக முதல்வர் விழுப்புரத்தில் கட்டப்பட்டுள்ள ஒரு மணி மண்டபத்தினை (நினைவுச் சின்னம்) திறந்து வைத்தார்.
- முன்னாள் முதலமைச்சர்கள் C.N. அண்ணாதுரை மற்றும் மு. கருணாநிதி ஆகியோர் தலைமையிலான அமைச்சரவைகளில் பணியாற்றிய கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி எனுமிடத்தில் நிறுவப்பட்ட நினைவுச் சின்னத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- ePlane என்ற நிறுவனம், e200X எனப்படுகின்ற அதன் eVTOL விமானத்திற்கான வகை சார் சான்றிதழுக்குப் பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகத்திடமிருந்து (DGCA) முறையான ஒப்புதலைப் பெற்ற முதல் தனியார் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- திப்ருகர் நகரானது, அசாம் மாநிலத்தின் இரண்டாவது தலைநகராக உருவாக்கப்படும் என்று அசாம் அரசு அறிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் M.K.ஜெயின் தலைமையில் பொது வங்கிகள் மற்றும் சிறு நிதி வங்கிகளுக்கான (SFBs) விண்ணப்பங்களை நல் மதிப்பீடு செய்வதற்காக வேண்டி 5 உறுப்பினர்களைக் கொண்ட புதிய வெளிப்புற ஆலோசனைக் குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதியன்று, உலக சுகாதார அமைப்பினால் மலேரியா பாதிப்பு இல்லாத நாடாகச் சான்றளிக்கப்பட்ட 45வது நாடாக ஜார்ஜியா மாறியுள்ளது.
- சென்னை எழும்பூரில் 'யூனிட்டி' என்று பெயரிடப்படவுள்ள புதிய வணிக வளாகத்தின் கட்டுமானப் பணிக்கான அடிக்கல்லினைத் தமிழக முதல்வர் நாட்டினார்.
- மொத்தம் 69,515.71 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா மற்றும் நன்கு மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டத்தினை 2025-26 ஆம் ஆண்டு வரை தொடர்வதற்கு என்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 10வது ஆசிய பசிபிக் செவி உணர்திறன் அற்றோர்/காது கேளாதோருக்கான விளையாட்டு போட்டிகளில் (2024) தமிழக வீரர்கள் 14 பதக்கங்களை வென்றுள்ளனர்.
- தமிழ்நாடு மாநில வனத்துறையானது, வனப்பகுதிகளுக்கு அருகிலுள்ள வேளாண் நிலங்களில் விவசாயிகளுக்கு பெரும் துன்பத்தினை ஏற்படுத்தும் காட்டுப்பன்றிகளை ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்ட வகையில் கொல்ல அனுமதிக்கும் அரசாணையினை பிறப்பித்துள்ளது.
- 10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவானது (TNIBF) பொள்ளாச்சி நகரத்தில் சமீபத்தில் நடத்தப் பட்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, VISTAAR என்ற வேண்டி திட்டத்திற்காக (வேளாண் வளங்களை நன்கு அணுகுவதற்கான மெய்நிகர் வழியாக ஒருங்கிணைக்கப் பட்ட ஒரு அமைப்பு) வேண்டி வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்துடன் கை கோர்த்துள்ளது.
- மத்திய அரசானது, சட்ட விசாரணை நிறுவனங்களுக்கான சர்வதேச ஒத்துழைப்பைச் சீரமைப்பதற்காக ‘BHARATPOL’ இணைய தளத்தினைத் துவக்கியுள்ளது.
- மத்திய அரசானது, சுமார் 4,400 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு மொத்த ஒதுக்கீட்டுடன், எஃகுத் துறைக்கான புதிய உற்பத்தி ஊக்குவிப்புத் (PLI) திட்டத்தின் அடுத்தச் சுற்றினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- புது டெல்லியில் 8வது தேசிய இயற்கை முறையிலான உற்பத்தித் திட்ட நிகழ்ச்சி ஆனது நடத்தப் பட்டது.
- போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியமானது புது டெல்லியில் "போதைப்பொருள் கடத்தல் மற்றும் தேசியப் பாதுகாப்பு" குறித்த பிராந்திய மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை இணைந்து 'டெவில் ஸ்ட்ரைக்' என்ற கூட்டுப் பயிற்சியினை மேற்கொண்டன.

# தமிழ்நாடு செய்திகள்

## தங்கம் உடைமையில் தமிழகம் முதலிடம்

- உலகத் தங்கச் சபையின் சமீபத்திய அறிக்கையானது தமிழ்நாட்டின் தங்கம் உரிமை பற்றிய தரவுகளை வெளிப்படுத்தியுள்ளது.
- 6,720 டன்களுடன், உலகிலேயே அதிக அளவு தங்கத்தைத் தமிழக மாநிலம் கொண்டு உள்ளது.
- இந்தியாவின் மொத்தமான தங்கக் கையிருப்பில் இந்த மாநிலத்தின் அதிகப்படியான கையிருப்பு 28% ஆகும்.

## இளையோர்களுக்கான வேலைவாய்ப்புக் கொள்கை வரைவு

- தமிழ்நாடு மாநில திட்ட ஆணையமானது (SPC) தமிழ்நாடு வேலைவாய்ப்புக் கொள்கை வரைவினை உருவாக்கியுள்ளது.

- இது தற்போதைய தொழிலாளர் சந்தையில் - படித்த இளையோர்களிடையே நிலவும் அதிக வேலைவாய்ப்பின்மை விகிதங்கள் முதல் திறன்கள் மற்றும் நோக்கங்களுக்கு இடையிலான பொருத்தமின்மை மற்றும் வேலை வாய்ப்புகள் வரையிலான பல முக்கியமானப் பிரச்சினைகளை எடுத்துக் காட்டியுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 34.11 மில்லியனாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த தொழிலாளர் தேவை 2031-32 ஆம் ஆண்டில் 36.5 மில்லியனாக- 2.3 மில்லியன் நிகர அதிகரிப்புடன் இருக்கும்.
- முந்தைய பத்து ஆண்டுகளில் (2011-12 முதல் 2021-22 வரை) வேலைவாய்ப்பில் பதிவான நிகர அதிகரிப்பு 2.12 மில்லியனாக இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் பணியில் உள்ள இளையோர்களின் விகிதம் (20-29 வயது உடையவர்கள்) 50 சதவீதத்திற்கும் கீழ் குறைந்துள்ளது – இது 2004-05 ஆம் ஆண்டில் இருந்த அளவினை விட 15 சதவீதத்திற்கும் அதிகமான சரிவு என்று அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.
- இது தற்போது வெறும் சுமார் 5.9% ஆக உள்ள வேளாண் துறையில் பணிபுரியும் இளையோர்களின் விகிதாச்சாரத்தில் பதிவான கடுமையானச் சரிவின் காரணமாக ஏற்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் இளம் பெண்களின் (20-29 வயது) வேலைவாய்ப்பின்மை விகிதம் 7.4% ஆக அதிகரித்துள்ளது.

## 13 நகராட்சிகள் உருவாக்கம்

- தமிழக அரசானது, எண்ணற்ற உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பதற்காக என முன்மொழியப்பட்டுள்ள வரையறைகளை அறிவித்துள்ளது.
- இதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் அதிக எண்ணிக்கையிலான கிராமப் பஞ்சாயத்துகளை இணைப்பது உள்ளிட்டவை அடங்கும்.
- 13 நகராட்சிகள் மற்றும் 25 நகரப் பஞ்சாயத்துகளை உருவாக்குவது குறித்தும் இந்த முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்தப் புதிய நகராட்சிகளில் கன்னியாகுமரி, அரூர் மற்றும் பெருந்துறை ஆகியவை அடங்கும்.
- ஏற்காடு, காளையார்கோயில், திருமயம் உள்ளிட்ட 25 பேரூராட்சிகளை உருவாக்க அரசு முன்மொழிந்துள்ளது.
- இது தவிர, 29 கிராமப் பஞ்சாயத்துகள், 25 பேரூராட்சிகளுடன் இணைக்கப்பட உள்ளன.

## ஸ்க்ரப் டைபஸ் காய்ச்சலைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள்

- தமிழ்நாடு மாநிலப் பொது சுகாதார இயக்குநரமானது இந்த நோயைக் மிக நன்கு கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்குமான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- மனிதர்கள் எதிர்பாராத விதமாக ஓம்புயிரியாக மாறுகின்ற, பூச்சிகளால் பரவும் இந்த விலங்குவழித் தொற்று நோய் ஆனது பல்வேறு இடங்களில் பதிவாகியுள்ளது.
- இந்த நோயின் அறிகுறிகள் வெளிப்படத் தெரிவதற்கான காலம் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் ஆகும்.

- வேளாண் தொழிலாளர்கள், வெளிப்புறச் செயல்பாடுகள் சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் புதர்கள் நிறைந்தப் பகுதிகளுக்கு அருகில் வசிப்பவர்கள், எலிகள் மற்றும் பூச்சிகளால் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆகியோர் இதனால் பாதிக்கப்படக் கூடிய பெரும் ஆபத்தில் உள்ளனர்.
- பூச்சிக்கொல்லித் திரள் உருவாக்கம், கிராமங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பெரும் புதர்களைச் சுத்தம் செய்தல், கொறித்துண்ணிகளின் (எலிகள்) எண்ணிக்கையைக் குறைத்தல் ஆகியவை இந்த நோயைத் தடுப்பதற்கான கட்டுப்பாடு மற்றும் தடுப்பு முறைகள் ஆகும்.

## முழு அளவிலான சேர்க்கை மாற்ற விகிதம்

- தமிழ்நாடு பள்ளிக் கல்வியானது, தொடக்க நிலையிலிருந்து மேல்நிலைக் கல்வி வரை அதற்கான 100% மாறுதல் விகிதத்தினை எட்டியுள்ளது.
- அதாவது மாநிலத்தில், முதலாம் வகுப்பில் சேரும் அனைத்து மாணவர்களும் எட்டாம் வகுப்பு வரை தொடர்ந்து படித்து வருகின்றனர்.
- 2019 ஆம் ஆண்டில் 99% ஆக இருந்த தொடக்கக் கல்வி நிலை முதல் மேல்நிலை வரையிலான மாறுதல் விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 100% ஆக அதிகரித்தது.
- 2019 ஆம் ஆண்டில் 97.5% ஆக இருந்த பெண் குழந்தைகளிடையே கல்வி நிலை மாறுதல் விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 100% ஆக அதிகரித்துள்ளது.

## கொடும்பாளூரில் அகழாய்வு

- புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தாலுக்காவில் உள்ள கொடும்பாளூரில் உள்ள குடியிருப்புகள் அமைந்துள்ள மேட்டுப் பகுதிகளில் இந்தியத் தொல்லியல் துறையின் திருச்சி வட்டப் பிரிவானது அகழாய்வு மேற்கொண்டுள்ளது.
- திருச்சியில் இருந்து சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ள கொடும்பாளூரில் இந்தியத் தொல்லியல் துறையினால் பரமரிக்கப்படும் பல நினைவுச் சின்னங்கள் உள்ளன.
- சுந்தர சோழன் (கி. பி. 956-973) என அழைக்கப் படும் இரண்டாம் பராந்தகனின் ஒரு அரசியல் கூட்டாளியாக இருந்ததாக நம்பப் படும் இருக்கவேல் தலைவரான பூதி விக்ரம கேசரி அவர்களால் கட்டப்பட்ட மூவர் கோயிலும் இதில் அடங்கும்.
- சங்க இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கொடும்பாளூர் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியத் தொல்லியல் துறையின் 2035 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள அகழ்வாராய்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கையின் (Looking Beyond) கீழ் திருச்சி வட்டத்தில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக அடையாளம் கண்டுள்ள 32 தளங்களில் இதுவும் ஒன்றாகும்.

## சிந்து சமவெளி எழுத்து வடிவங்களைப் பொருள் கண்டுணர்தல்

- சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுத்து வடிவங்களைப் பொருள் கண்டுணர்வதில் வெற்றி பெறும் நிபுணர்கள் அல்லது அமைப்புகளுக்கு 1 மில்லியன் டாலர் பரிசு வழங்கப் படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- சிந்து சமவெளி பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு, புகழ் பெற்ற தொல்லியல் ஆய்வாளரும் பெரும் கல்வெட்டியல் அறிஞருமான ஐராவதம் மகாதேவன் அவர்களின் பெயரில் ஒரு இருக்கையினை அமைப்பதற்கு 2 கோடி ரூபாய் மானியத்தையும் அவர் அறிவித்துள்ளார்.

## விழுப்புரம் அருகே சங்க காலக் குடியிருப்பு கண்டுபிடிப்பு

- விழுப்புரம் அருகே சங்க காலத்தைச் சேர்ந்த மனிதக் குடியிருப்புகள் / வாழ்விடங்கள் இருந்ததற்கான தொல்லியல் சான்றுகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அங்குள்ள அய்யன்கோயில்பட்டு மற்றும் தென்னமாதேவி - ஆனைமேடு ஆகிய இடங்களில் பம்பை ஆற்றின் கரையில் இந்த சான்றுகள் கிடைத்துள்ளன.
- தென்னமாதேவி-ஆனைமேடு கலாச்சார வாழ்விடப் பகுதியானது சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் 500 முதல் 600 மீட்டர் நீளம் வரை நீண்டுள்ளது.
- அய்யன்கோயில்பட்டில் உள்ள இந்த மேட்டுப் பகுதியானது 15 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பரவியுள்ளது.

## அதிக எண்ணிக்கையிலான உழைப்பு நாட்கள்

- மொத்தம் 8.42 லட்சம் உழைப்பு நாட்களுடன், தமிழக மாநிலமானது மிகத் துடிப்பு மிக்க தொழில்துறைகளின் மையமாக, குறிப்பாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தன்னை உறுதியாக நிலை நிறுத்தியுள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களை விஞ்சி, நாட்டிலேயே அதிக உழைப்பு நாட்களை தமிழகம் பெற்றுள்ளது.

## மூன்றாவது UmagineTN2025 மாநாடு

- தமிழ்நாட்டின் முதன்மையான தகவல் தொழில்நுட்ப மாநாடு ஆனது, 'செயற்கை நுண்ணறிவு மற்றும் மாறுதல் மிக்கத் தொழில்நுட்பம் மூலம் சமமான வளர்ச்சியை தூண்டுதல்' என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- இந்த இரண்டு நாட்கள் அளவிலான மாநாடு ஆனது, தொழில்நுட்பமும் புதுமையும் எவ்வாறு பிரகாசமான, சமமான எதிர்காலத்தினை வடிவமைக்க முடியும் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும் ஆராய்வதற்காகவும் வேண்டி உலகின் மிக முன்னணிச் சிந்தனையாளர்களை ஒன்று திரட்டியது.
- UmagineTN என்பது தமிழ்நாடு மாநிலத்தினை, டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான அதன் இலக்கினை நோக்கி நகர்த்தும் ஒரு பரிணமித்து வரும் தளமாக உள்ளது.

## தோடர் பழங்குடியினர் - மோத்வேத் திருவிழா

- தோடர் பழங்குடியினர் புத்தாண்டைக் குறிக்கும் வகையிலான தங்கள் பாரம்பரிய 'மோத்வேத்' திருவிழாவினைக் கொண்டாடினர்.
- தமிழ்நாட்டின் நீலகிரி மலைகளில் வசிக்கும் பழமையான திராவிட இனக்குழுக்களில் இக்குழுவினரும் ஒருவர் ஆவர்.
- தெங்கிஷ் அம்மனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மூன்போ கோவிலில் அவர்களது பிரார்த்தனைகளுடன் இத்திருவிழா கொண்டாட்டம் தொடங்கியது.
- சைவ உணவு முறையினை கடுமையாகப் பின்பற்றும் இந்த தோடர் இன மக்கள் இறைச்சி, மீன் மற்றும் குஞ்சு பொரிக்கக் கூடிய முட்டைகளை உட்கொள்வதைத் தவிர்க்கின்றனர்.

- தோடர் இன மக்கள் பைகி, பெக்கன், குட்டன், கென்னா மற்றும் டோடி எனும் ஐந்து குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.
- இந்தக் குழுவினர் எழுத்து வடிவம் இல்லாத வகையில் தங்களுக்கென ஒரு சொந்த மொழியினைக் கொண்டுள்ளனர்.

## உயிரிழந்த பின்பு தனது உறுப்புகளை தானம் செய்தவர்கள் 2024

- உயிரிழந்த உறுப்பு தானம் செய்பவர்கள் மிக அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும் என்பதோடு தானம் செய்தவர்களில் 50சதவீதத்திற்கும் அதிகமானோர் அரசு மருத்துவமனைகளில் பதிவு செய்துள்ளனர்.
- இத்தகைய உறுப்பு தானம் செய்த மொத்தம் 268 பேர்களில், 146 பேர் (54.48%) அரசு மருத்துவமனைகளில் பதிவு செய்தவர்கள் ஆவர்.
- 2024 ஆம் ஆண்டு மாநிலத்தின் உயிரிழந்த உறுப்பு மாற்றுத் திட்டத்திற்கு அதிகபட்ச எண்ணிக்கைப் பதிவானது- 268 பேர் (218 பேர் ஆண்கள் மற்றும் 50 பேர் பெண்கள்) மற்றும் 1,500 உறுப்புகள்/திசுக்கள் பயன்படுத்தப்பட்டன.
- தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் (TRANSTAN) பல தரவுகளின் படி, தனியார் மருத்துவமனைகளில் 122 பேர் உறுப்பு தானத்திற்காகப் பதிவு செய்துள்ளனர் (45.52%).
- உயிரிழந்த உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 156 ஆகவும், அதைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டில் 178 ஆகவும் உயர்ந்தது.

## பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்கான மசோதாக்கள்

- தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது 2025 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் (தமிழ்நாடு திருத்தம்) மசோதா மற்றும் 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை (திருத்தம்) மசோதா ஆகியவற்றினை நிறைவேற்றியுள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிப்பதும், எண்ணிம மற்றும் மின்னணு தளங்களில் அவர்களைத் துன்புறுத்துபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதும் இந்த மசோதாக்களின் ஒரு நோக்கமாகும்.
- பாலியல் வன்கொடுமை குற்றவாளிக்குத் தற்போதைய 10 ஆண்டுகளுக்குப் பதிலாக, குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்க குற்றவியல் சட்ட மசோதா முன்மொழிகிறது.
- பாலியல் வன்கொடுமை செய்பவர் காவல்துறையில் ஓர் அங்கத்தினராக இருந்தால், குறைந்தபட்ச கடுங்காவல் சிறைத் தண்டனையை 20 ஆண்டுகளாக இரட்டிப்பாக்க உள்ளது.
- பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர் 12 வயதுக்குட்பட்டச் சிறுமியாக இருந்தால், குற்றவாளிக்கு குறைந்தபட்ச தண்டனையாக ஆயுள் தண்டனையும் அதிகபட்சமாக மரண தண்டனையும் விதிக்கப்பட வேண்டும் என்று இந்த மசோதா கோருகிறது.

## உலக அயலகத் தமிழர் தினம் 2025

- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் தேதியானது உலக அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

- தமிழ்ப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தினைக் கொண்டாடும் வகையில், 2025 ஆம் ஆண்டிற்கான உலக அயலகத் தமிழர் தினக் கண்காட்சியை தமிழக அரசு துவக்கி வைத்தது.
- 'எத்திசையும் தமிழணங்கே' என்ற கருத்துருவின் கீழ் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.
- கடந்த ஆண்டு இந்தக் கண்காட்சியானது 'தமிழ் வெல்லும்' என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடத்தப் பட்டது.

## காசி தமிழ் சங்கமம் 3.0

- மூன்றாவது காசி தமிழ்ச் சங்கமம் (KTS) ஆனது தமிழ்நாட்டிற்கும் காசி நகர்த்திற்கும் இடையிலான காலத்தால் அழியாத பிணைப்புகளைக் கொண்டாடுகிறது.
- இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆனது தமிழ்நாட்டிற்கும் காசிக்கும் இடையிலான பழங்காலத் தொடர்புகளைக் கொண்டாடுதல், மறு உறுதிப்படுத்துதல் மற்றும் மீளுருவாக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மூன்றாவது பதிப்புக் கொண்டாட்டமானது, இந்தியாவின் பெரும் மதிப்புமிக்க முனிவர்களில் ஒருவரான அகஸ்தியரின் மரபினை நன்கு கொண்டாடும் விதமாகக் கொண்டாடப் படுகிறது.

## தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

- சென்னை உயர் நீதிமன்றம் ஆனது, இறுதியாக தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தினை (TNCPCR) அமைப்பதற்கான தடைகளை நீக்கியுள்ளது.
- தமிழக மாநில அரசு ஆனது, 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அமைக்கப்பட்ட ஆணையத்தினை மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கலைத்தது.
- 2005 ஆம் ஆண்டு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (CPCR) சட்டத்தின் படி, இந்தக் குழுவானது மூன்று ஆண்டு காலப் பதவிக் காலத்தினைக் கொண்டுள்ளது.

## நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP) முன்னெடுப்பு

- நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி முன்னெடுப்பின் மாவட்ட அளவிலான கூடுகை ஆனது திருச்சியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் போது, பள்ளிக் கல்வித் துறையானது பள்ளிச் சாளரம் எனும் வலைப் பக்கத்தினைத் தொடங்கியுள்ளது.
- அரசுப் பள்ளிகளின் முன்னாள் மாணவர்களை ஒன்றிணைக்கவும், அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு பங்களிப்புகளை வழங்குவதற்கு என அவர்களை ஊக்குவிக்கவும் இந்த வலைப்பக்கமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த NSNOP என்ற பெரும் முன்னெடுப்பு ஆனது திருச்சி பிராந்தியத்தினைச் சேர்ந்த 31 நிறுவனங்களிடமிருந்து சுமார் 141 கோடி ரூபாய் மதிப்பில் நிதி உறுதிப்பாடுகளைப் பெற்றுள்ளது.
- திருச்சி பிராந்தியம் ஆனது திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கரூர் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கியது.

- சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மேற்கொள்ளப்பட்ட இதே போன்ற சில நிகழ்வுகளுக்குப் பிறகு நடைபெற்ற நான்காவது பிராந்திய வகை கூட்டத்தை இந்தக் கூடுகை குறிக்கிறது.

## தமிழ்நாட்டில் இரும்புக் காலம்

- தமிழ்நாடு மாநில அரசானது 'இரும்பின் தொன்மை: தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கப் பெற்ற சமீபத்திய கதிரியக்கக் கால மதிப்பீட்டுத் தேதிகள்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிவகளையில் கிடைக்கப் பெற்ற முதுமக்கள் தாழி மாதிரிகளின் கதிரியக்கக் கால மதிப்பீடு மூலம் இந்தப் புதியக் கண்டுபிடிப்பு ஆனது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இன்றையத் தமிழ்நாட்டில் இரும்பு காலம் என்பது சுமார் கி.மு. 3,345 ஆம் ஆண்டிலேயே தொடங்கியிருக்கலாம் என்று இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.
- இப்புதியக் கண்டுபிடிப்புகளானது தமிழக நிலப்பரப்பில் இரும்பு அறிமுகமான காலம் ஆனது 5,300 ஆண்டுகளுக்குப் பிந்தையது என்று கூறுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது, வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிகம் இருந்த அதே காலக் கட்டத்தில் தென்னிந்தியாவில் இரும்புக் கால நாகரிகம் இருந்ததாகக் கூறுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்புகளுக்கு முன்பு, தமிழ்நாட்டின் முற்கால இரும்புப் பொருட்கள் சுமார் கி.மு. 2172 ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறையில் இருந்து கண்டெடுக்கப்பட்டன.
- கூடுதலாக, மற்றொரு அகழாய்வுத் தளமான தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்ச நல்லூர் பகுதியில், கி.மு. 2517 ஆம் காலத்தைச் சேர்ந்த இரும்புப் பொருட்களுடன் தொடர்புடைய ஒரு நிலக்கரி மாதிரி கண்டெடுக்கப்பட்டது.
- இதனுடன் ஒப்பிடுகையில், கர்நாடகாவில் உள்ள பிரம்மகிரி மற்றும் ஐதராபாத்திற்கு அருகிலுள்ள காச்சிபௌலி போன்ற இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து கிடைக்கப் பட்ட இரும்புப் பொருட்கள் முறையே கி.மு. 2140 மற்றும் கி.மு. 2200 ஆம் காலக் கட்டத்தினைச் சேர்ந்தவையாகக் கூறப்படுகின்றன.
- இதற்கு முன் சுமார் கி.மு. 1,380 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலக்கட்டத்தினைச் சேர்ந்த சான்றுகள் கிடைக்கப் பெற்றதால் ஹிட்டைட் பேரரசு என்பது (நவீன கால துருக்கியில்) இரும்பைப் பயன்படுத்திய முதல் நாகரிகம் என்று நம்பப்பட்டது.

## தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் 2024

- முந்தைய ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் உயிரிழப்பு எண்ணிக்கையானது 273 என்ற அளவு குறைந்துள்ளதால், சாலை விபத்து மூலமான உயிரிழப்புகள் மிக கணிசமாகக் குறைந்துள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 17,526 சாலை விபத்துகளில் 18,347 பேர் உயரிழந்த நிலையில், கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை முறையே 18,074 மற்றும் 17,282 ஆகக் குறைந்துள்ளது.
- மோட்டார் வாகன விதிகளை மீறியதற்காக 80,558 ஒட்டுநர் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டன.

- படுகாயமடைந்த 12,629 பேரை நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் ஆனது, சாலை விபத்து நடந்த 1 மணி நேரத்திற்குள், மருத்துவமனையில் சேர்த்தன.

## இதயம் காப்போம் - முதல் மதிப்பீடு

- 2023 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதியன்று தமிழக மாநில அரசு ஆனது, 'இதயம் காப்போம் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியது.
- இருதய நோயால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்காக என்று ஆரம்ப சுகாதார மையங்கள்/துணை சுகாதார நிலையங்களில் தீவிர இருதயப் பிரச்சினைகளுக்கான விரைவு உள்ளீட்டு மருந்துகளை (ஆஸ்பிரின், குளோபிடோக்ரெல் மற்றும் அட்டோர் வாஸ்டாடின்) வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இங்கு ஆய்வு செய்யப்பட்ட மக்கள்தொகையின் தரவுகள் ஆனது, பெரும்பாலான நோயாளிகள் ஆண்கள் (4,248 பேர்) என்பதைக் காட்டுகிறது.
- ஆய்வுத் தரவில், சுமார் பாதி எண்ணிக்கையிலான நோயாளிகள் சுமார் 45 முதல் 60 வயதுடையவர்கள் (2,137 ஆண்கள் மற்றும் 1,148 பெண்கள்) தெரிய வந்துள்ளது.
- அறிகுறிகள் வாரியாக, சுமார் 76.5% (4,964) பேர் ஆரம்ப சுகாதார மையங்களில் நெஞ்சு வலிக்கு சிகிச்சை பெற வந்துள்ளனர்.
- இதைத் தொடர்ந்து 10.9% பேருக்கு படபடப்பும், 6.6% பேருக்கு கழுத்து / தாடை /கை / தோள்பட்டை வரையிலும் வலி பரவியது.
- 97.7% நோயாளிகள் (6,346) உயிர் பெற்று நலம் பெற்றனர், அதே நேரத்தில் 2.2% (143) பேர் உயிரிழந்தனர் மற்றும் 0.1% (4) பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்தனர்.

## வாசிப்பு மற்றும் எண்கணிதத் திறனில் மீட்சி – தமிழ்நாடு

- 2024 ஆம் ஆண்டு வருடாந்திர கல்வி நிலை அறிக்கையின் (ASER) படி, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு மாநிலத்தில் வாசிப்பு மற்றும் எண்கணிதத்தில் குறிப்பிடத்தக்க மீட்சியானது பதிவாகியுள்ளது.
- இதன்படி அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த மூன்றாம் வகுப்பு பயிலும் குழந்தைகளில் 4.8% குழந்தைகளால் மட்டுமே, 2022 ஆம் ஆண்டில் இரண்டாம் வகுப்பு பாடப் புத்தகத்தினை வாசிக்க முடிந்தது ஆனால் 2024 ஆம் ஆண்டில் இந்த முக்கிய எண்ணிக்கை 12% ஆக அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான நிலைகளுடன் ஒப்பிடும்போது, வாசிப்புத் திறனில் 10.4% அதிகரிப்புடனும், எண்கணித திறனில் 5.8% அதிகரிப்புடனும் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களின் வாசிப்பு மற்றும் எண்கணிதத் திறன்கள் மேம்பட்டுள்ளன.
- மூன்றாம் வகுப்பில் கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில் சுமார் 27.7% பேர் கழித்தல் கணக்குகளையும் மற்றும் ஐந்தாம் வகுப்பில் கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில் சுமார் 20.7% பேர் வகுத்தல் கணக்குகளையும் செய்வதற்கான திறன்களைக் கொண்டிருந்தனர்.
- தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் சேர்க்கையில் சரிவு என்பது பதிவாகியுள்ளது.
- 2014 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சேர்க்கை விகிதமானது, சுமார் 67.2 சதவீதத்தில் இருந்து 75.7% ஆக அதிகரித்திருந்தாலும், 2024 ஆம் ஆண்டில் அது 68.7% ஆகக் குறைந்து உள்ளது.

- தனியார் பள்ளிகளின் சேர்க்கையானது நன்கு அதிகரித்து, 31 சதவீதத்துடன் கோவிட்-19 பெருந்தொற்றிற்கு முந்தைய நிலையை எட்டியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடச் செய்யும் போது அங்கன்வாடிகளில் சேர்க்கையானது ஓரளவு குறைந்துள்ளது.
- தமிழ்நாடு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண் கணிதத் திறன் (FLN) பயிற்சியில், தேசிய சராசரியான 83.2 சதவீதத்தினை விட அதிகமாக தொடர்ந்து முன்னணியில் உள்ளது.
- இதில் சுமார் 90.4% பள்ளிகள் FLN பயிற்சியில் கவனம் செலுத்துவதற்கான உத்தரவைப் பெறுகின்றன.

## 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம்

- 2024 ஆம் ஆண்டில், குழந்தை பிறப்புகளின் எண்ணிக்கையானது சுமார் 8,42,412 என்ற அளவிற்கு மோசமாக குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஒரு ஐந்து ஆண்டுகளில், பிறப்புகளின் எண்ணிக்கை ஆனது ஒன்பது லட்சத்தை விட அதிகமாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் 9,02,306 பிறப்புகள் பதிவானதால், 2024 ஆம் ஆண்டின் குழந்தைப் பிறப்புகளின் எண்ணிக்கை 6.6% குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பிறப்பு விகிதம் ஆனது 10.9 ஆக இருந்த நிலையில் இது முந்தைய ஆண்டு 11.7 ஆக இருந்தது.
- தமிழ்நாட்டின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) ஆனது 1.4 ஆக உள்ள நிலையில் இது 2.1 என்ற மாற்றீடு அளவை விடக் குறைவாகும்.
- பிறப்பு விகிதங்களில் ஏற்படும் சரிவு ஆனது இனப்பெருக்க வயதில் உள்ளவர்களின் எண்ணிக்கை குறைவதற்கும், பிறரைச் சார்ந்திருக்கும் வயதினரின் மக்கள்தொகை அதிகரிப்பதற்கும் வழி வகுக்கும்.

## பொங்கல் காலப் பறவைகள் கணக்கெடுப்பு (PBC) 2025

- பொங்கல் காலப் பறவைகள் கணக்கெடுப்பு ஆனது, Tamil Birders Network மற்றும் இந்தியப் பறவைகள் கணக்கெடுப்பு ஆகிய அமைப்புகளால் ஒருங்கிணைந்து மேற் கொள்ளப் பட்டது.
- இது தமிழ்நாடு மாநிலத்திற்கான வருடாந்திரப் பறவைகள் கண்காணிப்பு செயல்பாடு ஆகும்.
- இது முதன்முதலில் 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது என்பதோடு இந்த ஆண்டு மேற் கொள்ளப் பட்ட கணக்கெடுப்பானது 10வது பறவைகள் கணக்கெடுப்பு என்பதனைக் குறிக்கிறது.
- இது தமிழ்நாட்டின் பறவைகளின் பரவல் மற்றும் மிகுதியின் தகவலை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு பறவைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது (332) என்பதோடு கடந்த ஆண்டு மொத்தம் 345 பறவை இனங்கள் பதிவாகின.

# தேசியச் செய்திகள்

## 17வது மக்களவையில் தனிநபர் உறுப்பினர்களின் மசோதாக்கள்

- 2024 ஆம் ஆண்டு முடிவடைந்த 17வது மக்களவையின் ஐந்தாண்டு காலத்தில், தனிநபர் உறுப்பினர்களின் மசோதாக்களுக்காக 9.08 மணிநேரம் மட்டுமே செலவிடப்பட்டது.
- மாநிலங்களவையானது அதன் செயல்பாட்டுக் காலத்தில் 27.01 மணி நேரம் மட்டுமே அதற்காக செலவிட்டது.
- கீழவை ஆனது சுமார் 16.43 மணிநேரமும், மேலவையானது 20.78 மணிநேரமும் தனி நபர் உறுப்பினர்களின் தீர்மானத்திற்காக செலவிட்டன.
- 18வது மக்களவையின் இரண்டு அமர்வுகளில், 0.15 மணி நேரமும், மாநிலங்கள் அவையின் 0.62 மணிநேரமும், அத்தகைய மசோதாக்களுக்காக செலவிடப்பட்டது.
- கீழவையானது 1.98 மணி நேரமும், மேலவை 2.09 மணி நேரமும் தீர்மானங்களுக்காக செலவிட்டன.
- இது வரை மொத்தம் 14 தனி நபர் மசோதாக்கள் இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப் பட்டு, ஒப்புதல் வாங்கப் பட்டுள்ளன.
- 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு இது வரையில் ஒன்று கூட இரண்டு சபைகளிலும் சேர்த்து நிறைவேற்றப் படவில்லை.

## தேங்காய் எண்ணெய் குறித்து உச்சநீதிமன்றம்

- உச்ச நீதிமன்றமானது, சிறிய குடுவைகளில் உள்ள தேங்காய் எண்ணெயினை வரி விதிப்பு நோக்கங்களுக்காக மட்டுமே சமையல் எண்ணெய் என வகைப்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.
- மேலும், தேங்காய் எண்ணெயைச் சிறியக் குடுவைகளில் அடைத்து, தலைமுடிக்குப் பயன்பாடுகளில் பயன்படுத்தப்படலாம் என்று முத்திரையிடப்பட்டால், அது 1985 ஆம் ஆண்டு மத்திய கலால் வரிச் சட்டத்தின் கீழ் தலைமுடி பயன்பாட்டிற்கான எண்ணெய் என வகைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தி உயுள்ளது.
- தற்போது, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையின் கீழ், சமையல் எண்ணெய்க்கு 5% வரி விதிக்கப்படுகிறது, அதே நேரத்தில் தலைமுடி பயன்பாட்டிற்கான எண்ணெய் மீது 18% வரி விதிக்கப்படுகிறது.
- சமையல் எண்ணெயாகச் சந்தைப்படுத்தப்படும் தேங்காய் எண்ணெயானது 2006 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டத்திற்கு இணங்க வேண்டும், மேலும், சமையல் தர நெகிழி கொள்கலன்களைப் பயன்படுத்த வேண்டும்.

## வேளாண் திட்டங்களின் விரிவாக்கம்

- மத்திய அரசானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று இரண்டு பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களை 2025-26 ஆம் ஆண்டு வரை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து உள்ளது.
- அவை பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (RWBCIS) ஆகியனவாகும்.

- இது முதன்மையான திட்டங்களை செயல்படுத்துவதில் தொழில்நுட்ப பயன்பாட்டு இணைப்பிற்காக தனியாக 824.77 கோடி ரூபாய் நிதியை உருவாக்கியுள்ளது.
- இந்த 824.77 கோடி ரூபாயில் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தனி நிதியை (FIAT) உருவாக்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிதியானது YES-TECH, WINDS என்ற திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.
- தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மகசூல் மதிப்பீட்டு அமைப்பு (YES-TECH) ஆனது, தொழில்நுட்பம் அடிப்படையிலான மகசூல் மதிப்பீடுகளுக்கு என குறைந்தபட்சம் 30% மதிப்புடன் மகசூல் மதிப்பீட்டிற்காக வேண்டி தொலைநிலை உணர்திறன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- வானிலை தகவல் மற்றும் வலையமைப்புத் தரவு அமைப்புகள் (WINDS) ஆனது தொகுதி அளவில் தானியங்கி வானிலை நிலையங்கள் (AWS) மற்றும் பஞ்சாயத்து அளவில் தானியங்கி மழை அளவீட்டு அமைப்புகள் (ARGs) ஆகியவற்றினை அமைக்க திட்டம் இட்டுள்ளது.

## நல்லாட்சிக் குறியீடு 2023

- 2023 ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டினை வெளியிட வேண்டாம் என மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இது நல்லாட்சி வாரத்தில் (டிசம்பர் 19 முதல் டிசம்பர் 25 வரை) வெளியிவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் (UTs) மீது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் தரவரிசையாகும்.
- தற்போது அடுத்த பதிப்பினை (2025) வெளியிட அரசு திட்டமிட்டுள்ளது.
- வேளாண்மை, பொருளாதார நிர்வாகம், பொது சுகாதாரம் மற்றும் குடிமக்களை மையப் படுத்திய நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் 50க்கும் மேற்பட்ட குறிகாட்டிகளை இந்தக் குறியீடு உள்ளடக்கியுள்ளது.
- 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான தரவரிசையில் முறையே தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை பெரிய மாநிலங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

## அணுசக்தி சார் நிறுவல்களின் பரிமாற்றப் பட்டியல் 2025

- முப்பது ஆண்டு கால நடைமுறையின் ஒரு தொடர்ச்சியாக, ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தங்களது அணுமின் நிலையங்களின் பட்டியலைப் பரிமாறிக் கொண்டுள்ளன.
- இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று தங்களது அணுமின் நிலையங்களைத் தாக்குவதைத் தடுக்கின்ற இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் ஆனது, 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று கையெழுத்திடப் பட்டு, 1991 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- ஒவ்வொரு நடப்பு ஆண்டிலும் ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பிடக் கூடிய அணுசக்தி நிறுவல்கள் மற்றும் மையங்கள் குறித்து இரு நாடுகளும் அதன் பரஸ்பர தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த ஒப்பந்தம் என்பது வலியுறுத்துகிறது.

- இரு நாடுகளுக்கிடையிலான இத்தகையப் பட்டியல்களின் ஒரு தொடர்ச்சியான 34வது பரிமாற்றம் இதுவாகும்.

## UDISE+ 2023-24 அறிக்கை

- கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு பிளஸ் (UDISE+) என்ற ஒரு அறிக்கையினை சமீபத்தில் ஒன்றியக் கல்வித் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- 2023-24 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 24.8 கோடி மாணாக்கர் சேர்க்கை பதிவாகி உள்ளது.
- கடந்த ஆண்டுகளை விட 2023-24 ஆம் ஆண்டில் மொத்த மாணாக்கர் சேர்க்கை ஒரு கோடிக்கு மேல் குறைந்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில், பள்ளியில் மாணாக்கர்களின் மொத்தச் சேர்க்கையானது 26.02 கோடியாக இருந்த நிலையில் இது 2019-20 ஆம் ஆண்டில் 1.6% அதிகரித்து சுமார் 26.45 கோடியைத் தாண்டியது.
- இது 42 லட்சத்திற்கும் அதிகமான மாணாக்கர்களின் அதிகரிப்பு ஆகும்.
- 2019-20 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020-21 ஆம் ஆண்டில் மாணாக்கர் சேர்க்கை சற்று குறைந்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021-22 ஆம் ஆண்டில், மொத்தச் சேர்க்கை 0.76% அதிகரித்துள்ளது.
- 2012-13 ஆம் ஆண்டின் தரவுகளின் படி, மொத்தப் பதிவு 26.3 கோடியாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில், 25.18 கோடி மாணாக்கர் சேர்க்கைப் பதிவு செய்யப்பட்டதால், மாணாக்கர் சேர்க்கை குறைந்துள்ளதோடு 2023-24 ஆம் ஆண்டில் மொத்த மாணாக்கர் சேர்க்கை 24.8 கோடியாக குறைந்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 6% (கிட்டத்தட்ட 1.22 கோடி மாணவர்கள்) குறைவாகும்.
- 2018-19 ஆம் ஆண்டில், 13.53 கோடி சிறுவர்கள் சேர்க்கப்பட்டனர், இது 2023-24 ஆம் ஆண்டில் 4.87% குறைந்து 12.87 கோடியாகக் குறைந்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் 12.49 கோடியாக இருந்த சிறுமிகளின் சேர்க்கையானது 2023-24 ஆம் ஆண்டில் 4.48% குறைந்து 11.93 கோடியாகக் குறைந்துள்ளது.
- பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் பதிவுகளில் அதிக வீழ்ச்சியானது பதிவானது.
- தெலுங்கானா, பஞ்சாப், மேற்கு வங்காளம், ஹரியானா, குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, டெல்லி மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில், பதிவு செய்யப்பட்ட மொத்த மாணாக்கர் சேர்க்கையுடன் ஒப்பிடும் போது, கல்வி வழங்கப்படும் பள்ளிகளின் சதவீதம் கணிசமான அளவுக் குறைவாக உள்ளதோடு இது உள்கட்டமைப்பை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதைக் குறிக்கிறது.
- மொத்தச் சேர்க்கையில் சிறுபான்மையினரின் பங்கு சுமார் 20 சதவீதமாக இருந்தது.
- சிறுபான்மையினரில் 79.6 சதவீதம் பேர் முஸ்லீம்கள், 10 சதவீதம் கிறித்தவர்கள், 6.9 சதவீதம் சீக்கியர்கள், 2.2 சதவீதம் பௌத்தர்கள், 1.3 சதவீதம் சமணர்கள், மற்றும் 0.1 சதவீதம் பார்சிக்கள் ஆவர்.

- தேசிய அளவில், UDISE+ அமைப்பில் பதிவு செய்யப்பட்ட மாணாக்கர்களில் சுமார் 26.9 சதவீதம் பேர் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள், 18 சதவீதம் பேர் பட்டியலிடப்பட்டச் சாதியினர், 9.9 சதவீதம் பேர் பட்டியலிடபட்டப் பழங்குடியினர் மற்றும் 45.2 சதவீதம் பேர் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

## பாரதிய வாயுயான் ஆதினியம் 2024

- 09.08.2024 அன்று மக்களவையிலும், 05.12.2024 அன்று மாநிலங்களவையிலும் பாரதிய வாயுயான் ஆதினியம் 2024 நிறைவேற்றப்பட்டது.
- மத்திய அரசின் கூற்றுப்படி, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று, மேற்கூறப் பட்ட சட்டத்தின் விதிகள் அமலுக்கு வந்தது.
- இந்தச் சட்டம் சார்ந்த சீர்திருத்தமானது, தற்காலத் தேவைகள் மற்றும் உலகளாவியத் தரநிலைகளுக்கு ஏற்ப, 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்தினை மீண்டும் மீளியற்றம் செய்வதன் மூலம் இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையை மிகவும் நவீன மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- விமானத்தின் வடிவமைப்பு, உற்பத்தி, பராமரிப்பு, உடைமை, பயன்பாடு, இயக்கம், விற்பனை, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மற்றும் அது தொடர்பான விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான விதிமுறைகளை இந்தச் சட்டம் வழங்குகிறது.
- மிகைப் பணிநீக்கங்களை அகற்றியுள்ள இந்தச் சட்டம் ஆனது, 21 முறை திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்திற்கான ஒரு மாற்றாக அமைந்தது.

## புகையிலை விவசாயிகளின் வருமானம் 2024

- இந்தியாவின் புகையிலை ஏற்றுமதியானது இந்த ஆண்டு 8 சதவீத வளர்ச்சியுடன் சுமார் 13,000 கோடி ரூபாயைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலகில் சீனாவுக்கு அடுத்தபடியாக புகையிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சீனா, பிரேசில் மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக உலகில் பொலிவிலை விர்ஜீனியா (FCV) என்ற புகையிலையை அதிகளவில் உற்பத்தி செய்யும் நான்காவது நாடாக இந்தியா உள்ளது.
- பிரேசிலுக்கு அடுத்தபடியாக செயல்முறையாக்கப் படாத புகையிலையை (அளவின் அடிப்படையில்) அதிகளவில் ஏற்றுமதி செய்யும் இரண்டாவது நாடு இந்தியாவாகும்.
- இதில் புகையிலை விவசாயிகளின் வருமானமும் கடந்த 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளது.

## LEADS 2024

- ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது ஆறாவது LEADS (வெவ்வேறு மாநிலங்களில் தளவாட சேவைகளின் எளிமைத்தன்மை - 2024) என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குத் தேவையான தளவாட சேவைகளின் செயல்திறன் குறியீடாகும்.

- குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, ஒடிசா, தமிழ்நாடு மற்றும் டெல்லி ஆகிய 13 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆனது 2024 ஆம் ஆண்டு தளவாடக் குறியீட்டுப் பட்டியலில் "சாதனை படைத்தவை" பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ஆந்திரப் பிரதேசம், கோவா, பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 16 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தப் பட்டியலில் "வேகமாக முன்னேறி வருபவை" என்ற பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- "சாதனை படைத்தவை" என்ற பிரிவில் உள்ள மற்ற மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் சண்டிகர், ஹரியானா, தெலுங்கானா, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியனவாகும்.
- கேரளா, மேற்கு வங்காளம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் மற்றும் லடாக் ஆகியவை "முயற்சி செய்து வருபவை" பிரிவில் அடங்கும்.
- 2018 ஆம் ஆண்டு உலக வங்கியின் தளவாடச் செயல்திறன் குறியீட்டின் (LPI) மீதான அடிப்படையில் LEADS அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் எண்ணிம உள்கட்டமைப்பு

- சமீபத்திய UDISE பிளஸ் அளித்த தகவலின் படி இந்தியாவில் 57.2% பள்ளிகளில் மட்டுமே செயல்பாட்டு நிலையில் உள்ள கணினிகள் உள்ளன, மேலும் அதில் 53.9% மட்டுமே இணைய அணுகலைக் கொண்டுள்ளன.
- 90% பள்ளிகளில் மின்சாரம் மற்றும் பாலினம் சார்ந்த தனிக் கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் உள்ளன.
- இருப்பினும், கைப்பிடிகளுடன் கூடிய சாய்வுவழிப் பாதைகள் (சுமார் 52.3% பள்ளிகளில் மட்டுமே உள்ளது), கணினிகள் மற்றும் இணைய அணுகல் போன்ற மேம்பட்ட வசதிகள் குறைவாகவே உள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 37 லட்சத்திலிருந்து 24.8 கோடியாக குறைந்ததையடுத்து, மாணாக்கர் சேர்க்கையில் பல மாற்றங்கள் பதிவாகி உள்ளது.
- மாணாக்கர் சேர்க்கைகளில் மாணவர்களின் பங்கு 51.9% மற்றும் மாணவிகளின் பங்கு 48.1% ஆகும்.
- மொத்தச் சேர்க்கை விகிதம் (GER) ஆனது கல்வி நிலைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துகிறது.
- துவக்கப் பள்ளி நிலைக் கல்வியானது 96.5% GER விகிதத்தினைக் கொண்டிருந்தாலும், அடிப்படைக் கல்வி நிலையில் இந்த விகிதம் வெறும் 41.5% ஆக உள்ளது.
- இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வி நிலைகளில் முறையே இந்த விகிதங்கள் 89.5% மற்றும் 66.5% ஆக உள்ளது.
- இடைநிலைப் பள்ளியில் சுமார் 5.2% முதல் மேல்நிலைப் பள்ளியில் 10.9% வரை என உயர் கல்வி நிலைகளிலும் இடை நிற்றல் விகிதம் கடுமையாக உயர்ந்து வருகிறது.
- தக்கவைப்பு விகிதங்களும் இதே போன்ற போக்கினையே கொண்டுள்ளன என்றாலும், துவக்கப் பள்ளி நிலையில் சுமார் 85.4% ஆக இருந்த இந்த விகிதமானது மேல்நிலைக் கல்வியில் வெறும் 45.6% ஆகக் குறைவாகவே உள்ளது.

## ஹோட்டன் மாகாணம்

- இந்திய அரசானது, சீனாவின் ஹோட்டன் மாகாணத்தில் ஹீ'ஆன் மற்றும் ஹெகாங் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டதற்காக சீனாவிற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.
- மாவட்டங்கள் என்று அழைக்கப்படும் இந்தப் பகுதிகளின் அதிகார வரம்பு ஆனது, இந்தியாவின் ஒன்றியப் பிரதேசமான லடாக் பகுதியினையும் உள்ளடக்குகிறது.
- ஹோட்டன் மாகாணம் என்பது சீனாவின் தென்மேற்கு சின்ஜியாங்கில் உள்ள ஒரு நிர்வாகப் பிரிவு ஆகும்.
- முன்னதாக 2017 ஆம் ஆண்டு சீனாவானது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஆறு இடங்களுக்கான 'தரப்படுத்தப்பட்ட' பெயர்களின் ஆரம்பப் பட்டியலை வெளியிட்டது.
- 2021 ஆம் ஆண்டில், 15 இடங்களைக் கொண்ட இரண்டாவது பட்டியலை அந்த நாடானது வெளியிட்டது, என்ற நிலையில் 2023 ஆம் ஆண்டில் 11 கூடுதல் இடங்களின் பெயர்களைக் கொண்ட மற்றொரு பட்டியல் வெளியிடப் பட்டது.

## பிடியாணை பெறத் தகு குற்றங்கள் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- மிகவும் கடுமையான மற்றும் சாதாரண குற்றங்கள் தொடர்பான காவல் துறை விசாரணைகளுக்கான அளவுருக்களை உச்ச நீதிமன்றம் தெளிவுப்படுத்தியுள்ளது.
- நீதிமன்றம் பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றம் மற்றும் பிடியாணை பெறத்தகு குற்றங்களை வேறுபடுத்தியுள்ளது என்பதோடு பிடியாணை பெறத் தகு குற்றங்களுக்கான பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) 167வது பிரிவானது, விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபரை வெவ்வேறு வகையான காவலில் வைக்க நீதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது.
- 167வது பிரிவின் துணைப் பிரிவு (2) ஆனது, காவலில் வைப்பதற்கான நடைமுறையை வகுத்துள்ளதோடு, காவலில் ஒருவரை வைத்திருக்க 15 நாட்கள் வரை என்ற அதிகபட்ச வரம்பினை நிர்ணயித்துள்ளதால் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றங்கள் என்பவை, முன் அனுமதியின்றி அதற்கான விசாரணையைத் தொடங்க காவல்துறைக்கு அனுமதியளிக்கின்றன.
- பிடியாணை பெறத் தகு குற்றங்களுக்கு காவல்துறை நடவடிக்கை எடுப்பதற்கு முன் அதற்கு நீதிபதியின் உத்தரவு அவசியமாகும்.
- தனி மனித உரிமைகள் மற்றும் மாநில அதிகாரங்களுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்கு இந்த வேறுபாடு முக்கியமானதாகும்.

## இந்தியாவில் வருமானச் சமத்துவமின்மைப் போக்குகள் 2023

- இந்தியாவின் கடும் வருமானச் சமத்துவமின்மையானது 2023 ஆம் ஆண்டில் 1950 ஆம் ஆண்டுகளில் இருந்ததை விட அதிகமாக இருந்தது.
- இந்தியாவிற்கான கினி குணகம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 0.410 ஆக இருந்தது என்ற நிலையில் இது 1955 ஆம் ஆண்டில் 0.371 ஆக இருந்தது.
- முன்னதாக, 2021 ஆம் ஆண்டில், பெருந்தொற்றின் பாதகமான தாக்கத்தினால், கினி குணகம் 0.528 ஆக உயர்ந்தது.

- 1955 ஆம் ஆண்டில் சுமார் 3 சதவீதமாக இருந்த 'அடிமட்டத்தில் உள்ள 10 சதவீதக் குடும்பங்களின் வருமானம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 2.38 சதவீதமாகக் குறைந்தது.
- இதற்கிடையில், 'அடிமட்டத்தில் உள்ள 50 சதவீதம்' குடும்பங்களின் பங்கு ஆனது 22 சதவீதத்தில் இருந்து 22.82 சதவீதமாக சற்று உயர்ந்துள்ளது.
- கினி குணகம் என்பது பொருளாதாரத்திற்குள் தனி நபர்கள் அல்லது குடும்பங்களுக்கு இடையேயான வருமானப் பகிர்வு எந்த அளவிற்குச் சமமான நிலையிலிருந்து விலகி உள்ளது என்பதை அளவிடுகிறது.
- 0 என்ற கினி குறியீடுயானது முழுமையானச் சமத்துவத்தினைக் குறிக்கிறது, அதே சமயம் 1 ஆனது முழுமையான சமத்துவமின்மையைக் குறிக்கிறது.
- இதன் அதிக மதிப்பு, அதிக வருமான சமத்துவமின்மையைக் குறிக்கிறது.
- உலக சமத்துவமின்மை தரவுத் தளத்தின்படி, 2023 ஆம் ஆண்டில் தேசிய வருமானத்தில் சுமார் 22.6 சதவீத வருமானத்தினை 'உயர்மட்ட1 சதவீதத்தில் உள்ள நபர்கள்' கொண்டு உள்ளனர்.

## 2023 ஆம் ஆண்டு BNSS சட்டத்தின் 479 வது பிரிவு

- மத்திய அரசானது, 2023 ஆம் ஆண்டு பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா சட்டத்தின் 479வது பிரிவின் விதிகளை அமல்படுத்த செய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு (UT) அறிக்கை அனுப்பியுள்ளது.
- ஒரு குற்றத்தினைப் பற்றிய புலன் விசாரணை அல்லது விசாரணையின் போது, அந்தக் குற்றத்திற்காக வழங்கப்படும் அதிகபட்ச சிறைத் தண்டனைக் காலத்தில் பாதி காலம் வரை காவலில் வைக்கப்பட்டிருந்தால், அவர் நீதிமன்றத்தினால் பிணை ஆணையில் விடுவிக்கப்படலாம் என்று BNSS சட்டத்தின் 479 (1)வது பிரிவு கூறுகிறது.
- ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ், அது மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை போன்ற தண்டனைகளில் ஒன்று வழங்கப்படும் குற்றமாக இருக்கக் கூடாது.
- மேலும், BNSS சட்டத்தின் 479 (3)வது பிரிவானது, இத்தகைய விசாரணைக் கைதிகளை ஜாமீன் அல்லது பிணையில் விடுவிப்பதற்காக வேண்டி சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்வதற்கு வேண்டிய மிக முக்கியப் பொறுப்பினைச் சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்கு வழங்குகிறது.

## பஞ்சாயத்துகளிலிருந்துப் பாராளுமன்றத்திற்கு முன்னெடுப்பு 2.0

- மக்களவை சபாநாயகர் "Panchayat Se Parliament 2.0" என்ற ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பெண் அரசியல் பிரதிநிதிகளுக்கு அரசியலமைப்பு மற்றும் பல்வேறு பாராளுமன்ற நடைமுறைகள் பற்றிய நுண்ணறிவை இது வழங்குகிறது.
- இந்தத் திட்டம் ஆனது 22 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 502 பெண் பிரதிநிதிகளை ஒன்றிணைத்தது.

## சோனோபூய் - இந்தியா மற்றும் அமெரிக்கா

- இந்தியக் கடற்படைக்காக வேண்டி கடலுக்கடியில் உள்ள பரப்புகள் குறித்த முக்கியக் கண்காணிப்பிற்காக (UDA) அமெரிக்க கடலடி ஒலியுணர் மிதவைகளை இணைந்து தயாரிப்பதில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒத்துழைப்பினை மேற் கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளன.
- இது ஆழ்கடல்கள் மற்றும் பெருங்கடல்களில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்காணிக்க அனுமதிக்கும் ஓர் உயர்நிலைத் தொழில்நுட்பமாகும்.
- ஒரு சோனோபூய் என்பது முதன்மையாக கடலடி ஒலியுணர் நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு ஆகிய கடல்சார் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் ஓர் அதிநவீன சாதனமாகும்.
- இது நீர்மூழ்கி எதிர்ப்பு போர் மற்றும் கடல்சார் ஆராய்ச்சியில் ஒரு முக்கியக் கருவி ஆகும்.

## இந்தியாவின் கடற்கரையின் மறு கணக்கீடு

- இந்தியாவின் கடற்கரை 50 ஆண்டுகளுக்குள் சுமார் பாதியளவு விரிவடைந்துள்ளது, அதாவது 1970 ஆம் ஆண்டில் 7,516 கி.மீ. ஆக இருந்த இந்தியக் கடற்கரை 2023-24 ஆம் ஆண்டில் 11,098 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது.
- வங்காளம், குஜராத் மற்றும் கோவா போன்ற சில மாநிலங்களின் கடற்கரைகள் ஆனது விரிவடைந்துள்ள அதே நேரத்தில் புதுச்சேரியின் கடற்கரை 10.4% சுருங்கியுள்ளது.
- குஜராத் மாநில அரசின் கடற்கரை மறு கணக்கீடு ஆனது இந்த அதிகரிப்பிற்கு அதிகப் பங்களிப்பை அளித்துள்ளது என்பதோடு 1970 ஆம் ஆண்டில் 1,214 கி.மீ. ஆக இருந்த அதன் கடற்கரை கடந்த 53 ஆண்டுகளில் கிட்டத்தட்ட இரட்டிப்பாகி 2,340 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது.
- இந்த காலகட்டத்தில் மேற்கு வங்காளத்தின் கடற்கரையில் அதிகபட்ச சதவீதத்திலான அதிகரிப்பு பதிவாகியுள்ளது என்ற நிலையில் 157 கி.மீ. ஆக இருந்த அதன் கடற்கரை 357% அதிகரித்து 721 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது.
- தேசிய அளவில், 1970 ஆம் ஆண்டு தரவுகளுடன் ஒப்பிடும் போது கடற்கரை அதிகரிப்பு 47.6% ஆக உள்ளது.
- குஜராத் மிக நீளமான கடற்கரையைக் கொண்ட மாநிலமாக தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- புதியக் கணக்கெடுப்பின்படி, மறுமதிப்பீடு செய்யப்பட்ட 1,068 கி.மீ. நீளத்துடன் (முன்பு 906 கி.மீ) உடன் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசத்தை (1,053 கி.மீ) முந்தியுள்ளது.
- 30 கி.மீ (5%) அதிகரிப்புடன் மிகக் குறைந்த அதிகரிப்பு பதிவாகியுள்ள ஒரு மாநிலமாக கேரளா உள்ளது.

## இந்திய சாலை உள்கட்டமைப்புகளின் வளர்ச்சி

- இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பு ஆனது கடந்த பத்தாண்டுகளில் 60% வளர்ச்சியடைந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 91,287 ககிலோ மீட்டராக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 146,195 கிலோ மீட்டராக விரிவடைந்துள்ளது.

- இது உலகளவில் இரண்டாவது பெரிய சாலை வலையமைப்பாக அமைகிறது.
- கூடுதலாக, அதிவேக வழித்தடங்களின் தொலைவானது 93 கிலோ மீட்டரிலிருந்து 2,474 கிலோ மீட்டராக அதிகரித்துள்ளன.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி நிலவரப்படி, திட்டமிடப்பட்ட 3,105 கிலோ மீட்டரில் 2,540 கிலோ மீட்டர் பாதை நிறைவடைந்துள்ள நிலையில், பன்னாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

## PMEGP - கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கம்

- பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் (PMEGP) கீழ் ஆதரிக்கப்படும் கிராமப் புற நிறுவனங்கள், வேலைவாய்ப்பை உருவாக்குவதில் தங்கள் நகர்ப்புற சக நிறுவனங்களை விட சிறப்பாக செயல்பட்டுள்ளன.
- இந்தியா முழுவதும் கிராமப்புறங்களில் நிறுவப்பட்ட நுண்/குறு நிறுவனங்கள் ஒரு நிறுவனத்திற்கு 8.19 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.
- இது நகர்ப்புற நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு 8.07 வேலை வாய்ப்புகள் என்ற அளவினை விட அதிகமாகும்.
- இந்த காலக்கட்டத்தில் PMEGP திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மொத்த 80.52 லட்சம் மதிப்பிடப்பட்ட வேலைவாய்ப்புகளில், சுமார் 64.55 லட்சம் வேலைவாய்ப்புகள் கிராமப் புறங்களில் உருவாக்கப்பட்டன.
- உதவி வழங்கப்பட்ட மொத்த 9.86 லட்சம் நிறுவனங்களில், சுமார் 79.89 சதவீதம் மட்டும் கிராமப் புறங்களில் அமைந்திருந்த அதே நேரத்தில் 20.11 சதவீதம் மட்டுமே நகர்ப் புறங்களில் அமைந்திருந்தன.

## INS வாக்சீர் 2025

- INS வாக்சீர் இந்தியக் கடற்படையில் இணைந்து இருக்கிறது.
- சாண்ட் ஃபிஸ் எனப்படும் ஆழ்கடலில் வாழும் ஒரு வேட்டையாடும் மீனின் பெயரைக் கொண்டு பெயரிடப்பட்ட INS வாக்சீர், இந்தியாவின் கடற்பரப்பில் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் உறுதித் தன்மையினைக் குறிக்கிறது.
- இது P75 திட்டத்தின் கீழ் தாக்கி-அழிக்கும் வகை நீர்மூழ்கிக் கப்பலாக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது இந்த திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல்களின் வரிசையில் உருவாக்கப்பட்ட ஆறாவது மற்றும் இறுதி நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- இதில் முதல் நீர்மூழ்கிக் கப்பலான INS கல்வாரி, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் படையில் இணைக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து INS காந்தேரி, INS கரஞ்ச், INS வேலா மற்றும் INS வாகீர் ஆகியவை படையில் இணைக்கப்பட்டன.

## நீதி பெறும் உரிமை குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்து

- நீதி கிடைப்பதை உறுதி செய்யும் உரிமையானது நிபந்தனையற்றது அல்ல என்றும் அது பொறுப்புடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- மனுதாரர் 11 ஆண்டுகளுக்கும் மேலாக தான் பணியிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடுப்பதற்காக, சட்டத் தீர்வு முறைகளை மீண்டும் மீண்டும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்று நீதிமன்றம் கண்டறிந்தது.
- 2016 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வானது, நீதி கிடைப்பதை உறுதி செய்வது என்பது இந்திய அரசியலமைப்பின் 14 மற்றும் 21 ஆகிய சரத்துகளின் கீழ் குடிமக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஒரு அடிப்படை உரிமை என்று கூறியது.

## மௌசம் திட்டம் 2025

- இந்திய நாட்டினை பல்வேறு வானிலை சூழல்களுக்கு ஏற்ற நிலையில் மிகவும் நன்கு தயாரானதாகவும் மற்றும் பருவநிலைக்கு ஏற்ற வகையிலான ஒரு தேசமாக அதனை மாற்றுவதற்காக 'மௌசம் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது.
- இத் திட்டத்தின் தொடக்கமானது, இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) 150வது ஸ்தாபன தினக் கொண்டாட்டங்களை ஒட்டி நடைபெற்றது.
- வானிலை அமைப்புகளில் அதிகரித்து வரும் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தினை எதிர்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முன்னறிவிப்புகளின் துல்லியத் தன்மையினை மேலும் 5 முதல் 10 சதவீதம் வரை அதிகரிக்கிறது என்பதோடு மேலும், பஞ்சாயத்து அமைப்புகள் நிலை வரையில் 10 முதல் 15 நாட்களுக்கு முன்னதாக கணிப்புகளை வழங்குவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

## நாக் Mk-2 சோதனை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட நாக் மார்க்-2 எனப்படும் பீரங்கி எதிர்ப்பு எறிகணையின் கள மதிப்பீட்டுச் சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- நாக் மார்க்-2 என்பது ஒரு முறை அது செலுத்தப்பட்டப் பிறகு எந்த ஒரு தொழில்நுட்ப உதவியும் தேவைப்படாத வகையில் தாக்குதல் திறன் கொண்ட மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பத்திலான ஒரு பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை ஆகும்.
- இந்தத் தொழில்நுட்பம் ஆனது தாக்குதல் மேற்கொள்ளும் தரப்பு அதனை ஏவுவதற்கு முன்னதாக இலக்குகளை அடைவதன் மீது கவனம் செலுத்த உதவுவதால், சிக்கலான போர்க்கள சூழ்நிலைகளில் கூட துல்லியமான தாக்குதல்களை இது உறுதி செய்கிறது.

## 30 GW அளவிலான பசுமை சார் ஆற்றல் 2024

- கடந்த ஆண்டு இந்தியா புதிதாக சுமார் 30 GW (ஜிகாவாட்) அளவிலான புதுப்பிக்கத் தக்க ஆற்றல் உற்பத்தி திறனை நிறுவியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 13.75 GW என்ற அளவுடன் ஒப்பிடும் போது இது 113 சதவீதம் அதிகமாகும்.
- இந்த விரிவாக்கத்துடன், இந்தியாவின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் ஆனது 218 ஜிகாவாட்டினை எட்டியுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனை அடைவதை இந்தியா இலக்காக நிர்ணயித்துள்ளது.

## தேசிய மஞ்சள் வாரியம்

- தெலங்கானாவின் நிஜாமாபாத்தில் தலைமையகத்துடன் கங்கா ரெட்டி என்பவரை அதன் முதல் தலைவராகக் கொண்டு தேசிய மஞ்சள் வாரியம் (NTB) ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- 'தங்க மசாலா பொருள்' என்று அழைக்கப்படுகின்ற மஞ்சள் ஆனது, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், மேகாலயா மற்றும் பிற பகுதிகளில் பரவியுள்ளது.
- உலக வர்த்தகத்தில் 62 சதவீதத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்ட உலகின் மிகப் பெரிய மஞ்சள் உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் ஒரு ஏற்றுமதியாளராக இந்தியா உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில், சுமார் 226.5 மில்லியன் டாலர் மதிப்பிலான 1.62 லட்சம் டன் மஞ்சள் மற்றும் மஞ்சள் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- இதில் NTB வாரியத்திற்கான நிதி மற்றும் உள்கட்டமைப்பை வழங்கும் தலைமைத் துறையாக வர்த்தக அமைச்சகம் விளங்கும்.

## EmpowHER Biz முன்னெடுப்பு

- சமீபத்தில், சில்லறை விற்பனை தொழில் துறையில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக வேண்டி EmpowHER Biz - சப்னோ கி உதான் எனும் ஒரு முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.
- டெல்லி தேசிய தலைநகரப் பிராந்தியம், பஞ்சாப், இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், ஹரியானா, மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத்தைச் சேர்ந்த பெண்களுக்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## மண உறவு உரிமைகள் குறித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- மண உறவு உரிமைகள் மீட்பு மற்றும் பராமரிப்பு உரிமை தொடர்பான வழக்குகள் "முற்றிலும் சுயாதீனமானவை" மற்றும் "நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பற்றவை" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மேலும், மண உறவு உரிமைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு ஆணையை எந்த ஒருவர் பின்பற்ற மறுத்தாலும், கணவர் தனது மனைவிக்கு தொடர்ந்து அவரின் பராமரிப்புத் தொகையை வழங்க வேண்டும்.
- 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் (HMA) 9வது பிரிவானது, மண உறவு உரிமைகளை மீட்டெடுப்பது பற்றிக் கூறுகிறது.

## 106வது சட்டத் திருத்தம் குறித்த உச்ச நீதிதிமன்றத் தீர்ப்பு

- 106வது திருத்தச் சட்டத்தின் விதிகளை எதிர்த்து 2023 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- இந்தச் சட்டமானது மக்களவை, மாநிலச் சட்டமன்றம் மற்றும் டெல்லி சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை வழங்குகிறது.
- இதில் அடிப்படை உரிமைகளை குறிப்பாக சரத்து 14வது சரத்தின் கீழ் கொடுக்கப் பட்டுள்ள உரிமைகளை மீறுவது என்ற கேள்விக்கே இடமில்லை, எனவே, இதற்கு 32வது சரத்தின் அதிகார வரம்பு பொருந்தாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

## திறந்த நிலை சந்தை விற்பனை திட்டக் கொள்கை 2025

- 2024-25 ஆம் ஆண்டிற்கான திறந்த நிலையிலான சந்தை விற்பனைத் திட்ட (உள்நாட்டு) [OMSS(D)] கொள்கையில் மத்திய அரசு ஒரு திருத்தத்தினை அறிவித்துள்ளது.
- இந்தக் கொள்கையானது உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதையும் பல்வேறு பங்குதாரர்களுக்கு அரிசியை மிக திறம்பட விநியோகிப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## iSNR மற்றும் INR konnect

- இரப்பர் வாரியம் ஆனது iSNR மற்றும் INR connect ஆகிய இரண்டு புதியத் திட்டங்களை அறிவித்துள்ளது.
- 1947 ஆம் ஆண்டு ரப்பர் சட்டத்தின் பவள விழாக் கொண்டாட்டங்களின் போது அவை வெளியிடப்பட்டன.
- iSNR (இந்திய நிலையான இயற்கை இரப்பர்) இந்திய இரப்பர் உற்பத்தியை மிகவும் கடுமையான ஐரோப்பிய ஒன்றிய காடழிப்பு ஒழுங்குமுறை (EUDR) தரநிலைகளுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- INR connect என்பது தோட்ட உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக வேண்டி, வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாத இரப்பர் மரங்களை வளர்ப்பவர்களை அதனை வாங்கி பராமரிக்க ஆர்வமுள்ளவர்களுடன் இணைப்பதற்காக என்று வடிவமைக்கப் பட்டுள்ள ஒரு வலையமைப்பு தளமாகும்.
- தாய்லாந்து (1வது) மற்றும் இந்தோனேசியா (2வது) ஆகியவற்றைத் தொடர்ந்து, உலக அளவில் இயற்கை இரப்பரை உற்பத்தி செய்வதில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இயற்கை இரப்பரை மிகவும் அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் இயற்கை இரப்பர் உற்பத்தியில் கேரளா 90 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினை கொண்டுள்ளது.

## PRABHAAV தகவல் அறிக்கை மற்றும் பாரத் புத்தொழில் நிறுவனங்கள் சவால்

- PRABHAAV தகவல் அறிக்கை (தொலைநோக்குடையப் புத்தொழில் நிறுவனங்களின் பெரு முன்னேற்றத்திற்காக ஒரு நெகிழ்திறன் மிக்க மற்றும் துடிப்பான பாரதத்தினை மேம்படுத்துதல்) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது இந்தியாவின் செழிப்பான புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பு மற்றும் 2016 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான அவற்றின் வளர்ச்சிக்கான முழுமையான வழிகாட்டியாகும்.
- PRABHAAV ஒவ்வொரு பிராந்தியத்தின் சாதனைகளையும் பதிவு செய்கிறது.
- பாரத் புத்தொழில் நிறுவனங்கள் சவால் ஆனது பல்வேறு துறைகளில் 75 சவால்களை தொடங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சவாலில், சுமார் 20 தொழில் துறை முன்னணி நிறுவனங்கள் மற்றும் புதுமை படைப்பாளர்கள் வணிக சவால்களை எதிர்கொள்வதற்காக சிந்தனையாளர்களுக்கு சவால் விடுக்கின்றனர்.

## NBM 2.0 & சஞ்சார் சாத்தி செயலி

- மத்திய அரசானது, சஞ்சார் சாத்தி கைபேசி செயலி மற்றும் தேசிய அகலப்பட்டை வரிசை திட்டம் (NBM) 2.0 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சஞ்சார் சாத்தி கைபேசி செயலி என்பது தொலைத்தொடர்பு பாதுகாப்பை மிக நன்கு வலுப்படுத்தவும் குடிமக்களுக்கு அதிகாரமளிப்பதற்காகவும் என வடிவமைக்கப்பட்ட ஒரு பயனருக்கு ஏற்ற வகையிலான தளமாகும்.
- NBM 2.0 ஆனது 1.7 லட்சம் கிராமங்களுக்கு அகலப்பட்டை வரிசை இணைய சேவை இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## AnSI மற்றும் TRI அமைப்புகளின் ஆய்வறிக்கை

- இந்திய மானுடவியல் ஆய்வு மையம் (AnSI) மற்றும் இந்தியப் பழங்குடியின ஆராய்ச்சி நிறுவனங்கள் (TRI-கள்) ஆகியவை, முதன்முறையாக, முந்தைய ஆணையங்கள் ஒரு போதும் வகைப்படுத்தப்படாதவை என்று கருதிய சுமார் 268 சீர் மரபினர், பகுதியளவு நாடோடியாக உள்ள மற்றும் நாடோடியாக உள்ள பழங்குடியினர் பிரிவினை விரிவாக வகைப்படுத்தியுள்ளன.
- இந்த மூன்று ஆண்டு கால ஆய்வு ஆனது நிதி ஆயோக் குழுவினால் தொடங்கப்பட்டது.
- இந்தச் சமூகங்களில் சுமார் 179 சமூகங்களை 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) (மத்திய) பட்டியல்களில் சேர்க்க பரிந்துரைத்துள்ளது.
- இவற்றில் மிக குறைந்தது 85 சமூகங்கள் இந்தப் பட்டியல்களில் புதிய சேர்க்கைகளாக சேர்க்கப்படப் பரிந்துரைக்கப் படுகின்றன.
- இந்தப் புதியச் சேர்க்கைகளில், 46 சமூகங்கள் OBC அந்தஸ்துக்கும், 29 சமூகங்கள் SC அந்தஸ்துக்கும், 10 சமூகங்கள் ST அந்தஸ்துக்கும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.
- அதிக எண்ணிக்கையிலான (19) புதியச் சேர்க்கைகள் உத்தரப் பிரதேச மாநிலத்தின் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் பட்டியலில் தலா எட்டு சமூகங்கள் இதில் சேர்க்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.
- இதில் ஆய்வு செய்யப்பட்ட சுமார் 63 சமூகங்கள் (20 சதவீதத்திற்கும் அதிகமானவை) இனி "கண்டறியப் பட முடியாதவை" என்றும் இந்த ஆய்வு முடிவு செய்தது.

## SCOT திட்டம்

- இந்திய விண்வெளிசார் புத்தொழில் நிறுவனமான திகந்தரா நிறுவனம், விண்வெளி அமைப்புகளைக் கண்காணிக்கும் ஒளிப்படக் கருவி (SCOT) செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியுள்ளது.
- சமீபத்தில் திகந்தரா ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிரான்ஸ்போர்ட்டர்-12 திட்டத்தின் மூலம் தனது SCOT செயற்கைக்கோளை விண்ணில் ஏவியது.
- SCOT திட்டம் என்பது உலகின் முதல் வணிக ரீதியான விண்வெளி சூழ்நிலை குறித்த முன்னுணர்வு (SSA) ஆய்வு செயற்கைக் கோள் ஆகும்.

- இது மிகவும் மேம்படுத்தப் பட்ட செயல்திறனுடன் புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையை (LEO) கண்காணிக்கும்.

## HAL நிறுவனத்தின் போர் விமான ஒருங்கிணைப்பு அமைப்பு

- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது, போர் விமானங்கள் ஒருங்கிணைப்பு அமைப்பு (CATS) - Warrior என்ற முழு அளவிலான சோதனை எஞ்சின் தரை வழி ஓட்டச் சோதனையினை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.
- CATS-Warrior என்பது ஒரு ரேடாருக்குப் புலப்படாத வகையிலான ஒரு ஆளில்லா போர் பயன்பாட்டு விமானம் (UCAV) ஆகும் என்பதோடு இது ஒரு loyal wingman எனக் கூறப் படுகின்ற, மனிதர்கள் கொண்ட போர் விமானங்களுடன் இணைந்து செயல்படும் ஒரு விமானமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது திறன்மிகு வான்வெளி எதிர்ப்பு ஆயுதங்கள் (SAAWs) மற்றும் அடுத்த தலைமுறை நுட்பத்திலான இலக்குகளை மிகவும் நெருக்கமான தொலைவில் தாக்கி அழிக்கும் எறிகணைகள் (NG CCMs) ஆகியவற்றை சுமந்து செல்லக் கூடியது.
- CATS-Hunter என்பது எதிரி நாட்டுப் பிரதேசத்திற்குள் மிக அதிக தொலைவில் ஊடுருவி இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்ட வான்வழியாக ஏவக் கூடிய குறைந்த கண்காணிப்பு அவசியம் கொண்ட சீர்வேக எறிகணை ஆகும்.
- CATS-Infinity வளிமண்டல செயற்கைக்கோள் என்பது சுமார் 70,000 அடி உயரத்தில் நன்கு செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு அதி உயர, சூரிய சக்தியில் இயங்கும் வளி மண்டலச் செயற்கைக்கோள் ஆகும்.

## பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான ஆறு அம்ச திட்டம்

- இந்தியாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் பல பரஸ்பர நன்மைகளை பயக்கும் ஒரு கூட்டாண்மையை உருவாக்குவதற்கான ஆறு பரந்தக் கொள்கைகளை இந்தியா குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.
- இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆனது, வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறையில் இந்திய-ஐரோப்பிய ஒன்றிய உத்தி சார் செயல்பாட்டு நிரலுக்கான புதியக் கட்டமைப்பினை அமைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்தப் பொருளாதார உறவு ஆனது, தற்போது 24 டிரில்லியன் டாலருக்கும் அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ள, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுமார் 2 பில்லியன் மக்களுக்கு இதுவரையில் கிடைக்கப் பெறாத சில மகத்தான வாய்ப்புகளை அறிமுகப் படுத்துகின்ற ஒருங்கிணைந்தச் சந்தையை உருவாக்கும்.

## தேசிய சுகாதாரத் திட்டத்தின் மதிப்பீடு

- 2021-22 ஆம் நிதியாண்டில், NHM திட்டமானது சுமார் 2.69 லட்சம் கூடுதல் சுகாதாரப் பணியாளர்களை ஈடுபடுத்த உதவியது.
- கூடுதலாக, 90,740 சமூக சுகாதார அதிகாரிகள் (CHO) ஈடுபடுத்தப்பட்டனர்.
- NHM திட்டத்தின் கீழ், பேறு காலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது 1990 ஆம் ஆண்டு முதல் 83% குறைந்துள்ளது என்ற நிலையில் இது 45% என்ற உலகளாவியச் சரிவினை விட அதிகமாகும்.

- இதே போல், 2014 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 45 ஆக இருந்த 5 வயதிற்குட்ப்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் (U5MR) ஆனது, 2020 ஆம் ஆண்டில் சுமார் 32 ஆகக் குறைந்தது.
- இறப்பு விகிதக் குறைப்பில் சுமார் 75% பதிவானதையடுத்து, 1990 ஆம் ஆண்டு முதல் இந்த உயிரிழப்பு விகிதம் ஆனது உலகளாவிய அளவில் 60% ஆகக் குறைக்கப்பட்டதை ஒப்பிடும் போது, இது அதிக சரிவைக் காட்டுகிறது.
- 2014 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 39 ஆக இருந்த பச்சிளம் குழந்தை உயிரிழப்பு விகிதம் (IMR) ஆனது, 2020 ஆம் ஆண்டில் 28 ஆகக் குறைந்தது.
- மேலும், 2015 ஆம் ஆண்டில் 2.3 ஆக இருந்த மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) ஆனது, 2020 ஆம் ஆண்டில் 2.0 ஆகக் குறைந்தது.
- 2015 ஆம் ஆண்டில் 1,00,000 பேருக்கு 237 ஆக இருந்த காசநோய் பாதிப்பு ஆனது, 2023 ஆம் ஆண்டில் 195 ஆகக் குறைந்துள்ள அதே காலக் கட்டத்தில் 28 ஆக இருந்த அதனால் ஏற்படும் உயிரிழப்பு விகிதம் ஆனது 22 ஆகக் குறைந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் மலேரியா நோய் பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் முறையே 13.28% மற்றும் 3.22% குறைந்துள்ளன.

## நிதி ஆயோக் அமைப்பின் நிதி வளக் குறியீடு 2025

- நிதி ஆயோக் அமைப்பின் முதல் நிதி வளக் குறியீடு (FHI) அறிக்கையில் பட்டியலிடப் பட்டுள்ள மாநிலங்களில் ஒடிசா, சத்தீஸ்கர், கோவா மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட 'சாதனை மாநிலங்களாக' உருவெடுத்துள்ளன.
- 18 முக்கிய மாநிலங்களின் மதிப்பீட்டினை உள்ளடக்கிய 'நிதி வளக் குறியீடு 2025' என்ற தலைப்பிலான இந்த அறிக்கையானது, 2022-23 ஆம் ஆண்டின் நிலைமை மீதான அடிப்படையில் மாநிலங்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- பஞ்சாப், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகியவை இந்தக் குறியீட்டில் மோசமான செயல் திறன் கொண்ட மாநிலங்களாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.
- ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க பல்வேறு நிதிச் சவால்களை எதிர்கொண்டுள்ளதால், 'முன்னேற்றத்தினை நாடுபவை' பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், கர்நாடகா ஆகியவை 'முன்னணியில் உள்ளவை' பிரிவின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளன.
- தமிழ்நாடு, பீகார், இராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனை 2024

- 2024 ஆம் ஆண்டில் 24.5 ஜிகாவாட் (GW) அளவிலான சூரிய மின்னாற்றல் திறனும் 3.4 GW காற்றாற்றல் திறனும் உற்பத்தி செய்யப் பட்டதுடன் இந்தியா ஒரு சாதனை மைல் கல்லை எட்டியுள்ளது.
- இந்தியாவின் மொத்த புதைபடிவம் சாரா எரிபொருள் சார்ந்த ஆற்றல் உற்பத்தி திறன் ஆனது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி 217.62 GW ஆக உள்ளது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW அளவிலான புதைபடிவம் சாரா எரிபொருள் சார்ந்த ஆற்றல் உற்பத்தி திறன் என்ற ஒரு இலக்கை அடையும் பாதையில் இந்தியா முன்னேறி வருகிறது.
- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில், இந்தியாவில் சூரிய மின் ஆற்றல் உற்பத்தி அமைப்புகளின் நிறுவல்கள் இரு மடங்குக்கும் மேலாக அதிகரித்து உள்ளது என்பதோடு காற்றாலை உற்பத்தி அமைப்புகளின் நிறுவல்கள் சுமார் 21% அதிகரித்துள்ளன.
- இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனில் சூரிய மின்னாற்றல் தற்போது 47% பங்கினைக் கொண்டுள்ளது.
- மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி துறை ஆனது 53% வளர்ச்சியடைந்து, 4.59 GW அளவிலான திறனைப் புதிதாக நிறுவியுள்ளது.
- குஜராத், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மிகப் புதியதாக நிறுவப்பட்ட 3.4 GW காற்றாலை ஆற்றலில் 98% பங்கினை அளிக்கின்றன.

## யூரோட்ரோன் திட்டத்தில் இந்தியா

- இந்திய நாடானது, நடுத்தர உயர வரம்புடைய நீண்ட தாங்குதிறன் கொண்ட தொலை தூரத்தில் இருந்து இயக்கக் கூடிய விமான அமைப்பு (MALE RPAS) அல்லது யூரோட்ரோன் திட்டத்தில் ஒரு பார்வையாளர் நாடாக அதிகாரப் பூர்வமாக இணைந்துள்ளது.
- யூரோட்ரோன் என்பது ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு நாடுகளின் முன்னெடுப்பாகும்.
- யூரோட்ரோன் என்பது தொலைதூரத்தில் இருந்து இயக்கக் கூடிய ஆளில்லா விமான அமைப்பு (RPAS) ஆகும்.

## ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் அமலாக்கம்

- ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கான (UPS) அரசிதழ் அறிவிப்பினை மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- இது பழைய ஓய்வூதியத் திட்டம் (OPS) மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) ஆகியவற்றுக்கு இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது அரசு ஊழியர்களுக்கு ஓய்வுக்குப் பிறகு அவர்களின் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உத்தரவாதமான ஓய்வூதியங்களை வழங்கும்.

## SANJAY போர்க்களக் கண்காணிப்பு அமைப்பு

- மத்திய அரசானது, இந்திய இராணுவத்தில் சேர்க்கப்பட உள்ள 'SANJAY' எனப்படும் ஒரு போர்க்களக் கண்காணிப்பு அமைப்பினை (BSS) கொடியசைத்து தொடங்கி வைத்தது.
- SANJAY என்பது அனைத்து நிலவழி மற்றும் வான்வழி வகையான போர்க்கள உணர்விக் கருவிகளிலிருந்துப் பெறப்படும் உள்ளீடுகளை ஒருங்கிணைக்கும் ஒரு தானியங்கி அமைப்பாகும்.

## இந்தியாவின் முதல் சிறு நிதிநிலையறிக்கை

- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பிப்ரவரி 01 ஆம் தேதியன்று மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையினை தாக்கல் செய்ய உள்ளார் என்ற நிலையில் அவர் தொடர்ந்து தாக்கல் செய்யும் எட்டாவது நிதிநிலை அறிக்கையினை இது குறிக்கிறது.
- 'சிறு நிதிநிலையறிக்கை' என்பது ஒரு சிறப்பு நிதிநிலை அறிக்கை தாக்கலாகும்.
- ஒரு தேர்தல் ஆண்டில், பதவிக் காலம் முடிய உள்ள ஒரு அரசாங்கத்தினால் ஏற்கனவே இடைக்கால நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அதே ஆண்டில் புதியதொரு அரசாங்கம் மற்றொரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க உள்ள சூழலின் போது இது தாக்கல் செய்யப்படுகிறது.
- இந்தியாவின் வரலாற்றில் முதல் சிறு நிதிநிலை அறிக்கையானது 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதியன்று இந்தியாவின் நான்காவது நிதியமைச்சர் T.T. கிருஷ்ணமாச்சாரி அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.
- பத்தாண்டுகளுக்குப் பிறகு, 1965 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது சிறு நிதிநிலை அறிக்கையினையும் அவரே தாக்கல் செய்தார்.

## ASER 2024 அறிக்கை

- வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை (ASER) 2024 ஆனது ஒரு அரசு சாரா நிறுவனமான பிரதாம் அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.
- மிகவும் ஒரு அடிப்படை நிலையிலான எண்கணிதத் திறனில் குறைந்தபட்சம் கழித்தல் கணக்குகளை செய்யக் கூடிய மூன்றாம் வகுப்பு பயிலும் குழந்தைகளின் சதவீதம் 2024 ஆம் ஆண்டில் 33.7% ஆக இருந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 25.9% ஆக இருந்தது.
- இதன்படி இரண்டாம் வகுப்பு மட்டத்திலான பாடத்தை படிக்கக்கூடிய ஐந்தாம் வகுப்பு குழந்தைகளின் சதவீதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 44.8% ஆக இருந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 38.5% ஆக இருந்தது.
- 2018 ஆம் ஆண்டில் 72.4% ஆக இருந்த சராசரி மாணாக்கர் வருகை ஆனது, 2022 ஆம் ஆண்டில் 73% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 75.9% ஆகவும் உயர்ந்துள்ளது.
- அதே நேரத்தில், 2018 ஆம் ஆண்டில் 85.1% ஆக இருந்த சராசரி ஆசிரியர் வருகை ஆனது, 2022 ஆம் ஆண்டில் 86.8% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 87.5% ஆகவும் உயர்ந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 44% ஆக இருந்த சுமார் 60க்கும் குறைவான குழந்தைகள் சேர்க்கை பதிவாகியுள்ள அரசு தொடக்கப் பள்ளிகளின் சதவீதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 52.1% ஆக கணிசமாக அதிகரித்துள்ளது.
- 14 வயது முதல் 16 வயது வரையிலான பதின்ம வயதினரில், 89% பேர் வீட்டில் திறன் பேசிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- 3 வயது குழந்தைகளில், முன்பள்ளி நிறுவனங்களில் சேர்க்கையானது 2018 ஆம் ஆண்டில் 68.1% ஆக இருந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 75.8% ஆக இருந்து 2024 ஆம் ஆண்டில் 77.4% ஆக அதிகரித்துள்ளது.
- 4 வயது குழந்தைகளில், அகில இந்திய முன்பள்ளி நிறுவனச் சேர்க்கை எண்ணிக்கை ஆனது 2018 ஆம் ஆண்டில் 76% ஆக இருந்து, 2022 ஆம் 82% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 83.3% ஆகவும் அதிகரித்துள்ளது.

- 5 வயது குழந்தைகளில், 2018 ஆம் ஆண்டில் 58.5% ஆகவும், 2022 ஆம் ஆண்டில் அது 62.2% ஆகவும் உயர்ந்து, 2024 ஆம் ஆண்டில் சுமார் 71.4% ஆகவும் உயர்ந்துள்ளதுடன் இந்த எண்ணிக்கையிலும் பெரிய அதிகரிப்பு பதிவானது.
- அனைத்து மாநிலங்களிலும், 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட மாணாக்கர்களின் சேர்க்கையானது 2024 ஆம் ஆண்டில் 95 சதவீதத்தினை விட அதிகமாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், அகில இந்திய அளவிலான அரசுப் பள்ளிச் சேர்க்கை ஆனது 66.8% ஆகக் குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் பள்ளியில் சேராத 15 முதல் 16 வயதுடைய குழந்தைகளின் விகிதம் 7.9% ஆக இருந்தது.
- இதன்படி பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ள பெண்களுக்கான கழிப்பறைகள் உள்ள பள்ளிகளின் விகிதம் ஆனது 2018 ஆம் ஆண்டில் 66.4% ஆக இருந்த ஒரு நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 68.4% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 72% ஆகவும் அதிகரித்தது.
- 2024 ஆம் ஆண்டில், 66.2% பள்ளிகளில் விளையாட்டு மைதானம் உள்ள நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 68.9% ஆகவும், 2018 ஆம் ஆண்டில் 66.5% ஆகவும் இருந்தது.

## இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவு

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது ஜனவரி 25 ஆம் தேதியன்று, தேசத்திற்கான தனது 75 ஆண்டு காலச் சேவையினைக் கொண்டாடியது.
- இந்தியா குடியரசாக மாறுவதற்கு ஒரு நாள் முன்னதாக, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது ஒரு நிரந்தர அரசியலமைப்பு அமைப்பாகும்.

## உச்ச நீதிமன்றத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவு

- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது தனது 75 ஆம் ஆண்டு நிறைவினை கொண்டாடுகிறது.
- இந்தியா 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தை கொண்டிருந்தது.

## இந்தியா மற்றும் கேப் டவுன் உடன்படிக்கை

- "2024 ஆம் ஆண்டு விமானம் சார்ந்த ஈடுபாடுகளைப் பாதுகாத்தல் மற்றும் அமலாக்க மசோதாவிற்கு (கேப் டவுன் உடன்படிக்கை மசோதா)" மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டு கேப் டவுன் உடன்படிக்கை (CTC) மசோதாவானது, 2008 ஆம் ஆண்டில் இந்தியா கையெழுத்திட்ட ஒரு ஒப்பந்தத்தினைச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒரு ஒப்பந்தமானது, அடிப்படையில் இந்திய விமான நிறுவனங்கள் வாடகை செலுத்தத் தவறும் போது அல்லது அதிக கடன் சுமை ஏற்படும்போது விமானம் மற்றும் இயந்திரங்கள் போன்ற குத்தகைதாரர்களின் மிக விலையுயர்ந்த சொத்துக்கள் இங்கு சிக்கிக் கொள்ளாது என்பதை உறுதி செய்கிறது.

### தேசிய முக்கியக் கனிமங்கள் திட்டம் 2025

- அரசாங்கம் ஆனது 16,300 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய முக்கியக் கனிமங்கள் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இத்திட்டத்திற்கு ஏழு ஆண்டுகளில் மொத்தம் 34,300 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது பசுமை ஆற்றலில் தன்னிறைவை அடைவதையும், பசுமை ஆற்றல் மாற்றத்தினை நோக்கிய இந்தியாவின் பயணத்தினை விரைவுபடுத்துவதையும் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.
- பொதுத்துறை நிறுவனங்கள் ஆனது இந்த திட்டத்திற்காக என்று 18,000 கோடி ரூபாய் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தாமிரம், லித்தியம், நிக்கல், கோபால்ட் மற்றும் அரிய மண் போன்ற முக்கியக் கனிமங்கள் ஆனது, மிக வேகமாக வளர்ந்து வரும் தூய்மையான எரிசக்தித் தொழில் நுட்பங்களின் வளர்ச்சியைத் தூண்டுவதற்குத் தேவையான மிகவும் அத்தியாவசிய மூலப்பொருட்கள் ஆகும்.
- இது வரை 24 முக்கியக் கனிமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- NCMM ஆனது, கனிம ஆய்வு, சுரங்கம், அதிலிருந்து பிற பலன் தரும் பொருட்களை எடுத்தல், செயலாக்கம் மற்றும் இறுதி விளைப் பொருட்களிலிருந்து பிற பொருட்களை எடுத்தல் உள்ளிட்ட மதிப்புச் சங்கிலியின் அனைத்து நிலைகளையும் உள்ளடக்கும்.
- நாட்டிற்குள்ளும், நாட்டின் கடல் பகுதிகளிலும் முக்கியக் கனிமங்களின் ஆய்வினை இந்தத் திட்டம் தீவிரப்படுத்தும்.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) ஆனது, கடந்த மூன்று ஆண்டுகளில் முக்கியக் கனிமங்களுக்கான 368 ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.
- தற்போது 2024-25 ஆம் ஆண்டில் 195 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2025-26 ஆம் ஆண்டில், பல்வேறு முக்கியக் கனிமங்களுக்கான 227 திட்டங்களை GSI மேற்கொள்ள உள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### டென்மார்க் ஜலசந்தி காட்டராக்ட்

- டென்மார்க் ஜலசந்தி காட்டராக்ட் என்பது 11,500 அடி செங்குத்து உயரத்துடன் பூமியின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது நிலத்தில் உள்ள மிக உயரமான நீர்வீழ்ச்சியான ஏஞ்சல் நீர்வீழ்ச்சியை விட மூன்று மடங்கு உயரமாகும்.
- இந்த மாபெரும் நீர்வீழ்ச்சியானது, நீருக்கடியில் சுமார் 300 மைல்கள் (480 கிலோமீட்டர்) அகலத்தில் பரவியுள்ளது.
- இது கிரீன்லாந்துக்கும் ஐஸ்லாந்திற்கும் இடையே ஆர்க்டிக் கடலுக்கு வெகு அடியில் மறைந்துள்ளது.
- இந்த காட்டராக்ட் நீர்வீழ்ச்சியின் உருவாக்கமானது 17,500 முதல் 11,500 ஆண்டுகளுக்கு முந்தையப் பனி யுகத்திற்கு முந்தையதாகும்.

## சூயஸ் கால்வாயின் புதிய தட விரிவாக்கத்தின் சோதனை ஓட்டம்

- சூயஸ் கால்வாயின் தெற்கு முனைக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 10 கிலோ மீட்டர் தொலைவிலான கால்வாயின் சோதனையினை எகிப்து வெற்றிகரமாக மேற் கொண்டுள்ளது.
- சமீபத்திய விரிவாக்கம் ஆனது கால்வாயின் இருவழிப் பகுதியின் மொத்த நீளத்தினை 72 கிலோ மீட்டரில் இருந்து முதல் 82 கிலோ மீட்டராக நீட்டித்துள்ளது, இதன் மூலம் இந்தக் கால்வாயின் மொத்த நீளம் 193 கிலோ மீட்டராக உள்ளது.
- சோதனை ஓட்டத்தின் போது இரண்டு கப்பல்கள் கால்வாயின் இருவழிப் பகுதியின் புதிய பகுதி வழியாக எந்த அசம்பாவிதமும் இல்லாமல் கடந்து சென்றன.

## சீனாவின் CR450 அதிவேக விரைவு இரயில்

- சீனா தனது அடுத்த தலைமுறை நுட்பத்திலான CR450 எனப்படும் அதிவேக இரயிலின் முன்மாதிரியை வெளியிட்டுள்ளது.
- இது ஒரு மணி நேரத்திற்கு 450 கிலோ மீட்டர் (281 மைல்) சோதனை வேகத்தையும், மணிக்கு 400 கி.மீ (248.5 மைல்) என்ற செயல்பாட்டு வேகத்தையும் எட்டியது.
- இந்தச் சேவை தொடங்கிய பின்பு, இது 2017 ஆம் ஆண்டில் அறிமுகமான சீனாவின் தற்போதைய CR400 மாதிரியினை விஞ்சி, உலகின் மிக அதிவேக விரைவு இரயிலாக மாறலாம்.

## முதியோர் மக்கள்தொகை கொண்ட சமூகம்

- 143 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி, வயதான மக்கள் தொகையின் சவால்களைச் சமாளிப்பதற்கான அதன் தயார்நிலையில் இந்தியா 123வது இடத்தில் இருப்பதால் அதற்கான தயார் நிலையில் இருந்து வெகு தொலைவில் உள்ளது.
- சுவிட்சர்லாந்து மிகவும் தயாராக உள்ள நாடாக முதலிடத்தில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து நார்வே மற்றும் டென்மார்க் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஆசிய நாடுகளில் சிங்கப்பூர் 10வது இடத்தில் உள்ள நிலையில் ஐக்கியப் பேரரசு 14வது இடத்தைப் பிடித்தது, அதைத் தொடர்ந்து ஜப்பான் (15), அமெரிக்கா (24), சீனா (46) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்தியா தற்போது உலகின் இளைய (இளம் தலைமுறை கொண்டவர்) தேசமாக உள்ளதோடு அதன் மக்கள்தொகையில் சுமார் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் 25 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் சுமார்65 சதவீதத்திற்கும் அதிகமானோர் 35 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் உள்ளனர்.
- தற்போது, 'நேச்சர் ஏஜிங்' தளத்தின் படி, இந்தியாவின் அண்டை நாடுகள் ஒப்பீட்டு அளவில் சிறப்பான தயார் நிலையில் உள்ளன என்ற நிலையில் மற்ற நாடுகள் நிலை வங்காள தேசம் (86), இலங்கை (94), நேபாளம் (102), மற்றும் பாகிஸ்தான் (118) ஆகும்.
- உலகளாவிய சுகாதார அணுகலில் இந்தியா 106வது இடத்தில் உள்ளது.

## குவாட் அமைப்பின் 20 ஆம் ஆண்டு நிறைவு

- இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழு ஆனது 'குவாட் (QUAD) ஒத்துழைப்பு அமைப்பின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 31 ஆம் தேதியன்று ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர்.
- 2004 ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமிப் பாதிப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் நான்கு நாடுகளும் ஒன்று சேர்ந்தன என்பதோடு இந்த அமைப்பின் நோக்கம் "இந்தப் பகுதி மக்களுக்குச் சேவை செய்வது ஆகும்.
- ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே இந்தக் கருத்தாக்கத்தினை முன்வைத்ததுடன், 2007 ஆம் ஆண்டில் குவாட் அமைப்பு அதிகாரப்பூர்வமாக உருவானது.
- முதல் அதிகாரப்பூர்வ குவாட் பேச்சுவார்த்தை 2017 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் நடைபெற்றது.
- சீனாவின் நெருக்கடி மற்றும் பிராந்தியப் பதற்றம் காரணமாக 2008 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் இருந்து வெளியேறிய ஆஸ்திரேலியா 2018 ஆம் ஆண்டில் மீண்டும் இணைந்தது.

## சீனாவில் HMPV தொற்று

- சீன நாட்டில் மனித மெட்டாப்நியூமோவைரசினால் (HMPV) ஏற்பட்ட சுவாச நோய்ப் பாதிப்புகள் அதிகமாக பதிவாகி வருகிறது.
- இன்ஃப்ளுயன்ஸா A மற்றும் மைக்கோபிளாஸ்மா நிமோனியா ஆகியவற்றினால் சுவாசத் தொற்றுகள் ஏற்படுகின்றன.
- இது குறிப்பாக 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கிறது.
- 2001 ஆம் ஆண்டில் முதன்முதலில் அங்கு அடையாளம் காணப்பட்ட HMPV ஆனது நிமோவிரிடே வகை குடும்பத்தைச் சேர்ந்தது என்பதோடு இது ஒரு சுவாச ஒத்திசைவு வைரஸுடன் (RSV) நெருங்கிய தொடர்புடையது.

## UN சுற்றுச்சூழல் உச்சி மாநாடுகள் 2024

- நான்கு முக்கிய உச்சிமாநாடுகள் பயன்மிகு விளைவுகளை வழங்கத் தவறிவிட்டதால், பல முக்கியமான சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகள் கடந்த ஆண்டு பல தடைகளை எதிர்கொண்டன.
- இதில் பல்லுயிர்ப் பெருக்கம் குறித்து கொலம்பியாவிலும், பருவ காலநிலை குறித்து அஜர்பைஜானிலும், நிலத் தரமிழப்பு குறித்து சவுதி அரேபியாவிலும், நெகிழி குறித்து தென் கொரியாவிலும் நடைபெற்ற உச்சி மாநாடுகள் அடங்கும்.
- கொலம்பியா பல்லுயிர்ப்பெருக்க வளங்காப்பு பற்றிய பேச்சுவார்த்தைகள், மிகவும் நிலையான நிலப் பயன்பாட்டு நடைமுறைகளுக்கு ஆதரவளிப்பதற்கான நிதியளிப்பு வழிமுறைகளை நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தவறியதால் தடுமாறின.
- அஜர்பைஜானில், கடந்த ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை உச்சி மாநாட்டின் போது மேற்கொள்ளப் பட்ட முடிவான படிம எரிபொருட்களிலிருந்து மாறுவதற்கான உறுதிப்பாடுகளில் நாடுகள் தனித்தனியாகப் பிரிந்தன.

- சவூதி அரேபியாவில், தொழில்மயமான நாடுகள் சட்டப்பூர்வ வறட்சிநிலை குறித்த நெறிமுறையை நிறுவுவதில் ஆப்பிரிக்க நாடுகளுடன் மோதலில் ஈடுபட்டன.
- தென் கொரியாவில் நெகிழி மாசுபாடு குறித்த பேச்சுவார்த்தைகள், நாடுகளிடையே குறிப்பிடத் தக்க பிளவை ஏற்படுத்தின.

## ஜஸ்டின் ட்ரூடோ ராஜினாமா

- ஜஸ்டின் ட்ரூடோ தனது கனடிய நாட்டின் சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டதோடு, கனடாவின் பிரதமராக தனது ஒன்பது ஆண்டு பதவிக் காலத்தினையும் நிறைவு செய்துள்ளார்.
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டாட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற இவர் அந்த ஆண்டின் நவம்பர் 04 ஆம் தேதியன்று பதவி ஏற்றார்.
- கனடாவின் வரலாற்றில் இரண்டாவது இளம் பிரதமர் ஆனார்.
- இவர் கனடாவின் 23வது பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர் பியர் எலியட் ட்ரூடோவின் மகன் ஆவார்.

## திபெத்-நேபாள நிலநடுக்கம் 2025

- நேபாள எல்லையை ஒட்டிய திபெத் பகுதியில் 7.1 ரிக்டர் அளவிலான ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது.
- இந்த நிலநடுக்கம் ஆனது, லாசா பகுதியில் - அதிகளவில் கண்டத் தட்டு அழுத்தத்தின் கீழ் உள்ள பகுதியில் - ஏற்பட்ட பிளவினால் தூண்டப்பட்டதாகும்.
- இந்திய மற்றும் யூரேசிய கண்டத் தட்டுகளின் தொடர்ச்சியான மோதலின் காரணமாக இந்தப் பகுதி நில அதிர்வு நடவடிக்கைகள் அதிகம் ஏற்படும் பகுதியாக உள்ளது.

## அமெரிக்காவில் துருவ சுழல் காற்று மற்றும் குளிர்கால புயல்கள் 2025

- துருவச் சுழல் விரிவடைவதால் மிக கடுமையான குளிர்காலப் புயல்களை அமெரிக்கா எதிர்கொண்டு வருகிறது.
- துருவச் சுழல் ஆனது, முதன்மையாக வடக்கு அரைக் கோளத்தின் மைய அட்சரேகை முதல் உயர் அட்சரேகைகளில் அமைந்துள்ள நாடுகளை பாதிக்கிறது.
- துருவச் சுழல் ஆனது, சுமார் 155mph (250km/h) என்ற அளவு காற்றின் வேகத்துடன் வட துருவத்தைச் சுற்றி இடஞ்சுழி திசையில் சுழல்கிறது.
- அடிவளிமண்டலம் சார்ந்தது மற்றும் படையடுக்கு மண்டலம் சார்ந்தது என இரண்டு வகையான துருவ சுழல்கள் உள்ளன.
- அடிவளிமண்டலம் சார்ந்த துருவச் சுழல் ஆனது, பெரும்பாலான வானிலை நிகழ்வுகள் நிகழும் வளிமண்டலத்தின் தாழ் அடுக்கில் ஏற்படுகின்றன.
- இது மேற்பரப்பில் இருந்து சுமார் 10 கிலோ மீட்டர் முதல் 15 கிலோ மீட்டர் வரை நீண்டு உள்ளது.
- இந்தச் சுழல் ஆனது வடக்கு அட்சரேகைகள் முழுவதுமுள்ள பகுதிகளில் மிதமான ஒரு வானிலை சூழலை உருவாக்குகிறது.

- படையடுக்கு மண்டலத் துருவச் சுழல் ஆனது 15 கிலோ மீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் உயரத்தில் ஏற்படுகிறது.
- அடிவளிமண்டல துருவச் சுழல் போலல்லாமல், படையடுக்கு மண்டல துருவச் சுழல்கள் கோடை காலத்தில் மறைந்து இலையுதிர் காலத்தில் மிகவும் வலிமையான அளவில் தோன்றுகின்றன.

## நியூயார்க் நகர நெரிசல் விலை நிர்ணய முன்னெடுப்பு

- நியூயார்க் நகரம் ஆனது அதிகாரப்பூர்வமாக கடும் நெரிசல் விலை/ அதிகப்படியான போக்குவரத்து காரணமான கூடுதல் விலை நிர்ணய முறையை செயல்படுத்தி, இந்த நடவடிக்கையில் அமெரிக்க பெருநகரப் பகுதிகளில் அதன் முன்னோடியாக மாறியது.
- இது மன்ஹாட்டனின் நியமிக்கப்பட்ட மண்டலத்திற்குள் நுழையும் பெரும்பாலான ஓட்டுநர்கள் 9 டாலர் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது.
- உலகின் மிகவும் மோசமான போக்குவரத்தைக் குறைக்கும் நோக்கில் இலண்டன், ஸ்டாக்ஹோம் மற்றும் சிங்கப்பூரில் இதேபோன்ற முன்னெடுப்புகள் பின்பற்றப் படுகின்றன.

## அமெரிக்க-சீன அறிவியல் ஒப்பந்தம்

- சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தத்தினை மேலும் ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க சீனாவும் அமெரிக்காவும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் ஆனது முதன்முதலில் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதியன்று சீன நாட்டுத் தலைவர் டெங் சியாவோபிங் மற்றும் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் ஆகியோரால் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தம் ஆனது கூட்டு ஆராய்ச்சி, மாணவர்கள் மற்றும் அறிவியலாளர்களின் பன்னாட்டு போக்குவரத்து ஆகியவற்றை எளிதாக்குவதோடு, நிறுவன ஒத்துழைப்பை ஊக்குவித்து, இருதரப்பு ஆராய்ச்சி மையங்களை அமைக்கிறது.

## சர்வதேசக் காவல்துறையின் முதல் வெள்ளி அறிவிப்பு

- இந்த முன்னோடி திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளில் மோசடி செய்யப் பட்ட சொத்துக்களைக் கண்டறிவதற்காக சர்வதேசக் காவல் துறையானது தனது முதல் வெள்ளி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- கடத்தல் குற்றவாளிகளின் சொத்துக்கள் பற்றிய தகவல்களைக் கோரிய இத்தாலியின் வேண்டுகோளின் பேரில் முதல் வெள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த முன்னோடியான ஒரு திட்டத்தில் இந்தியா உட்பட சுமார் 52 உறுப்பினர் நாடுகள் பங்கேற்கின்றன.
- தற்போது, சர்வதேசக் காவல் துறையில் எட்டு வகையான வண்ணக் குறியிடப்பட்ட அறிவிப்புகள் உள்ளன என்ற நிலையில் ஓர் உறுப்பினர் நாடு உலகளவில் குறிப்பிட்ட வகையான தகவல்களைப் பெற இது அனுமதிக்கிறது.

- சிவப்பு அறிவிப்பு ஆனது ஒரு நாட்டு அரசானது, வேறொரு நாட்டிற்குத் தப்பியோடிய நபர்களைக் காவலில் வைக்கக் கோர அனுமதிக்கிறது.
- மஞ்சள் அறிவிப்பு ஆனது காணாமல் போனவர்களை, பெரும்பாலும் சிறார்களைக் கண்டுபிடிக்க அல்லது தங்களை அடையாளம் காண முடியாத பல்வேறு நபர்களை அடையாளம் காண உதவுகிறது.
- நீல அறிவிப்பு ஒரு குற்றவியல் விசாரணை தொடர்பாக ஒரு நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது செயல்பாடுகள் பற்றிய கூடுதல் தகவல்களைச் சேகரிக்கிறது.
- அடையாளம் தெரியாத பொருட்கள் பற்றியத் தகவல்களைத் தேட கருப்பு அறிவிப்பு வெளியிடப்படுகிறது.
- பொது மக்களின் பாதுகாப்பிற்கு மிக அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்ற ஒரு நபரின் குற்றச் செயல்கள் குறித்து எச்சரிக்கை வழங்குவதற்காக பச்சை அறிவிப்பு வழங்கப் படுகிறது.
- ஆரஞ்சு அறிவிப்பு ஆனது ஒரு நிகழ்வு, ஒரு நபர், ஒரு பொருள் அல்லது பொது மக்களின் பாதுகாப்பிற்கு கடுமையான மற்றும் உடனடி அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரு செயல் முறை பற்றி எச்சரிக்கிறது.
- ஊதா அறிவிப்பு ஆனது குற்றவாளிகள் பயன்படுத்தும் பலச் செயல்பாட்டு முறைகள், பொருள்கள், சாதனங்கள் மற்றும் பதுங்கு முறைகள் பற்றிய பல்வேறு தகவல்களைத் கோருவதற்கான அல்லது வழங்குவதற்கான அறிவிப்பு.

## மவுண்ட் இபு – இந்தோனேசியா

- இந்தோனேசியாவின் அதி தீவிரமான செயல்பாட்டில் உள்ள எரிமலைகளில் ஒன்றான மவுண்ட் இபு சமீபத்தில் வெடித்தது.
- மவுண்ட் இபு என்பது தீவிரமான வெடிப்பு நிகழ்வுகளுக்கான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டுள்ளது என்பதோடு 2023 ஆம் ஆண்டில் மட்டும் 2,000க்கும் மேற்பட்ட முறை வெடித்துள்ளது.
- அந்நாட்டில் பெரும் ஆபத்துகளை ஏற்படுத்துகின்ற மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையிலான 127 செயல்பாட்டில் உள்ள எரிமலைகள் உள்ளன.

## UN-CEBD உறுப்பினர்

- இந்திய நாடானது அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரங்களுக்கான பெருந்தரவு மற்றும் தரவு அறிவியல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவில் (UN-CEBD) இணைந்துள்ளது.
- UN-CEBD ஆனது, பெருந்தரவுகளின் நன்மைகள் மற்றும் சவால்கள் குறித்து மேலும் ஆராய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- அதிகாரப்பூர்வ புள்ளிவிவர நோக்கங்களுக்காக வேண்டி பெருந்தரவு மற்றும் தரவு அறிவியலைப் பயன்படுத்துவதில் உலகளாவியத் தரநிலைகள் மற்றும் முக்கிய நடைமுறைகளை வடிவமைப்பதில் இந்தியா பங்களிக்கும்.
- UN-CEBD ஆனது சுமார் 31 உறுப்பினர் நாடுகளையும் 16 சர்வதேச அமைப்புகளையும் (இந்தியா உட்பட) கொண்டுள்ளது.

## கிரீன்லாந்து - உலகளாவிய முக்கியத்துவம்

- கிரீன்லாந்து உலகின் மிகப்பெரிய தீவு என்பதோடு மற்றும் புவியியல் ரீதியாக வட அமெரிக்காவின் ஒரு பகுதியாகும்.
- இந்த ஆர்க்டிக் தீவு ஆனது டென்மார்க் நாட்டின் இரண்டு தன்னாட்சிப் பிரதேசங்களில் ஒன்றாகும் என்ற நிலையில் இதில் மற்றொன்று பரோயே தீவுகள் ஆகும்.
- 80 சதவீதம் பனியால் மூடப்பட்டிருக்கும் இது அமெரிக்க தலைநகரிலிருந்து சுமார் 3,000 கிலோ மீட்டர் (1,864 மைல்) தொலைவில் உள்ளது.
- கிரீன்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் நாடு அல்ல, ஆனால் அது நேட்டோ நாடுகளில் அங்கம் வகிக்கும் பகுதியாகும்.

## உலகின் முதல் CAES அமைப்பு

- "நெங்சு-1" எனப்படும் 300 மெகாவாட் திறன் கொண்ட உலகின் முதல் சிறு அழுத்தப் பட்ட காற்று ஆற்றல் சேமிப்பு (CAES) நிலையமானது சீனாவில் முழு திறன் கொண்ட மின் பகிர்மானக் கட்டமைப்பு இணைப்பை அடைந்துள்ளது.
- ஒற்றை-அலகு மின்சாரம், ஆற்றல் சேமிப்பு அளவு மற்றும் ஆற்றல் மாற்றத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் திட்டம் மூன்று உலக சாதனைகளை படைத்து உள்ளது.
- CAES என்பது குறுகிய கட்டுமானக் காலங்கள், அதிக மின் உற்பத்தி, நீடித்த காலம், பாதுகாப்பு மற்றும் நீண்டச் செயல்பாட்டுக் காலம் போன்ற நன்மைகளைக் கொண்ட ஒரு வளர்ந்து வரும் தொழில்நுட்பமாகும்.

## நெகிழிக் கழிவு இறக்குமதிக்கு தடை – தாய்லாந்து

- நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்வதன் மூலம் உலகளாவிய நெகிழிக் கழிவு நெருக்கடியை எதிர்கொள்ளும் சமீபத்திய நாடாக தாய்லாந்து மாறி உள்ளது.
- 2018 ஆம் ஆண்டிலிருந்து, அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து இந்த நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்யும் முன்னணி நாடாக தாய்லாந்து உள்ளது.
- 2018 மற்றும் 2021 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு இடையில், அந்நாடு 1.1 மில்லியன் டன்களுக்கும் அதிகமான நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்தது.
- 2023 ஆம் ஆண்டில், ஜப்பான் மட்டும் சுமார் 50 மில்லியன் கிலோகிராம் (50,000 டன்) நெகிழிக் கழிவுகளைத் தாய்லாந்திற்கு ஏற்றுமதி செய்தது.

## டொனால்ட் டிரம்பிற்குத் தண்டனை விதிப்பு

- அமெரிக்க நீதிமன்றமானது ஒரு ரகசிய பண வைப்பு வழக்கில் டொனால்ட் டிரம்ப்பின் தண்டனையை உறுதி செய்ததையடுத்து, வெள்ளை மாளிகையில் பதவி வகிக்கும் முதல் குற்றவாளியாக மாறியுள்ளார்.
- அவருக்கு 'நிபந்தனையற்ற விடுதலை' என்ற தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் அவர் மீதான குற்றச்சாட்டுகளில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டாலும், அவர் அமெரிக்காவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதால் எந்த சிறைத்தண்டனையும் அல்லது தண்டனையையும் அவர் எதிர்கொள்ள மாட்டார்.

## அமெரிக்க நிறுவனப் பட்டியல் புதுப்பிப்பு 2025

- அமெரிக்க வணிகத் துறையின் தொழில்துறை மற்றும் பாதுகாப்பு வாரியம் (BIS) ஆனது தேசியப் பாதுகாப்பு தொடர்பான அதன் கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனப் பட்டியலில் 11 நிறுவனங்களைச் சேர்த்துள்ளது.
- கூடுதலாக, BIS ஆனது இந்தியன் ரேர் எர்த்ஸ், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் (IGCAR), மற்றும் பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) ஆகிய மூன்று இந்திய நிறுவனங்களை நிறுவனப் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- அமெரிக்க தேசியப் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்தும் நடத்தையை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தக் கூடிய ஒரு சக்திவாய்ந்த செயற் கருவியாக இந்த நிறுவனப் பட்டியல் உள்ளது.

## கம்பாலா பிரகடனம் 2025

- மிக விரிவான ஆப்பிரிக்க வேளாண் மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு (CAADP) ஆனது உகாண்டாவின் கம்பாலா என்னுமிடத்தில் நிறைவு அடைந்தது.
- இந்த மாநாடானது 2026 முதல் 2035 ஆம் ஆண்டு வரையிலான ஆப்பிரிக்காவின் வேளாண்-உணவு அமைப்புகளுக்கான ஒரு மாறுதல் மிக்க கம்பாலா பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்தப் புதிய பிரகடனம் ஆனது, இந்த ஆண்டில் அமலாக்கக் காலம் முடிவடைகின்ற மலாபோ பிரகடனத்தின் வழி உருவாக்கப்பட்ட ஒரு பிரகடனமாகும்.
- இந்த உச்சி மாநாட்டின் போது, ஆப்பிரிக்கத் தலைவர்கள் புரட்சிகரமான பத்து ஆண்டு CAADP செயல் திட்டத்தையும் (2026–2035) அங்கீகரித்தனர்.
- 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மொசாம்பிக் நாட்டின் மபுடோ என்னுமிடத்தில் நடத்தப் பெற்ற ஆப்பிரிக்க ஒன்றியச் சட்டமன்றத்தின் இரண்டாவது அமர்வின் போது CAADP அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.
- இந்த அமர்வில், வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த மபுடோ பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ஆப்பிரிக்க ஒன்றிய உறுப்பினர் நாடுகள் தங்கள் தேசிய நிதி ஒதுக்கீட்டில் குறைந்தது 10 சதவீதத்தை வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கு என்று ஒதுக்கீடு செய்வதற்கும், ஆண்டுதோறும் சுமார் 6 சதவீத வேளாண் உற்பத்தி வளர்ச்சியை அடைவதற்காக ஒதுக்கீடு செய்வதற்கும் இது வலியுறுத்துகிறது.

## பிரிக்ஸ் அமைப்பின் பங்குதாரர் நாடு

- வளர்ந்து வரும் நாடுகளின் பிரிக்ஸ் அமைப்பின் ஒரு பங்குதாரர் நாடாக நைஜீரியா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பெலாரஸ், பொலிவியா, கியூபா, கஜகஸ்தான், மலேசியா, தாய்லாந்து, உகாண்டா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய சில நாடுகளுடன் இணைந்து, தற்போது நைஜீரியா பிரிக்ஸ் அமைப்பின் ஒன்பதாவது பங்குதார நாடாக மாறியுள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் பிரிக்ஸ் அமைப்பு உருவாக்கப்பட்டதோடு, 2010 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவும் இந்த அமைப்பில் உறுப்பினராக சேர்க்கப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டில், ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகமும் இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்த அதே நேரத்தில் சவுதி அரேபியா நாட்டிற்கு இந்தக் கூட்டமைப்பில் சேர அழைப்பு விடுக்கப்பட்டது.
- துருக்கி, அஜர்பைஜான் மற்றும் மலேசியா ஆகிய சில நாடுகள் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர்களாக சேர அதிகாரப் பூர்வமாக விண்ணப்பித்துள்ளன.

## 47வது அமெரிக்க அதிபர்

- அமெரிக்காவின் 47வது அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றுள்ளார்.
- மிகவும் குறைந்த வெப்பநிலை காரணமாக, கடந்த 40 ஆண்டுகளில் முதல் முறையாக அமெரிக்காவின் தலைநகர் (வாஷிங்டன்) மாளிகைக்குள்ளேயே விழா நடத்தப்பட்டது.
- அங்கு 19 ஆம் நூற்றாண்டிலிருந்து மறுதேர்தலில் தோல்வியடைந்த பிறகு இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற முதல் அமெரிக்க அதிபர் என்ற ஒரு பெருமையை டிரம்ப் பெற்றுள்ளார்.

## பாரிசு பருவநிலை உடன்படிக்கையில் இருந்து அமெரிக்கா விலகல்

- பாரிசு பருவநிலை மாற்ற உடன்படிக்கையில் இருந்து அமெரிக்க நாட்டை விலக்கிக் கொள்வதற்கான செயலாக்க ஆணையில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார்.
- 2035 ஆம் ஆண்டிற்குள் அமெரிக்காவின் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தினை 60 சதவீதத்திற்கும் மேலாகக் குறைப்பதற்கு அமெரிக்கா கடந்த மாதம் ஒரு திட்டத்தை உருவாக்கியது.

## டிரம்ப் ஆட்சியின் முதல் செயலாக்க ஆணைகள்

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற உடனேயே ஏராளமான செயலாக்க ஆணைகள் /நிர்வாக உத்தரவுகள் மற்றும் கட்டளைகளை வெளியிட்டார்.
- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று அமெரிக்கத் தலைநகரை முற்றுகை இட்ட சுமார் 1,500 பேருக்கு அவர் மன்னிப்பு வழங்கினார்.
- அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் நிகழும் சட்ட விரோதக் குடியேற்றத்தினை தேசிய அவசரநிலையாக அறிவிக்கச் செய்து, அக்குற்றவியல் கூட்டமைப்புகளைத் தீவிரவாத அமைப்புகளாக அறிவிக்கும் உத்தரவுகளில் அவர் கையெழுத்திட்டார்.
- பதவியேற்ற முதல் நாளில், அதிபர் டிரம்ப் முந்தைய பைடன் ஆட்சியின் 78 நிர்வாக நடவடிக்கைகளை ரத்து செய்தார்.
- உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்காவை வெளியேற்றுவதற்கான தனது ஒரு பிரச்சார வாக்குறுதியையும் அவர் நிறைவேற்றினார்.
- உலகளாவிய சுகாதார தயார்நிலை மற்றும் எதிர் நடவடிக்கைகளுக்காக ஆண்டிற்கு சுமார் 130 மில்லியன் டாலர்களை வழங்கச் செய்வதுடன் அமெரிக்க நாடானது உலக சுகாதார அமைப்பின் முதன்மையான நிதி நன்கொடை நாடாக உள்ளது.
- பாரிசு பருவநிலை மாற்ற உடன்படிக்கையிலிருந்து விலகும் முக்கிய ஆணையிலும் அவர் கையெழுத்திட்டார்.

- அரசாங்கப் பணியமர்த்தல் மற்றும் புதிய கூட்டாட்சி விதிமுறைகளை முடக்கும் சில உத்தரவுகளில் அவர் கையெழுத்திட்டார்.
- உத்தி சார் எண்ணெய் இருப்புக்களை நிரப்புவதாகவும், உலகம் முழுவதும் அமெரிக்க எரிசக்தியை ஏற்றுமதி செய்வதாகவும் நன்கு உறுதியளித்து, அவர் தேசிய எரிசக்தி அவசர நிலையை அறிவித்தார்.
- கனடா மற்றும் மெக்சிகோ மீது, பிப்ரவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகின்ற 25 சதவீதச் சுங்க வரிகளை விதிக்கும் உத்தரவிலும் கையெழுத்திட்டார்.
- 'மெக்சிகோ வளைகுடா'வை 'அமெரிக்க வளைகுடா' என்று மறுபெயரிடுவதற்கான ஒரு உத்தரவிலும் அவர் கையெழுத்திட்டார்.
- மவுண்ட் டெனாலியின் பெயரைத் திரும்பவும் 'மவுண்ட் மெக்கின்லி' என்று மாற்றவும் அவர் உத்தரவிட்டார்.
- பைடனின் ஆட்சியின் கீழ் சுமார் 1 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கு அவர்களுக்கான சட்டப்பூர்வ நுழைவை எளிதாக்கிய CBP One என்ற ஒரு செயலியை அவர் ரத்து செய்து உத்தரவிட்டார்.
- அங்கு கூட்டாட்சி அரசானது இரண்டு பாலினங்களை (ஆண் மற்றும் பெண்) மட்டுமே அங்கீகரிக்கும் என்று அறிவித்து, திருநர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பினையும் ரத்து செய்து அவர் உத்தரவிட்டார்.
- அமெரிக்காவின் 45வது அதிபராக அவரது முதல் பதவிக்காலத்தில், டிரம்ப் சுமார் 220 செயலாக்க உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

## சீனாவின் மக்கள்தொகை நெருக்கடி 2024

- 2024 ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள்தொகை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகக் குறைந்துள்ளது.
- உயிரிழப்புகள் ஆனது பிறப்புகளை விட வேகமாக அதிகரித்து வருவதால், கடந்த 12 மாதங்களில் சீன மக்கள்தொகை 1.39 மில்லியன் குறைந்து 1.408 பில்லியனாக உள்ளது.
- 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து சீனாவின் மக்கள்தொகை படிப்படியாகக் குறைந்து வருகிறது ஆனால் 1961 ஆம் ஆண்டிற்குப் பிறகு, 2022 ஆம் ஆண்டில் மட்டும் தான் உயிர் இழப்புகள் ஆனது பிறப்புகளை விட அதிகமாகப் பதிவாகியுள்ளது.

## உலகின் மிக நீளமான சுரங்கப்பாதை - சீனா

- சீனா, தியான்ஷான் மலைகள் வழியாக அமைக்கப்பட்டு வரும் உலகின் மிக நீளமான விரைவுப் போக்குவரத்து சுரங்கப்பாதையின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்து உள்ளது.
- தியான்ஷான் ஷெங்லி சுரங்கப்பாதையானது 22 கிலோமீட்டருக்கும் (14 மைல்) மிகவும் அதிகமான தொலைவிலானதாகும் என்பதோடு இது ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியில் உள்ள ஒரு மலைத்தொடரின் வழியானப் பயண நேரத்தினை மூன்று மணி நேரத்திலிருந்து 20 நிமிடங்களாகக் குறைக்கும்.
- இது உலகின் மிக நீளமான மலைகளில் ஒன்றாகும்.

## ஸ்டார்கேட் திட்டம்

- OpenAI, ஆரக்கிள், சாப்ட்பேங்க் மற்றும் MGX ஆகிய நிறுவனங்கள் 'ஸ்டார்கேட்' எனப் படும் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தினை நிறுவுவதற்காக ஒன்றிணைந்துள்ளன.
- இது செயற்கை நுண்ணறிவு நுட்பத்தின் பெரும் முன்னேற்றங்களில் ஒரு உலகளாவிய தலைமைத்துவத்தினை நோக்கி அமெரிக்காவை உந்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு சரிவு

- உலகளாவிய அந்நிய நேரடி முதலீடுகள் (FDI) ஆனது 2024 ஆம் ஆண்டில் எட்டு சதவீதம் குறைந்தன.
- ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு (UNCTAD) அமைப்பானது இந்த மதிப்பீட்டை வெளியிட்டது.
- வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் FDI 2% குறைந்துள்ளது.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் தொடர்புடைய FDI ஆனது 2024 ஆம் ஆண்டில் 11% குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு சரிவுப் போக்கைத் தொடர்ந்து சீனாவில் FDI 29% குறைந்துள்ளது.
- ஆனால் எண்ணிக்கையிலும் ஒட்டுமொத்த மதிப்பிலுமான ஒரு பெரும் அதிகரிப்புடன் இந்தியாவின் FDI ஆனது 13% உயர்வைக் கண்டது.
- ASEAN அமைப்பின் நாடுகளின் FDI 2% மட்டுமே அதிகரித்தன.

## WEF மன்றத்தின் GPAP முன்னெடுப்பில் 7 புதிய உறுப்பினர்கள்

- உலகளாவிய நெகிழிக் குறைப்பு நடவடிக்கை கூட்டாண்மை (GPAP) என்பது உலகப் பொருளாதார மன்றத்தினால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இது சமீபத்தில் சுமார் 25 நாடுகளை உள்ளடக்கிய வகையில் அதன் வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- அங்கோலா, வங்காளதேசம், காபோன், கௌதிமாலா, கென்யா, செனேகல் மற்றும் தான்சானியா ஆகிய ஏழு புதிய நாடுகள் இந்த முக்கிய கூட்டாண்மை முன்னெடுப்பில் இணைந்துள்ளன.

## அமெரிக்கா மற்றும் OECD உலகளாவிய வரி ஒப்பந்தம்

- டொனால்ட் டிரம்ப், அமெரிக்காவை OECD அமைப்பின் உலகளாவிய வரி ஒப்பந்தத்திலிருந்து வெளியேற்றுவதற்கான ஒரு முக்கியச் செயலாக்க ஆணையினை வெளியிட்டார்.
- உலகளாவிய வரி ஒப்பந்தம் ஆனது, பன்னாட்டு நிறுவனங்கள் தாங்கள் செயல்படும் நாடுகளில் நியாயமான பங்கிலான வரிகளை செலுத்துவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.
- ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் மற்றும் பிற நாடுகள் 15 சதவீதத்திலான உலகளாவிய பெரு நிறுவன குறைந்தபட்ச வரியை ஏற்றுக் கொண்டுள்ளன.

- அமெரிக்காவில் சுமார் 10% உலகளாவிய குறைந்தபட்ச வரி நிர்ணயம் உள்ளது என்ற நிலையில் டிரம்ப் ஆட்சியின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றான 2017 ஆம் ஆண்டு வரி குறைப்புத் தொகுப்பின் ஒரு பகுதி இதுவாகும்.

### இந்தியா – சீனா இடையிலான 75 ஆண்டுகால அரசுமுறை உறவுகள்

- இந்தியாவும் சீனாவும் கைலாஷ் மானசரோவர் யாத்திரையையும் இரு நாடுகளுக்கும் இடையேயான நேரடி விமான சேவைகளையும் 2025 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்க ஒப்புக் கொண்டுள்ளன.
- இது புது டெல்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையேயான அரசுமுறை உறவுகள் நிறுவப் பட்ட 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- கைலாஷ் மானசரோவர் யாத்திரை மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமான சேவைகள் ஆனது 2020 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டன.
- முன்னதாக 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், முக்கிய எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் ஆறு அம்சங்கள் மீதான ஒப்பந்தங்களில் உடன்பாடுகளைத் தெரிவித்தன.
- 2024 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தக மதிப்பு, 126.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டிய நிலையில் இது 1.9 சதவீதம் என்ற வருடாந்திர வளர்ச்சியைக் காட்டுகிறது.
- சீன நாட்டுத் தூதரகமானது கடந்த ஆண்டு இந்தியர்களுக்கு 280,000 நுழைவு இசைவுச் சீட்டுகளை வழங்கியுள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### 2024 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி

- இந்தியாவின் காபி ஏற்றுமதியானது 2024 ஆம் நிதியாண்டின் ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் 1,146.9 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில், 29 சதவீதம் அதிகரிப்புடன் இது 803.8 மில்லியன் டாலராக இருந்தது.
- இந்த எண்ணிக்கையானது, 2021 ஆம் நிதியாண்டின் அதே காலக் கட்டத்தில் சுமார் 460 மில்லியன் டாலராக இருந்த ஏற்றுமதியை விட கிட்டத்தட்ட இருமடங்காகும்.
- கர்நாடகாவில் உள்ள சிக்மங்களூரு, குடகு மற்றும் ஹாசன் ஆகிய பகுதிகள் 2022-23 ஆம் ஆண்டில் 2,48,020 மெட்ரிக் டன்களுடன் அரபிகா மற்றும் ரோபஸ்டா ரக காபி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளன.
- இதில் கேரளா 72,425 மெட்ரிக் டன்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து 18,700 மெட்ரிக் டன்களுடன் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.

## இந்தியாவின் வாழைப்பழ ஏற்றுமதி 2023-24

- எதிர்வரும் ஆண்டுகளில் 1 பில்லியன் டாலர் மதிப்பிலான வாழைப்பழ ஏற்றுமதியை மேற்கொள்வதை இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.
- தற்போது இந்தியாவிலிருந்து வாழைப்பழம் உள்ளிட்ட பெரும்பாலான பழங்களின் ஏற்றுமதி விமானம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தியா 2023-24 ஆம் ஆண்டில் 300 மில்லியன் டாலர் மதிப்புள்ள வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் இது 176 மில்லியன் டாலராக இருந்தது.
- உலகளாவிய வாழைப்பழ ஏற்றுமதியில் 2013 ஆம் ஆண்டில் வெறும் 0.21 சதவீதமாக இருந்த நாட்டின் பங்கு ஆனது 2023 ஆம் ஆண்டில் 1.74 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## BAANKNET வலைதளம்

- அரசாங்கம் ஆனது, புதுப்பிக்கப்பட்ட 'பேங்க்நெட்' எனப்படும் இணைய வழி ஏல வலை தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பொதுத் துறை வங்கிகளால் (PSBs) இணைய வழி ஏலத்திற்கு என முன் வைக்கப்படும் அனைத்து சொத்துக்கள் பற்றிய தகவலை இது ஒருங்கிணைக்கும்.
- இந்த வலைதளம் ஆனது, ஏலத்தில் வாங்குபவர்களும் முதலீட்டாளர்களும் மிகப் பரந்த அளவிலான சொத்துக்களை ஒரே இடத்தில் கிடைக்கப் பெறச் செய்வதற்கான இடம் ஆகும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் தங்கக்குவிப்பு

- உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள் கூட்டாக இணைந்து, 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தங்கள் இருப்புகளில் 53 டன் தங்கத்தைச் சேர்த்துள்ளன.
- இந்திய ரிசர்வ் வங்கி தனது இருப்பில் 8 டன் தங்கத்தினை சேர்த்துள்ளது.
- இது ஆண்டுக்கான கொள்முதலை 73 டன்னாகவும், மொத்தத் தங்க இருப்பினை 876 டன்னாகவும் உயர்த்தியது.
- போலந்து நாட்டிற்கு அடுத்தபடியாக 2024 ஆம் ஆண்டில் அதிகளவில் தங்கம் வாங்கும் இரண்டாவது பெரிய நிறுவனமாக RBI தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளது.

## 2024 ஆம் ஆண்டில் இந்திய சிறு நிதித் துறை

- இந்தியாவில் சிறு நிதி நிறுவனங்கள் (MFI) என்ற தொழில்துறையானது கடந்த 12 ஆண்டுகளில் சுமார் 2,176 சதவீதத்திற்கும் அதிகமான அதிகபட்ச ஒரு வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சுமார் 17,264 கோடி ரூபாயாக இருந்த இதன் செயல்பாடானது 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாத நிலவரப்படி 3.93 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

- 28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கிய சுமார் 111 முன்னேற்றத்தினை நாடும் மாவட்டங்கள் உட்பட சுமார் 723 மாவட்டங்களில் MFI நிறுவனங்கள் செயல்படுகின்றன.
- அவை கிட்டத்தட்ட 8 கோடி கடன் வாங்குபவர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதோடு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு கூட்டலில் (GVA) 2.03 சதவீதப் பங்களிப்பை வழங்குவதோடு மேலும், 1.3 கோடி வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.

## வருடாந்திர இந்திய நிதித் தொழில்நுட்பம் குறித்த அறிக்கை 2024

- அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக நிதி தொழில் நுட்பப் பிரிவில் பெறப்பட்ட நிதிகளின் அடிப்படையில் இந்தியாவானது உலகளவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 1.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் திரட்டப்பட்டதுடன், நிதித் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க சரிவுப் பதிவானது.
- இது 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 2.8 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியிலிருந்து 33 சதவீதம் குறைவாகும்.
- இந்தத் துறையானது 2022 ஆம் ஆண்டில் சுமார் 5.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை திரட்டியது.
- 2024 ஆம் ஆண்டில் மணி வியூ மற்றும் பெர்ஃபியோஸ் என்ற இரண்டு யூனிகார்ன் நிறுவனங்கள் தோன்றின.

## மாநில வருவாய் சார்புப் போக்குகள்

- கடந்தப் பத்தாண்டுகளில், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து வரும் பல நிதிப் பரிமாற்றங்கள் மற்றும் மானியங்களை அதிகமாகச் சார்ந்துள்ளன.
- கடந்தப் பத்தாண்டுகளில் (2016 முதல் 2025 ஆம் நிதியாண்டு வரை) மாநிலங்களின் மொத்த வருவாயில் 23-30% ஆனது மத்திய அரசிடமிருந்துப் பரிமாற்றங்களாக பெறப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டின் முதல் பாதியில், இந்தப் பங்கு 20-24% ஆக இருந்தது.
- மேலும், 2000 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடச் செய்யும்போது கடந்தப் பத்தாண்டுகளில் மாநிலங்களின் வரி சாராத வருவாயில் சுமார் 65-70% ஆனது மத்திய அரசிடமிருந்து மானியங்களாகப் பெறப்பட்டன.
- பல மாநிலங்கள் தங்கள் வசம் உள்ள வரி வசூல் வழிமுறைகளைப் பயன்படுத்தி அந்த வரிகளைத் திறம்பட வசூலிப்பதில்லை.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சொந்த வரி வருவாய் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஆனது 2013-15 ஆம் நிதியாண்டில் 7.72 சதவீதத்திலிருந்து, 2022-24 நிதியாண்டில் 6.17% ஆக படிப்படியாகக் குறைந்துள்ளது.
- கர்நாடகா, கேரளா, பீகார், டெல்லி மற்றும் மத்தியப் பிரதேசத்திலும் இந்த நிலையே நிலவுகிறது.

- மகாராஷ்டிரா, மணிப்பூர், மேகாலயா, ஒடிசா மற்றும் உத்தரகாண்ட் ஆகிய சில மாநிலங்களில் இந்த விகிதம் உயர்ந்துள்ள நிலையில், மற்ற மாநிலங்களில் இது தேக்க நிலையிலேயே உள்ளது.

## இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரம் 2024-25

- இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரம் ஆனது, நாட்டின் மற்ற பொருளாதாரத் துறைகளை விட இரண்டு மடங்கு வேகமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது 2024–25 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய வருமானத்தில் சுமார் 13.42% பங்கினைக் கொண்டிருந்தது என்பதோடு இது 2022–23 ஆம் ஆண்டில் 11.74% ஆக இருந்தது.
- சர்வதேசப் பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சிச் சபை (ICRIER) ஆனது இந்த அறிக்கையினைத் தயாரித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரமானது ஒட்டு மொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டிருக்கும்.
- 2022–23 ஆம் ஆண்டில் எண்ணிமப் பொருளாதாரம் (GVA) ஆனது, மொத்த மதிப்புக் கூட்டலில் 28.94 லட்சம் கோடி ரூபாய்க்கும் (~368 பில்லியன் டாலர்) மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 31.64 லட்சம் கோடி ரூபாய்க்கும் (~402 பில்லியன் டாலர்) சமமானதாக இருந்தது.

## இந்தியாவில் காபி உற்பத்தி 2023-24

- 2023-24 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதி 1.29 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டியுள்ள நிலையில், உலகின் ஏழாவது பெரிய காபி உற்பத்தியாளராக இந்தியா உருவெடுத்து உள்ளது.
- இது 2020-21 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 719.42 மில்லியன் டாலர் மதிப்பினை விட சுமார் இரு மடங்கு அதிகமாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் 248,020 மில்லியன் டன் பங்குடன் காபி உற்பத்தியில் கர்நாடகா முன்னணியில் உள்ள ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## நிதிச் சேவைகளின் சிறு தொகுப்புத் திட்டம்

- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆனது, பரஸ்பர நிதிகளின் சிறு தொகுப்பு ('சேச்சிடேஷன்') குறித்த ஆலோசனைக் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது குறைந்த வருமானம் கொண்ட பிரிவினரும் பரஸ்பர நிதிகளை அணுகுவதை அதிகரிப்பதையும் அவர்களின் பங்கேற்பை மிக எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட ள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இஸ்ரோவின் SpaDeX திட்டம்

- PSLV-C60 ஏவுகலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதன் மூலம் இஸ்ரோ மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.
- இது முன்னோடி மிக்க விண்கல இணைப்பு பரிசோதனை கலத்தினை (SpaDeX) சுமந்து செல்கிறது.
- இந்த கலமானது SDX01 (சரிபார்ப்பு கலம்) மற்றும் SDX02 (இலக்கு கலம்) என்ற இரண்டு விண்கலங்களை நிலை நிறுத்தியுள்ளது.
- இரண்டு சிறிய விண்கலங்களைப் பயன்படுத்தி விண்வெளி விண்கல இணைப்புத் துறையில் இந்தியாவின் திறன்களை மேம்படுத்தி நிரூபிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கிரோன்ஸ் நோய்க்கான புதிய சிகிச்சை

- உலகளவில் சுமார் 10 மில்லியன் மக்கள் குடல் அழற்சி நோயுடன் (IBD) வாழ்கின்றனர், இதில் அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சி மற்றும் கிரோன்ஸ் நோய் ஆகியவை அடங்கும்.
- மிரிக்கிசுமாப் என்பது அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சியின் சிகிச்சைக்காக உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பினால் (FDA) தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஒரு மருந்து ஆகும்.
- அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சிக்கு மட்டுமின்றி, கிரோன்ஸ் நோய்க்கும் சேர்த்து மிரிக்கிசுமாப் மருந்து நீண்டகால செயல்திறன் மற்றும் பாதுகாப்பு கொண்டுள்ளதாக என்று ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.
- அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சி மற்றும் கிரோன்ஸ் நோயினால் ஏற்படும் அழற்சி மோசமான அறிகுறிகளுக்கு வழி வகுக்கும்.

## PSLV-C60 திட்டம்

- இந்தத் திட்டமானது பத்து இந்திய விண்வெளிப் புத்தொழில் நிறுவனங்களுக்கு தங்கள் கருவிகளை விண்வெளிக்கு அனுப்ப உதவியது.
- இது PSLV-C60/SPADEX திட்டத்தின் POEM-4 தொகுதியில், அரசு சாரா நிறுவனங்களின் (NGEs) 10 கருவிகளை மிகவும் வெற்றிகரமாக நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் உதவியது.
- PSLV ஏவுகலத்தின் கடைசிக் கட்டமானது விண்வெளியில் சில மாதங்கள் நிலைத்து இயங்கும் வகையில் மீளுருவாக்கம் செய்யப்பட்டு PS4-சுற்றுப்பாதைச் சோதனை மாதிரி (POEM) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- PSLV POEM என்பது இஸ்ரோ நிறுவனத்தினால் நிலை நிறுத்தப் படுத்தப் பட்டுள்ள ஒரு நடைமுறை தீர்வாகும்.
- இந்தியப் புத்தொழில் நிறுவனங்கள், பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆனது தங்களது முழு செயற்கைக்கோள்களையும் ஏவாமல் தாங்கள் உருவாக்கும் விண்வெளித் தொழில்நுட்பங்களைப் பரிசோதிக்க அனுமதிக்கிறது.

## விண்வெளி குப்பைகளுக்கான இந்தியா - ஜப்பான் கூட்டுறவு

- ஜப்பான் மற்றும் இந்தியாவில் உள்ள விண்வெளி சார் புத்தொழில் நிறுவனங்கள் விண்வெளி சுற்றுப்பாதையில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு சீரொளிக் கற்றைப் பொருத்தப்பட்ட செயற்கைக்கோள்களைப் பயன்படுத்துவது குறித்த கூட்டு ஆவிற்கு ஆய்விற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- இது சுற்றுப்பாதையில் உள்ள மாபெரும் அளவிலான குப்பைத் திரள் பிரச்சனைக்கு ஒரு சோதனை சார் அணுகுமுறையாகும்.
- டோக்கியோவைச் சேர்ந்த ஆர்பிட்டல் லேசர்ஸ் மற்றும் இந்திய நாட்டின் ரோபோடிக்ஸ் நிறுவனமான இன்ஸ்பெசிட்டி ஆகியவை விண்வெளி சார் சேவைகளுக்கான வணிக வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்யும்.
- செயலிழந்த செயற்கைக்கோளை விண்வெளிச் சுற்றுப்பாதையில் இருந்து நீக்குவதும், விண்கலத்தின் ஆயுளை நீட்டிப்பதும் இதில் அடங்கும்.

## கன கிலோமீட்டர் நியூட்ரினோ தொலைநோக்கி (KM3NeT)

- சமீபத்தில், அறிவியல் ஆய்வாளர்கள் உயர் ஆற்றல் கொண்ட நியூட்ரினோக்களைக் கண்டறிவதற்கு என மத்தியத் தரை கடலுக்கு அடியில் 2 தொலைநோக்கிகளை நிலை நிறுத்தியுள்ளனர்.
- இது பேரண்டத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தக் கூடிய பேய்த் துகள்கள் என்றும் அழைக்கப் படும் உயர் ஆற்றல் கொண்ட நியூட்ரினோக்களை ஆய்வு செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இஸ்ரோவின் CROPS பரிசோதனை

- இஸ்ரோவின் PSLV-C60 திட்டத்தில் விண்வெளிச் சுற்றுப்பாதையில் தாவர வளர்ச்சி குறித்த ஆய்வுகளுக்கான குறு ஆராய்ச்சி மாதிரியினை (CROPS) உருவாக்கி மிகவும் ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இதில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட காராமணி விதைகளில் வெற்றிகரமாக முதல் துளிர்கள் முளைத்துள்ளன.
- இது நுண்ணிய ஈர்ப்பு விசைக்கான சூழ்நிலைகளில் தாவர வளர்ச்சி பற்றி மிக நன்கு புரிந்து கொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- CROPS பரிசோதனையானது, விண்வெளியின் தனித்துவமான சூழலில் தாவரங்கள் அவற்றை எவ்வாறு தகவமைத்துக் கொண்டு வளர்கின்றன என்பதை ஆய்வு செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் விண்வெளி தானியங்கிக் கை செயல்முறை விளக்கம்

- இஸ்ரோ தனது முதல் விண்வெளி தானியங்கிக் கையின் மீதான ஒரு செயல் முறை விளக்கத்தினை விண்வெளியில் உள்ள POEM4 என்ற தளத்தில் மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது வேற்றிட அமையத்தகு எந்திர கையாளுதல்-தொழில்நுட்ப செயல் விளக்கம் (RRM-TD) எனப்படுகிறது.

- RRM-TD என்பது ஓரிடம் விட்டு வேறிடத்திற்கு நகரும் திறன் கொண்ட இந்தியாவின் முதல் விண்வெளி எந்திர கையாளுதல் திறனாகும்.

## 2025 ஆம் ஆண்டின் முதல் விண்கல் பொழிவு

- குவாட்ரான்டிட் விண்கல் பொழிவானது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தின் பெரும் தொடக்கத்தில் நிகழ்கிறது.
- இது மிகவும் தீவிரமான வருடாந்திர விண்கல் பொழிவுகளில் ஒன்றாகும் என்பதோடு, மேலும் சில மணிநேரங்கள் மட்டுமே நீடிக்கும் குறுகிய கால உச்சக் கட்ட செயல்பாட்டு காலத்தினைக் கொண்டுள்ளது.
- இது பூட்டெஷ் (Boötes) விண்மீன் திரளின் வடகிழக்கு முனையில் இருந்து கிளைக்கிறது.
- குவாட்ரான்டிட்ஸ் என்ற பெயர் ஆனது தற்போது வழக்கற்றுப் போன குவாட்ரான்ஸ் முரளிஸ் என்ற விண்மீன் திரளிலிருந்து உருவானது.
- 1830 ஆம் ஆண்டுகளில் பெல்ஜிய வானியலாளர் அடோல்ஃப் க்யூட்லெட் என்பவர் முதல் முறையாக இந்த விண்கல் பொழிவினைக் கண்டறிந்தார்.

## ஆழமற்ற அலைப் படுகையில் அமைந்த ஆராய்ச்சி மையம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, இந்திய ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை தேவைகளை மிக நன்கு பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான ஆசியாவின் மிகப்பெரியதொரு ஆழமற்ற அலைப் படுகை ஆராய்ச்சி மையத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தியத் துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடலோரப் பொறியியல் கட்டமைப்புகள் ஆகியவற்றில் உள்ள சவாலான பிரச்சனைகளை இது தீர்க்க இயலும்.
- இது மிகச் சிக்கலான அலை மற்றும் நீரோட்ட இடையூறுகளைக் கையாளக்கூடிய பல் திசையிலான ஆழமற்ற அலைப் படுகை ஆகும்.
- துறைமுகம், கடலோர, கடல்சார், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் மிகவும் ஆழமற்ற நீர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ள திட்டங்களுக்குப் இந்த அலைப் படுகைகள் பயன்படுத்தப்படலாம்.

## ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புதிய ஊடலை அமைப்பு

- ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது அதன் அதிநவீன குறைந்த ஆற்றல் நுகர்விலான AWaDH ஊடலை நுழைவாயில் மற்றும் பிணைய அமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தச் செலவினம் மிக குறைந்த முதல்-வகையான அமைப்பு ஆனது ஊடலை மூலம் இயக்கப் பட்ட உணர்விகளை மேகக் கணினி இயங்குதளங்களுடன் இணைக்கிறது.
- இது வேளாண்மை, தளவாடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நெகிழ்திறன் போன்ற பல் துறைகளில் தடையற்றத் தரவுப் பரிமாற்றம், நிகழ்நேரச் சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளை வழங்குகிறது.
- இது ஒரு நேர்க்கோட்டு (LOS) அமைப்பில் சுமார் 1 கிலோ மீட்டர் வரையிலான தரவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ள உதவுகிறது.

## மிக நீளமான நட்சத்திர மற்றும் வாயு நீட்சி

- NGC 3785 அண்டத்துடன் தொடர்புடைய, இதுவரையில் கண்டறியப்படாத மிக நீளமான நட்சத்திர மற்றும் வாயு நீட்சியின் முடிவில் ஒரு புதிய அதிக பரவல் எல்லை கொண்ட அண்டம் உருவாகுவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது பூமியிலிருந்து சுமார் 430 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் லியோ என்ற விண்மீன் திரளில் அமைந்துள்ளது.
- இது NGC 3785 அண்டத்திலிருந்து 1.27 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவிற்கு நீண்டு உள்ளது.

## தோரியம் அடிப்படையிலான அணுசக்தி தீர்வுகள்

- NTPC லிமிடெட் நிறுவனமானது, செறிவூட்டப்பட்ட செயல்பாட்டுக் காலத்திற்கான மிக மேம்பட்ட அணுசக்தியை (ANEEL) உருவாக்குதல் மற்றும் அதன் பயன்பாடு குறித்து ஆராய்வதற்காக வேண்டி அமெரிக்காவின் கிளீன் கோர் தோரியம் எனர்ஜி (CCTE) என்ற நிறுவனத்துடன் ஓர் உத்தி சார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ANEEL என்பது அழுத்த கன நீர் உலைகளுக்கான (PHWRs) தோரியம் அடிப்படையிலான எரிபொருளாகும்.
- ANEEL எரிபொருளில், தற்போதுள்ள PHWR உலைகளில் தோரியத்தை எரிபொருளாகப் பயன்படுத்துதல், அணுக்கழிவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பு ஆகியவை அடங்கும்.
- இது உள்நாட்டில் கிடைக்கும் தோரியத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் ஒரு மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் அணுசக்திப் பரவல் எதிர்ப்பையும் உள்ளடக்கியது ஆகும்.

## காதிரைச்சல் உணர்வினை ஈடுசெய்யும் சாதனம்

- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, மிகவும் துல்லியமான காதிரைச்சல் (Tinnitus) ஒலி உணர்வினை ஈடு செய்யும் சாதனம் மற்றும் தனிப் பயனாக்கக் கூடிய தீர்வு (கைபேசி அடிப்படையிலான மென்பொருள்) ஆகியவற்றை மலிவு விலையில் உருவாக்கியுள்ளது.
- டைன்னிடஸ் என்பது எந்த வெளிப்புறத் தூண்டுதலும் இல்லாத நிலையில் மிகை ஒலி உணர்தல் ஆகும்.
- இது கடுமையான தூக்கக் கலக்கம், மனச்சோர்வு, பதட்டம், மன ஆரோக்கியத்தில் பாதிப்பு, எரிச்சல் மற்றும் சமூக வாழ்க்கையைப் பாதித்தல் ஆகியவற்றினை மிகப் பெருமளவு ஏற்படுத்துகிறது.
- டைன்னிடஸ் என்பது உலகளவில் 740 மில்லியனுக்கும் அதிகமான வயது வந்தோரைப் பாதிக்கிறது என்பதோடு 120 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனையாக இது கருதப்படுகிறது.

## புதிய தேடல் மற்றும் மீட்பு உதவி கருவி

- இந்திய தேசிய கடல் சார் தகவல் சேவைகள் மையம் (INCOIS) ஆனது அதன் சொந்தத் தேடல் மற்றும் மீட்பு உதவிக் கருவியின் (SARAT) புதிய வடிவத்தினை உருவாக்கி உள்ளது.

- இது 'சிறந்த துல்லியத்தன்மை மற்றும் பயன்பாட்டை' வழங்குவதோடு, இந்தியக் கடலோரக் காவல்படை போன்ற இந்திய தேடல் மற்றும் மீட்பு (SAR) நிறுவனங்களுக்கு அவற்றின் கடல் சார் நடவடிக்கைகளில் உதவும்.

## விண்வெளியில் செயற்கைக்கோள் இணைப்பு

- இஸ்ரோ நிறுவனமானது விண்வெளியில் இரண்டு செயற்கைக்கோள்களை மிகவும் வெற்றிகரமாக இணைத்துள்ளதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இத்தகையச் சாதனையினைப் படைத்த நான்காவது நாடாக இந்தியா மாறியுள்ளது.
- ஸ்பேடெக்ஸ் (விண்வெளியில் செயற்கைக்கோள் இணைப்பு) திட்டமானது, PSLV என்ற விண் ஏவுகலத்தினால் விண்ணில் ஏவப்பட்ட இரண்டு சிறிய செயற்கைக்கோள்களை இணைப்பதற்கான தொழில்நுட்பச் செயல்விளக்கத் திட்டமாகும்.
- இஸ்ரோ நிறுவனமானது டிசம்பர் 30 ஆம் தேதியன்று SDX01- சேஸர் மற்றும் SDX02 ஆகிய இரண்டு சிறிய விண்கலங்களை விண்ணில் ஏவியுள்ளது.
- இந்தத் திட்டத்தில், முதலில் இரண்டு செயற்கைக் கோள்களும் இடையில் 20 கிலோ மீட்டர் என்ற தொலைவிலான இடைவெளியுடன், சேஸர் செயற்கைக்கோள் ஆனது இரண்டு விண்கலங்களின் இறுதி இணைப்பிற்கு முன்னதாக, 5 கி.மீ, 1.5 கி.மீ, 500 மீ, 225 மீ, 15 மீ மற்றும் 3 மீ என தொலைவினைக் குறைப்பதன் மூலம் இலக்கு நிர்ணயிக்கப் பட்ட செயற்கைக்கோளை நெருங்கியது.

## முதல் தனியார் செயற்கைக்கோள் தொகுப்பு

- பெங்களூருவில் உள்ள விண்வெளி சார் புத்தொழில் நிறுவனமானது, இந்தியாவிற்கு முதல் தனியார் புவி வரைபடமாக்கல் செயற்கைக்கோள் தொகுப்பினை வழங்கி வரலாறு படைத்துள்ளது.
- 'ஃபயர்ஃபிளை' எனப்படும் இந்த தொகுப்பானது பிக்சல் நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டதாகும்.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அந்த நிறுவனமானது 'சகுந்தலா' எனப்படுகின்ற இந்தியாவின் முதலாவது தனியார் துறை அதி நிறமாலைப் புவி வரைபடமாக்கல் செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியது.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன்-9 ஏவுகலத்தினைப் பயன்படுத்தி மூன்று 'ஃபயர்ஃபிளை' செயற்கைக் கோள்கள் 550 கிலோமீட்டர் தொலைவிலான புவி தாழ் மட்ட சுற்றுப்பாதையில் ஏவப்பட்டன.
- 'ஃபயர்ஃபிளைஸ்' என்பது தற்போது உலகின் மிக உயர்ந்த தெளிவுத் திறன் கொண்ட அதி நிறமாலையிலான வணிக செயற்கைக்கோள் ஆகும்.
- இஸ்ரோ நிறுவனமானது விண்வெளியில் 52 வெவ்வேறு செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது.

## விண்வெளியில் காராமணி செடிகள்

- இஸ்ரோ நிறுவனமானது, விண்வெளிச் சுற்றுப்பாதையில் தாவர வளர்ச்சி குறித்த ஒரு ஆய்வுகளுக்கான அதன் குறு ஆராய்ச்சி மாதிரியினைப் பயன்படுத்தி விண்வெளியில் காராமணி (லோபியா) விதைகளை வெற்றிகரமாக முளைக்கச் செய்துள்ளது.

- செவ்வாய் மற்றும் நிலவு போன்ற வானியல் அமைப்புகளில் குடியேறுவதற்காக என மனிதர்கள் மிக நீண்ட விண்வெளி பயணங்களில் ஈடுபடும் போது, விண்வெளியில் வளர்க்கப் படும் தாவரங்கள் அவர்களுக்கு ஒரு மிக நிலையான உணவு ஆதாரத்தை வழங்க முடியும்.

## கோள்களின் ஒருங்கிணைவு 2025

- நமது சூரிய மண்டலத்தில் உள்ள நான்கு கோள்கள் – வெள்ளி, சனி, வியாழன் மற்றும் செவ்வாய் ஆகியவை இரவு வானத்தில் வெற்றுக் கண்ணுக்குப் புலப்படவுள்ளன.
- யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவற்றை இந்தக் கோள்களுடன் சேர்த்து, ஆனால் ஒரு தொலைநோக்கியின் உதவியுடன் காண இயலும்.
- 'கோள்களின் ஒருங்கிணைவு' என்பது நமது சூரிய மண்டலத்தில் உள்ள பல கோள்கள் ஒரே நேரத்தில் இரவு வானத்தில் தெரியும் ஒரு சூழ்நிலையைக் குறிக்கிறது.

## விகாஸ் இயந்திரத்தின் மீள் இயக்க செயல்பாட்டுத் திறன்

- இஸ்ரோ நிறுவனமானது அதன் விகாஸ் திரவ இயந்திரத்தினை மீள் இயக்கச் செயல் முறையின் செயல்விளக்கத்தினை மிக வெற்றிகரமாக மேற்கொண்டதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இஸ்ரோவின் ஏவுகல வாகனங்களின் திரவ எரிபொருள் நிலைகளுக்கு ஆற்றலை வழங்குவதற்கான நம்பகமான செயல்பாட்டு அமைப்பான விகாஸ் இயந்திரம், ஏவுகல நிலை மீட்பு மற்றும் மறுபயன்பாட்டினை செயல்படுத்துவதற்காக மறுவடிவமைக்கப் படுகிறது.
- ஒரு சமீபத்தியச் சோதனையில், இந்த இயந்திரமானது 60 வினாடிகள் எரியூட்டப்பட்டு, பின்னர் 120 வினாடிகளுக்கு அணைக்கப்பட்டது.
- பின்னர் அது வெற்றிகரமாக மீண்டும் இயக்கப்பட்டு சுமார் ஏழு வினாடிகள் மீண்டும் எரியூட்டப் பட்டது.

## விண்வெளி வீரர்கள் பயணப் பெட்டகத்தின் திரவ உந்துவிசை அமைப்பு

- திரவ உந்துவிசை அமைப்பின் ஒருங்கிணைப்பை மிக வெற்றிகரமாக நிறைவு செய்த பிறகு, ககன்யான் (G1) திட்டத்தின் முதன்முதலாவது விண்வெளி வீரர்கள் இல்லாத பயணத்திற்கான பெட்டகத்தினை இஸ்ரோ பெற்றுள்ளது.
- விண்வெளி வீரர்கள் குழுவினரை விண்வெளிக்கு அனுப்புவதற்கு முன்னதாக, இஸ்ரோ அதன் ககன்யான் திட்டத்தின் கீழ் விண்வெளி வீரர்கள் இல்லாத இப்பெட்டகத்தினை விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- ககன்யான்-G1 கலமானது இந்த ஆண்டின் தொடக்கத்தில் விண்ணில் ஏவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்தடுத்து ஏவப்பட உள்ள ககன்யான்-G2 மற்றும் G3 எனப்படும் விண்வெளி வீரர்கள் இல்லாத இரண்டு பெட்டகங்களுக்கு அடுத்தப் பயணம் இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத்திற்கு வழி வகுக்கும்.

## ஸ்டார்கார்ட் நோய்

- ஸ்டார்கார்ட் நோயைக் குணப்படுத்தச் செய்வதற்கு என்று மரபணுக்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை செயல் விளக்கிக் காட்டுவதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஒரு நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- ஸ்டார்கார்ட் நோய் என்பது குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரிடையே படிப்படியான பார்வை இழப்புக்கு வழி வகுக்கும் ஒரு மரபணு வழி பரவும்/ பரம்பரை வழி நோயாகும்.
- இது பொதுவாக இரு கண்களையும் பாதிக்கிறது.
- பொதுவாக ஸ்டார்கார்ட் நோய் என்பது ஸ்டார்கார்ட் ஒளிக்குவியச் சிதைவு நோய் என்றும் அழைக்கப் படுகிறது என்பதோடு இது பொதுவாக ABCA4 என்ற மரபணுவில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகிறது.
- இந்த மரபணு ஆனது நமது உடல் A என்ற வைட்டமினை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைப் பாதிக்கிறது.
- இந்தியாவில், இந்த நோயின் பரவல் ஆனது 8000 முதல் 10000 பேரில் ஒருவருக்கு என்ற வீதத்தில் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது

## புறக் கருவி சார்ந்த குளிரூட்டல் அடிப்படையிலான ஸ்கிராம் ஜெட் சோதனை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, சமீபத்தில் இந்தியாவில் மிக முதல் முறையாக 120 வினாடிகளுக்கு மீயொலி வேகத்திலான எரிப்பு ராம்ஜெட் என்ஜினின் நிலம் சார் செயல்பாட்டுச் சோதனையை செயல் விளக்கிக் காட்டியது.
- அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பத்திலான மீயொலி வேகத்திலான எறிகணை வகைகளை உருவாக்குவதில் பாதுகாப்பு அமைச்சகம் (MoD) இதை ஒரு முக்கியமான மைல்கல் என்று கூறியுள்ளது.
- மீயொலி வேகத்திலான எறிகணைகள் 'மாக் 5' எனும் ஒலியின் வேகத்தினை விட ஐந்து மடங்கு அதிக வேகத்தில் பயணிக்கும் மேம்பட்ட ஆயுதங்களின் வகையாகும்.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், DRDO ஆனது ஐதராபாத்தில் மேம்பட்ட மீயொலி காற்றோட்டச் சோதனை ஊடக (HWT) மையத்தினைத் திறந்து வைத்தது.

## CDSCO – கார்டெமி

- பெங்களூருவில் உள்ள உயிரித் தொழில்நுட்பம் புத்தொழில் நிறுவனமானது, நிணநீர்க் குழியப் புற்றுநோய் (B-செல் ஹாட்ஜ்கின் எதுவும் அல்லாத லிம்போமா (B-NHL)) வகை நோயாளிகளுக்கு கார்டெமி எனப்படும் CAR-T செல் சிகிச்சையினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்த "உயிரி சார் மருந்து" ஆனது இந்தியாவில் நோய் வளர்ச்சியின் மேம்பட்ட நிலை அல்லது மீண்டும் மீண்டும் வரும் நிலையில் உள்ள இரத்த புற்றுநோய் நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியவானது, இரத்தப் புற்றுநோய், நிணநீர்க் குழியப் புற்றுநோய் மற்றும் பல்வேறு மைலோமா பாதிப்புகளால் ஆண்டுதோறும் சுமார் 1,20,000 புதிய பாதிப்புகளையும் 70,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளையும் எதிர்கொள்கிறது.

## ரஷ்யாவில் காந்த வட துருவம்

- இந்த துருவம் ஆனது முதன்முதலில் கனடா நாட்டிலிருந்து சுமார் 400 கிலோமீட்டர் தொலைவில் 1831 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இருப்பினும் அவை அன்றில் இருந்து இன்று வரையில் ரஷ்யாவை நோக்கி தொடர்ந்து நகர்ந்து வருகின்றன என்பதோடு மேலும், இன்றுவரை நூறு ஆண்டுகளில் 400 கிலோ மீட்டருக்கு மேல் நகர்ந்துள்ளன.
- காந்த வட துருவம் நகரும் வேகம் மாறிக் கொண்டே இருக்கிறது.
- 1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரையில், இந்தத் துருவம் ஆண்டிற்கு 55 கிலோமீட்டர் என்ற விகிதத்தில் நகர்ந்தது.
- 2015 ஆம் ஆண்டில் இதன் வேகம் ஆண்டிற்கு சுமார் 35 கிலோமீட்டராகக் குறைந்தது.

## சூரிய ஒளியின்றி உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன் மூலக்கூறு

- பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதியில் ஒளியின்றி உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன் மூலக்கூறு காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இது புவியில் ஆக்ஸிஜன் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறித்த நீண்ட காலக் கருத்துக்கள் மீது சவால் விடுக்கிறது.
- இதுவரையில், சூரிய ஒளி அவசியமான ஒளிச்சேர்க்கை என்ற ஒரு செயல்முறை மூலம் மட்டுமே ஆக்ஸிஜன் உருவாக்கப்படுகிறது என்று கருதப்பட்டது.
- ஹவாய் மற்றும் மெக்சிகோ இடையே உள்ள கடல் தளத்தின் ஒரு பரந்த தட்டையான பகுதியான கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலத்தில் இந்த ஒரு நிகழ்வு கண்டுபிடிக்கப் பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2வது மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பு

- இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரியச் சதுப்பு நிலமான ஆந்திரப் பிரதேசத்தின் கோரிங்கா வனவிலங்கு சரணாலயத்தில் (CWS) அருகி வரும் மீன்பிடிப் பூனை (பிரியோ நைலுரஸ் விவேரிநஸ்) காணப்படுகிறது.
- மீன்பிடிப் பூனைகளின் முதன்முதல் கணக்கெடுப்பின் படி, 2018 ஆம் ஆண்டில், மீன்பிடி பூனைகளின் எண்ணிக்கை 115 ஆக இருந்தது.
- மீன்பிடிப் பூனையின் இரண்டாவது கணக்கெடுப்பு ஆனது இன்னும் சில வாரங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நடந்து வரும் மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பு ஆனது இந்தியாவின் முதல் மீன்பிடிப் பூனைகளுக்கான கழுத்துப் பட்டை அணிதல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தியா-டேஹ்ராடூன் வனவிலங்கு நிறுவனம் ஆனது கழுத்துப் பட்டை அணிவித்தல் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

## 2024 – பருவநிலை நெருக்கடிகள் மிக்க ஆண்டு - ஐ.நா. அறிக்கை

- 2024 ஆம் ஆண்டு ஆனது, மனித நடவடிக்கைகளால் தூண்டப்பட்ட ஒரு தசாப்தத்தில் எதிர்பாராத அளவில் வெப்ப அதிகரிப்பினைத் தூண்டி, இதுவரையில் பதிவான மிக வெப்பமானதாக ஆண்டாக அமைகிறது.
- பசுமை இல்ல வாயு அளவுகள் ஆனது இது வரை பதிவு செய்யப்படாத உச்சநிலையை நோக்கித் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.
- பருவநிலை மாற்றம் ஆனது 2024 ஆம் ஆண்டில் அதிக வெப்பம் பதிவான 41 நாட்களை ஏற்படுத்தியது.
- பருவநிலை மாற்றம் ஆனது, குறைந்தது 3700 பேரின் உயிரைப் பலி வாங்கிய மற்றும் மில்லியன் கணக்கானவர்களை புலம் பெயரச் செய்த 29 வானிலை நிகழ்வுகளில் 26 நிகழ்வுகளை தீவிரமடையச் செய்தது.
- 2025 ஆம் ஆண்டு ஆனது சர்வதேசப் பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டாக நியமிக்கப் பட்டுள்ளதோடு, இந்தக் கருத்தாக்கமானது யுனெஸ்கோ மற்றும் WMO ஆகியவை மூலம் முன் வைக்கப்பட்டது.

## 2005 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் உமிழ்வுக் குறைப்பு

- 2005 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், கார்பன் உமிழ்வானது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.93% குறைந்துள்ளது, அதே நேரத்தில் உமிழ்வின் செறிவும் 36% குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள், நிறுவப்பட்ட மின்சார உற்பத்தித் திறனில் புதைபடிவம் சாரா எரிசக்தி மூலங்களின் பங்கு 46.52% ஆக இருந்தது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மொத்த நிறுவப்பட்ட திறன் 156.25 GW ஆகும்.
- 2023-24 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மூலங்களின் பெரும் பங்கானது உற்பத்தியில் 10.94% ஆகவும் மற்றும் நிறுவப்பட்ட திறனில் சுமார் 14.7 சதவீதத்திற்கும் அதிகமாகவும் அதிகரித்துள்ளன.
- 2022-23 ஆம் நிதியாண்டில் மொத்த இறுதி உற்பத்தி ஆற்றல் நுகர்வில் 48.95% பங்குடன், நாட்டின் மிகப்பெரிய ஆற்றல் நுகர்வுத் துறையாக தொழில்துறை உள்ளது.
- தொழில்துறையில் 15.15% ஆற்றல் பயன்பாட்டுடன் அதிகளவு ஆற்றல் தேவை மிகுந்த பிரிவு இரும்பு மற்றும் எஃகு துறை ஆகும்.
- இரசாயனங்கள் மற்றும் பெட்ரோலிய வேதியியல் துறையானது, சுமார் 4.56% ஆற்றல் பயன்பாட்டினையும், அதைத் தொடர்ந்து கட்டுமானத் துறையானது சுமார் 1.80% ஆற்றல் பயன்பாட்டினையும் கொண்டுள்ளன.
- இதில் எரிசக்தி (75.66%), வேளாண்மை (13.72%), தொழில்துறைச் செயலாக்கம் மற்றும் தயாரிப்புப் பயன்பாடு (8.06%); மற்றும் கழிவுகள் (2.56%) ஆகியவை அதிகளவு கார்பன் உமிழ்வு பதிவாகியுள்ள துறைகளாகும்.

## இந்தியாவில் அதிகப்படியான நைட்ரேட்டுகள் – மத்திய நிலத்தடி நீர் வாரியம்

- இந்தியா முழுவதும் 440 மாவட்டங்களில் நிலத்தடி நீரில் அதிக நைட்ரேட் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

- இது 2017 ஆம் ஆண்டில் 359 மாவட்டங்களாக இருந்தது.
- 20 சதவீத மாதிரிகளில் நைட்ரேட் இருப்பு ஆனது, லிட்டருக்கு 45 மில்லிகிராம் (மி.கி./லி) என்ற அனுமதிக்கப்பட்ட நைட்ரேட் செறிவிற்கும் அதிகமாக உள்ளன.
- 9.04 சதவீத மாதிரிகள் பாதுகாப்பான வரம்பிற்கு மேற்பட்ட ப்ளோரைடு அளவைக் கொண்டிருந்தன.
- 3.55 சதவீத மாதிரிகளில் ஆர்சனிக் மாசுபாடு கண்டறியப்பட்டுள்ளன.
- இராஜஸ்தான், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சேகரிக்கப் பட்டு உள்ள 40 சதவீத மாதிரிகள் வரம்பினை விட மிக அதிக நைட்ரேட் இருப்பினைக் கொண்டதாக உள்ளன.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் 35.74 சதவீதம், தெலுங்கானா மாநிலத்தில் 27.48 சதவீதம், ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 23.5 சதவீதம் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் 22.58 சதவீதம் மாதிரிகளில் அதிக மாசுபாடு இருந்தது.
- உத்தரப் பிரதேசம், கேரளா, ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் மிகவும் குறைந்த சதவீதத்திலான மாதிரிகளே அத்தகைய நைட்ரேட் இருப்பினைக் கொண்டு இருப்பதாகப் பதிவாகியுள்ளன.
- அருணாச்சலப் பிரதேசம், அசாம், கோவா, மேகாலயா, மிசோரம் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் சேகரிக்கப்பட்ட அனைத்து மாதிரிகளும் மிகப் பாதுகாப்பான வரம்புகளுக்குள் இருந்தன.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் புதிய எறும்பு இனங்கள்

- கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஒரு புதிய எறும்பு வகை ஒன்றினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கன்னட மொழியில் ஒனயெலே என்ற சொல்லுக்கு உலர்ந்த இலைகள் என்று பொருள் ஆகும் என்பதோடு இவை மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள காடுகளின் நிலப் பரப்பிற்கு மிக முக்கியமான ஒன்றாக உள்ளன.
- இந்தப் பகுதியில் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் ப்ரோபோலோமிர்மிக்ஸ் ப்ரோக்னே என்ற இனம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த இனம் ஆனது இந்தியாவில் மற்ற இரண்டு இடங்களில் மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளது.

## இந்தியாவின் உமிழ்வு குறித்த தரவுத் தளம்

- இந்தியா சமீபத்தில் அதன் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் (GHG) குறித்த விவரங்கள் மற்றும் அதன் உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய சமீபத்திய அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC) கீழ், வளர்ந்து வரும் நாடுகள் பருவநிலை நடவடிக்கைக்கான தங்கள் முயற்சிகள் பற்றிய விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளன.
- 2005 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உமிழ்வின் செறிவு ஆனது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36% குறைந்துள்ளது.

- இந்தியாவின் மொத்த GHG உமிழ்வுகள் 2,959 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு ($CO_2$) சமமானதாக உள்ளது.
- வனவியல் துறை மற்றும் நில வளங்களின் கார்பன் பிடிப்பினைக் கணக்கிட்ட பிறகு, நாட்டின் நிகர உமிழ்வு ஆனது 2,437 மில்லியன் டன்கள் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு ($CO_2$) சமமானதாக இருந்தது.
- மொத்தத் தேசிய உமிழ்வுகள் (நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம் மற்றும் வனவியல் உட்பட) 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 7.93% குறைந்துள்ளது.
- அதேசமயம், 1994 ஆம் ஆண்டு முதல் இது 98.34% அதிகரித்துள்ளது.
- இந்த உமிழ்வுகளில் $CO_2$ மட்டும் 80.53 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து மீத்தேன் (13.32%), நைட்ரஸ் ஆக்சைடு (5.13%) மற்றும் இதர மற்றவை 1.02% பங்கினைக் கொண்டுள்ளன.
- எரிசக்தி துறையில் இருந்து அதிகபட்சமாக 75.66% உமிழ்வுகள் பதிவாகியுள்ளது.
- உமிழ்வுகளில் வேளாண் துறை 13.72 சதவீதமும், தொழில்துறைச் செயலாக்கங்கள் மற்றும் தயாரிப்பு பயன்பாடு மற்றும் கழிவுத் துறை ஆகியவை முறையே 8.06% மற்றும் 2.56 சதவீதமும் பங்களித்துள்ளன.
- எரிசக்தி துறையின் உமிழ்வில் மின்சார உற்பத்தி மட்டும் 39% பங்கினைக் கொண்டு உள்ளது.

## உலகின் முதல் ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இளம் பவளப் பாறைகள்

- உலகின் முதல் அதிகுளிர்வூட்டப்பட்ட காப்பு முறையில் உருவாக்கப்பட்ட பவளப் பாறைகள் பெருந்தடுப்புப் பவளப்பாறை திட்டுகளில் உள்ள புதிய மற்றும் மிகவும் இயற்கையான பகுதிகளில் வெற்றிகரமாக நிலை பெற்றுள்ளன.
- அவை மிகவும் அதிகுளிர்வூட்டப்பட்ட காப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்கப் படுகின்றன என்பதோடு இந்தச் செயல்முறையில் பவள செல்கள் மற்றும் திசுக்கள் மிகக் குறைந்த வெப்பநிலையில் உறைய வைக்கப் படுகின்றன.
- அதிகுளிர்வூட்டப்பட்ட காப்பு நுட்பமானது, உறைவிக்கப்படும் போது செல்களிலிருந்து தண்ணீரை அகற்றவும், அந்த உறைபனிகள் உருகும்போது செல் கட்டமைப்புகளுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்கவும் அதிகுளிர்வூட்டப்பட்ட காப்புப் பொருட்களைப் பயன்படுத்துகிறது.
- பருவநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்காக ஆண்டுதோறும் வெப்பத்தைத் தாங்கும் மில்லியன் கணக்கான பவளப் பாறைகளை நிலை நிறுத்தச் செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

## உலகளாவிய பல் வகைப்பாட்டு நன்னீர் வாழ் விலங்கின மதிப்பீடு

- IUCN அமைப்பின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களை உள்ளடக்கிய செந்நிறப் பட்டியலுக்கான முதல் உலகளாவிய பல் வகைப்பாட்டு நன்னீர் வாழ் விலங்கின மதிப்பீடு ஆனது சமீபத்தில் நடத்தப்பட்டது.
- இது மேற்குத் தொடர்ச்சி மலைகளை, மிக அச்சுறுத்தலுக்கு உள்ளான நன்னீர் வாழ் இனங்கள் மிகுதியாக உள்ள ஒரு முக்கிய இடமாக அடையாளம் கண்டுள்ளது.

- இந்த விரிவான ஒரு உலகளாவிய மதிப்பீடு ஆனது 23,496 பத்துக் கால்களை உடைய ஒடுடைய இனங்கள், மீன்கள் மற்றும் தட்டான் இனங்களை உள்ளடக்கியது.
- கி.பி 1500 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ கால் பகுதி நன்னீர் இனங்களானது அதிக அழிவுரும் அபாயத்தை எதிர்கொள்கின்றன என்பதோடு மேலும் 89 இனங்கள் அழிந்து விட்டதாக உறுதிப்படுத்தப் பட்டதாகவும் மற்றும் 187 இனங்கள் அழிவிற்குள்ளாக உள்ளதாகவும் பதிவாகியுள்ளன.
- நன்னீர் வாழ் பத்துக்காலிகள், மீன்கள் மற்றும் தட்டான் இனங்களில், அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களில் 54% ஆனது மாசுபாட்டால் பாதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் 39% இனங்கள் அணைகள் மற்றும் நீரேற்ற பிரித்தெடுத்தல் அமைப்புகளால் பாதிக்கப்படுகின்றன.
- வேளாண்மையுடன் நெருங்கியது தொடர்புடைய நிலப் பயன்பாடு மாற்றம் ஆனது, இந்த உயிரினங்களில் சுமார் 37% இனங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது, மேலும் ஊடுருவல் இனங்கள் மற்றும் நோய்களின் தாக்கம் ஆனது 28% இனங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

## புவி வெப்பமடைதல் வரம்பு மீறப்பட்ட முதல் ஆண்டு

- தொழில்துறைக்கு முந்தையக் காலத்தில் இருந்த பதிவினை விட 2024 ஆம் ஆண்டில் முதல் முறையாக ஆண்டிற்கான சராசரி உலக வெப்பநிலையானது 1.5°C அளவினைத் தாண்டியது.
- உலக வானிலை அமைப்பின் (WMO) மதிப்பீடு ஆனது, 1850 முதல் 1900 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டமானது தொழில்துறைக்கு முந்தைய அடிப்படை பதிவினை வழங்கப் பயன்படுத்தப்படுவதுடன், ஆறு தரவுத் தொகுப்புகளிலிருந்து பெறப்பட்ட சராசரி உலக வெப்பநிலையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது.
- சராசரி உலக வெப்பநிலையான 15.1 டிகிரி செல்சியஸ் ஆனது - 1991-2020 என்ற காலக் கட்டத்தின் சராசரியை விட 0.72 டிகிரி அதிகமாகவும், முந்தைய அதிகளவு வெப்ப நிலையாக பதிவான 2023 ஆம் ஆண்டிற்கான பதிவினை விட 0.12 டிகிரி அதிகமாகவும் இருந்தது.

## புதிய இந்தோ-பர்மிய எறும்புத் திண்ணி இனங்கள்

- அறிவியல் ஆய்வாளர்கள் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் புதிய இந்தோ-பர்மிய எறும்புத் திண்ணி (மானிஸ் இந்தோபர்மனிகா) இனங்களை அடையாளம் கண்டு ள்ளனர்.
- இது சுமார் 3.4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட சீன எறும்புத் திண்ணி (மானிஸ் பென்டாடாக்டைலா) இனத்திலிருந்து வேறுபட்டதாகும்.
- இவை நேபாளம், பூடான், மியான்மர் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அசாம் ஆகியப் பகுதிகளில் காணப்பட்டன.

## இந்திய நகரங்களின் காற்றுத் தர முன்னேற்ற அறிக்கை 2025

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது, இந்தியா முழுவதும் உள்ள நகரங்களுக்கான சமீபத்திய காற்றுத் தரக் குறியீட்டு (AQI) தரவை வெளியிட்டுள்ளது.
- மோசமான மற்றும் மிகவும் மாசுபட்ட காற்றுத் தரக் குறியீட்டின் பட்டியலில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.

- அதைத் தொடர்ந்து காஜியாபாத், பைர்னிஹாட் மற்றும் சண்டிகர் ஆகியவை உள்ளன.
- தமிழ்நாட்டின் திருநெல்வேலி சிறந்த மற்றும் தூய்மையான காற்றுத் தரத்தைக் கொண்டுள்ளது.
- தூய்மையான காற்றுத் தரப் பட்டியலில் தஞ்சாவூர் 5வது இடத்தைப் பிடித்துள்ளது.

## கரையோரப் பறவைகளின் எண்ணிக்கை

- கேரள மாநில அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஈர நிலங்களின் வளத்தினுடைய மிக முக்கியக் குறிகாட்டிகளான கரையோரப் பறவைகளின் (உணவைத் தேடி நீரில் அலையும் நீண்ட கால்கள் கொண்ட பறவைகள்) எண்ணிக்கை 2010-2019 ஆம் ஆண்டு வரையிலான தசாப்தத்தில் குறைந்துள்ளதாகக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியாளர்கள் பொதுவாகக் காணப்படும் ஆறு கரையோரப் பறவை இனங்களைக் கண்காணித்தனர்.
- இந்த ஆறு இனங்களும் பருவமழைக்குப் பிந்தைய காலங்களில் அதிக அளவிலும், மழைக் காலங்களில் மிகக் குறைந்த அளவிலும் பரவிக் காணப்படுகின்றன.

## 2025 ஆம் ஆண்டில் லா நினா நிலைகள்

- பசிபிக் பெருங்கடலில் லா நினா நிலைகள் இறுதியாக வெளிப்பட்டுள்ளன.
- மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை என்பது சராசரிக்கும் குறைவாக உள்ளது.
- லா நினா என்பது எல் நினோ தெற்கு அலைவு (ENSO) என்று அழைக்கப்படுகிறது.
- மத்திய மற்றும் கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலில் கடல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களால் வகைப்படுத்தப்படும் இந்தப் பருவநிலை நிகழ்வு ஆனது, வளி மண்டலத்தின் மேல்மட்ட நிலையில் நிலவும் ஏற்ற இறக்கங்களுடன் சேர்ந்து நிகழ்கிறது.
- ENSO ஆனது உலகளாவிய வளிமண்டலச் சுழற்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தி, அதை மாற்றி யமைத்து மற்றும் அதில் குறுக்கீடுகளை ஏற்படுத்துகிறது, இது உலகளவில் நிலவும் வானிலையில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- ENSO ஆனது சூடான பரப்பு (எல் நினோ), குளிர் பரப்பு (லா நினா) மற்றும் நடுநிலை என மூன்று கட்டங்களைக் கொண்டுள்ளது என்பதோடு இவை சுமார் இரண்டு முதல் ஏழு ஆண்டுகள் வரையில் ஒழுங்கற்ற சுழற்சிகளில் நிகழ்கின்றன.
- லா நினா என்ற நிகழ்வானது கடைசியாக 2020-2023 ஆம் ஆண்டிலும், எல் நினோ நிகழ்வானது 2023-24 ஆம் ஆண்டிலும் ஏற்பட்டது.

## DDT - மாசுபட்ட மண் மீட்சி

- DDT அல்லது டை-குளோரோ-டை-ஃபீனைல்-ட்ரை-குளோரோ-ஈத்தேன் ஆனது 1939 ஆம் ஆண்டில் ஒரு பூச்சிக்கொல்லியாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது மிகப் பரந்த அளவிலான பூச்சிகளுக்கு எதிராக சிறந்த செயல்திறனைக் கொண்டு உள்ளது, ஆனால் அதன் நீண்டகாலப் பயன்பாட்டிற்குப் பிறகு இது அம்மண்ணைச் சிதைத்து, அதை வளமிழக்கச் செய்கிறது.

- அந்த வளமிழப்புகளை மீளச் செய்வதற்கு என, DDT-மாசுபட்ட மண்ணினை, உயிரியக் கரிமத்துடன் கலக்கும் போது, அது மீண்டும் வளத்தைப் பெற முனைகிறது என்பதை சுவீடன் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பண்புகளில் நிலக்கரியைப் போன்ற இந்த உயிரியக் கரிமம் ஆனது தனது உற்பத்திச் செலவினம் குறைந்தது என்பதால் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்பு ஆகும்.

## இந்தியாவில் HCFC நிலை

- 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்தியாவானது உற்பத்தியில் ஹைட்ரோ குளோரோ ஃப்ளூரோகார்பன்களை படிப்படியாக நிறுத்தியுள்ளது.
- இந்த ஒரு படிப்படியான வெளியேற்றம் ஆனது 1987 ஆம் ஆண்டு மாண்ட்ரியல் என்ற நெறிமுறையின் கீழ் உள்ள இலக்குகளின் ஒரு பகுதியாகும்.
- இந்த சர்வதேச ஒப்பந்தம் ஆனது ஓசோன் சிதைப்புப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- HCFC ஆனது கார்பன், ஹைட்ரஜன், குளோரின் மற்றும் ஃப்ளோரின் ஆகியவற்றால் ஆன இரசாயன சேர்மங்களாகும்.
- அவை கனமற்ற இரப்பர் பொருள், குளிர்பதனம் மற்றும் காற்றுப் பதனம் தொழில் துறைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- CFCகள் மற்றும் HCFCகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் மற்றொரு தனிமம் ஹைட்ரோஃப்ளூரோகார்பன் (HFC) ஆகும்.
- அவை பொதுவாக குளிர்பதனம், காற்றுப் பதனம் (AC), கட்டிட வெப்பக்காப்பு, தீ அணைக்கும் அமைப்புகள் மற்றும் தூசிப் படலங்களில் பயன்படுத்தப்படுகின்றன.
- 2016 ஆம் ஆண்டில், மாண்ட்ரியல் நெறிமுறையானது, பங்குதாரர் நாடுகள் HFCகளின் பயன்பாட்டையும் கட்டுப்படுத்த என்று ஒப்புக் கொண்ட கிகாலி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது.
- கிகாலி ஒப்பந்தம் ஆனது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு 2036 ஆம் ஆண்டிலும், வளரும் நாடுகளுக்கு 2047 ஆம் ஆண்டிலும் HFCகளை படிப்படியாகக் குறைக்க ஒரு இலக்கை நிர்ணயித்தது.
- இந்தியாவானது 1991 ஆம் ஆண்டில் ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதற்கான வியன்னா உடன்படிக்கையில் ஒரு பங்குதாரராக மாறியது என்பதோடு மேலும், 1992 ஆம் ஆண்டில் மாண்ட்ரியல் நெறிமுறையில் கையெழுத்திட்டது.

## மேற்குத் தொடர்ச்சி மலைகளில் புதிய பெருஞ்சிலந்தி இனங்கள்

- இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில், ஒரு புதிய பேரினம் உட்பட நான்கு புதிய வகை பெருஞ்சிலந்தி இனங்களை/டரான்டுலாக்களை ஆராய்ச்சியாளர் ஒருவர் விவரித்துள்ளார்.
- சிலந்திக்கான தமிழ்ச் சொல்லினைக் கொண்டு பெயரிடப்பட்ட சிலந்திகா எனப்படும் டரான்டுலா முற்றிலும் புதிய வகையாகும்.
- ஹாப்லோக்ளாஸ்டஸ் பிராட்டோகொலோனஸ் ("மரத்தில் வசிக்கும் இனம்" என்று பொருள்படும்) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இரண்டாவது புதிய இனம் ஆனது, ஆறுகளின் ஓரங்களில் உள்ள உள் வெற்றிடம் கொண்ட மரங்களில் வசிப்பிடங்களை உருவாக்குகின்றது.

- மற்றொரு இனமான ஹாப்லோக்ளாஸ்டஸ் மொன்டனஸ், மலைக் காடுகளில் 2,000 மீட்டர் (6,600 அடி) க்கும் அதிகமான உயரத்தில் வாழ்வது கண்டறியப்பட்டது.
- இது இப்பகுதியில் அறியப்பட்ட மிக உயரமான இடத்தில் வாழும் டரான்டுலாக்களில் ஒன்றாகும்.
- சுமார் 1,264 காற்றை சுவாசிக்கும் எண்காலி இனங்கள் தற்போது உலகளவில் சட்ட விரோதமாக வர்த்தகம் செய்யப்படுகின்றன.

## வெங்காயத் தாமரை ஊடுருவல் – கென்யா

- உலகின் மிகவும் பரவலான ஊடுருவல் அயல் இனமான வெங்காயத் தாமரையானது, கென்யாவின் நைரோபி நகரில் உள்ள நைவாஷா ஏரி முழுவதும் பரவிக் காணப் படுகிறது.
- வெங்காயத் தாமரை ஆனது தென் அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்டதோடு அவை, 1980 ஆம் ஆண்டுகளில் கென்யாவில் அறிமுகப் படுத்தப்பட்டதாகக் கூறப் படுகிறது.
- வெங்காயத் தாமரை ஆனது அறிவியல் ரீதியாக இச்சோர்னியா கிராசிப்ஸ் என்று அழைக்கப்படுகிறது.
- இது இந்தியா உட்பட தெற்காசியா முழுவதும் உள்ள நீர்நிலைகளில் மிகப் பொதுவாக காணப் படும் ஒரு நீர்வாழ் களை தாவரமாகும்.
- இது பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது தென் அமெரிக்காவிலிருந்து ஒரு அலங்கார நீர்வாழ் தாவரமாக இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது.

## கங்கை நதி ஓங்கில்களின் பாதுகாப்பு நிலை 2025

- கங்கை நதிப் படுகையில் சுமார் 3,936 கங்கை நதி ஓங்கில்கள் (763 என்ற கணிப்புத் திட்டப் பிழையுடன்) இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இக்கணக்கெடுப்பின் போது 2,510 ஓங்கில்கள் காணப் பட்ட ஒரு நிலையில் அவற்றில் 1,303 ஓங்கில்கள் உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் வரையிலான கங்கை நதிப் பகுதிகளில் காணப்பட்டன.
- இது 1996 ஆம் ஆண்டு சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டது.
- தேசியக் கங்கை நதிப் படுகை ஆணையம் ஆனது, கங்கை நதி ஓங்கிலை 2010 ஆம் ஆண்டில் தேசிய நீர்வாழ் விலங்காக அறிவித்தது.

## கர்நாடகாவின் முதல் ஓநாய் சரணாலயம்

- அருகி வரும் இந்திய ஓநாய்கள், கர்நாடக மாநிலத்தின் பங்கபூர் ஓநாய் வனவிலங்குச் சரணாலயத்தில் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றன.
- இந்தச் சரணாலயத்தில் இந்தியச் சாம்பல் நிற ஓநாய் இனங்கள் காணப்படுகின்றன என்ற நிலையில் அங்குள்ள ஓநாய்களில் ஒன்று சமீபத்தில் எட்டு குட்டிகளை ஈன்றது.
- இந்தச் சரணாலயத்தில் ஓநாய்கள், சிறுத்தைகள், மயில்கள், புல்வாய்கள், நரிகள், முயல்கள் மற்றும் முள்ளம்பன்றிகள் உள்ளிட்ட பல்வேறு வனவிலங்கு உயிரினங்கள் காணப் படுகின்றன.

## அந்தமானில் இரத்தம் உறிஞ்சும் ஈக்கள்

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் 23 வகையான இரத்தம் உறிஞ்சும் ஈக்கள் இருப்பதை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ள நிலையில் இதில் இந்தியாவில் முன்னர் பதிவு செய்யப்படாத 13 இனங்கள் அடங்கும்.
- உள்ளூரில் 'பூசி ஈக்கள்' என்று அழைக்கப்படும் இந்தப் பூச்சிகள் குலிகாய்ட்ஸ் என்ற பேரினத்தைச் சேர்ந்தவை என்பதோடு, அவற்றின் உணவு உட்கொள்ளும் பழக்கத்தில் கொசுக்களைப் போலவே அவை உள்ளன.
- அவை முதன்மையாக செம்மறி ஆடுகள், ஆடுகள் மற்றும் மாடுகள் போன்ற கால் நடைகளின் ரத்தத்தையும், மான்கள் போன்ற காட்டு விலங்குகளின் ரத்தத்தினையும் உறிஞ்சுகின்றன.
- அவற்றில் ஐந்து இனங்கள் கால்நடைகளுக்கு ஆபத்தான நீல நாக்கு நோய் வைரஸைப் பரப்பக் கூடியவை.
- இதில் அடையாளம் காணப்பட்ட 23 இனங்களில் சுமார் 17 இனங்கள் மனிதர்களையும் கடிக்கின்றன, இருப்பினும் இது வரை மனித நோய்ப் பரவல் எதுவும் பதிவாகவில்லை.

## 2024 ஆம் ஆண்டில் பிரேசில் காட்டுத்தீ

- இத்தாலி அல்லது இந்தியாவில் உள்ள மகாராஷ்டிரா மாநிலத்தின் அளவை ஒத்த 30.87 மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமான வனப்பகுதியானது இங்கு காட்டுத் தீ மூலம் தீக்கிரையானது.
- 17.24 மில்லியன் ஹெக்டேர் அழிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு காட்டுத் தீயில் எரிந்த சம்பவத்திற்குப் பிறகு 79 சதவீதம் அதிகரிப்பு பதிவானது, அதாவது 13.63 மில்லியன் ஹெக்டேர் பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது, 18.08 மில்லியன் ஹெக்டேர் எரிந்து நாசமான 2019 ஆம் ஆண்டு காட்டுத்தீ பாதிப்பிற்குப் பிறகு பதிவான மிக அதிகப் பரப்பிலான பாதிப்பு ஆகும்.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் போது, ஒரே மாதத்தில் சுமார் 10.63 மில்லியன் ஹெக்டேர் தீயில் அழிந்தன.
- 17.9 மில்லியன் ஹெக்டேர்கள் பாதிக்கப்பட்டதுடன் அமசோனியா மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து சுமார் 9.7 மில்லியன் ஹெக்டேர் பாதிப்புடன் செராடோவும், சுமார் 1.9 மில்லியன் ஹெக்டேர் பாதிப்புடன் பன்டனாலும், 1 மில்லியன் ஹெக்டேர் பாதிப்புடன் மத்த மட்டா அட்லாண்டிகா பகுதியும் உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வணிகம் செய்வதற்கான தயார் நிலை (B-READY) அறிக்கை 2024

- உலக வங்கியானது வணிகம் செய்வதை எளிதாக்குதல் அறிக்கைக்கு மாற்றாக 2024 ஆம் ஆண்டு வணிகம் செய்வதற்கான தயார் நிலை (B-READY) குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- வணிகப் பிரிவில், சிங்கப்பூர் போன்ற நாடுகள் ஒரு நாளுக்குள் குறைந்த செலவில் இயங்கலை வழி வணிகப் பதிவு சேவையினை வழங்குகின்றன.
- இந்தியாவில், வணிக நிறுவனங்கள் இன்றும் பல படிநிலைகள் மற்றும் முழுமையற்ற எண்ணிம ஒருங்கிணைப்பு செயல்முறைகளை எதிர்கொள்கின்றன.
- இந்த அறிக்கையானது, ஒவ்வொரு பொருளாதாரத்திற்கும் பிரிவு சார் மதிப்பெண்கள் மற்றும் துணைப் பிரிவு சார் மதிப்பெண்கள் என இரண்டு தொகுப்பு மதிப்பெண்களை உருவாக்குகிறது.
- எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு B-READY அறிக்கையில் இந்தியா பங்கேற்கவில்லை.

## IPBES நெக்ஸஸ் அறிக்கை

- இந்த அறிக்கையானது பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் (IPBES) மீதான அரசுகளுக்கிடையேயான தளத்தினால் வெளியிடப்பட்டது.
- பல்லுயிர்ப்பெருக்கம், நீர், உணவு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகள் பற்றிய ஒரு மதிப்பீட்டு அறிக்கையானது நெக்ஸஸ் அறிக்கை என்றும் அழைக்கப் படுகிறது.
- கடந்த 30-50 ஆண்டுகளில் பதிவான பல்லுயிர்ப்பெருக்க வீழ்ச்சி ஒரு தசாப்தத்திற்கு 2-6% ஆகும்.
- அதிகரித்து வரும் தொற்று நோய்களில் சுமார் 50% ஆனது, சுற்றுச்சூழல் அமைப்பு, விலங்கு மற்றும் மனித ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளால் உருவாகின்றன.
- தற்போதையப் பொருளாதார நடவடிக்கைகளின் கணக்கிடப்படாதச் செலவினங்கள் ஆண்டிற்கு குறைந்தது 10-25 டிரில்லியன் டாலர் ஆகும்.

## அச்சுறுத்தல் குறித்த அறிக்கை 2024

- 2024 ஆம் ஆண்டில் 95 நிறுவனங்கள் தரவுத் திருட்டுக்குப் பலியாகியுள்ளதையடுத்து, உலகளவில் இணையவெளிக் குற்றத் தாக்குதல்களுக்கு மிக அதிகம் இலக்காக குறி வைக்கப் படும் இரண்டாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- 140 தாக்குதல்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- தற்போதைய புவிசார் அரசியல் பதட்டங்கள் காரணமாக சுமார் 57 தாக்குதல்களுடன் இஸ்ரேல் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ஹை-டெக் குழுமத்திடமிருந்து 850 மில்லியன் இந்தியக் குடிமக்களின் தரவுகள், ஸ்டார் ஹெல்த் மற்றும் அலைடு இன்சூரன்ஸ் பெரு நிறுவனத்தின் வாடிக்கையாளர் தரவுகள் மற்றும் டெலிகம்யூனிகேஷன்ஸ் இந்தியா நிறுவனத்திடமிருந்து சுமார் 2TB அளவிலான முக்கியத் தகவல்கள் கசிவு ஆகியவை முக்கிய விதி மீறல்களில் அடங்கும்.

## உலகளாவிய நீர் கண்காணிப்பு அறிக்கை 2024

- ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகத்தினால் (ANU) 2024 ஆம் ஆண்டு உலகளாவிய நீர்க் கண்காணிப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும், நீர் தொடர்பான பேரழிவுகள் சுமார் 8,700க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி வாங்கியுள்ளதோடு, இதனால் சுமார் 40 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.
- இது 550 பில்லியன் டாலருக்கும் அதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்தியது.
- குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் பிரேசில், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பேரழிவுகரமான வெள்ளப் பெருக்கு ஆகியவை அடங்கும்.
- 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியுடன் ஒப்பிடச் செய்கையில், 2024 ஆம் ஆண்டில் மாதாந்திர மழைப்பொழிவு ஆனது 27% அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- தினசரி மழைப் பதிவு ஆனது 52% அதிகரித்துள்ளது.
- மாறாக, குறைவான மழைப்பொழிவு பதிவுகளும் அடிக்கடி பதிவாகின.

## எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் குறித்த அறிக்கை 2025

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, 'எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் குறித்த அறிக்கை 2025' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 170 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் மற்றும் 92 மில்லியன் வேலை வாய்ப்புகள் இழக்கப்படும் என்ற நிலையில் இதன் விளைவாக 2030 ஆம் ஆண்டிற்குள் நிகர அளவில் 78 மில்லியன் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.
- பெருந்தரவு நிபுணர்கள், நிதி தொழில்நுட்ப பொறியாளர்கள், செயற்கை நுண்ணறிவு & இயந்திர கற்றல் நிபுணர்கள், மென்பொருள் & செயலி உருவாக்குநர்கள் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை நிபுணர்கள் ஆகியோர் வேகமாக அதிகரித்து வரும் முதல் 5 வேலைவாய்ப்புகளில் அடங்குவர்.
- உலகளாவியப் பணியாளர்களில் 59% பேருக்கு போட்டித்தன்மையுடன் இருக்க 2030 ஆம் ஆண்டிற்குள் மறு திறனாக்கம் அல்லது திறன் மேம்பாடு தேவைப்படும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் பண்ணைத் தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவில் நன்கு அதிகரித்து வரும் வேலைவாய்ப்புகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர் என்ற ஒரு நிலையில் மேலும் 2030 ஆம் ஆண்டிற்குள் கூடுதலாக சுமார் 35 மில்லியன் வேலை வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## WEF உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டுமானி 2025

- உலகப் பொருளாதார மன்றத்தின் 2025 ஆம் ஆண்டு உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டு நடவடிக்கையானது ஜெனீவா நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மிக நன்கு அதிகரித்துள்ள புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் உறுதியற்ற தன்மை காரணமாக சர்வதேச ஒத்துழைப்பு தேக்கமடைந்துள்ளது என்பதை இது மிகவும் நன்கு வெளிப்படுத்துகிறது.
- உலகளாவிய ஒத்துழைப்பின் தற்போதைய நிலையை ஐந்து பிரிவுகளுடன் மதிப்பிடச் செய்வதற்காக இந்த மதிப்பீட்டுமானி 41 குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது-

- வர்த்தகம் மற்றும் மூலதனப் பாய்வுகள்,
- புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம்,
- பருவநிலை மற்றும் இயற்கை மூலதனம்,
- சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, மற்றும்
- அமைதி மற்றும் பாதுகாப்பு.

## ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீடு 2025

- உலகளாவிய கடவுச்சீட்டு குறியீட்டில் இந்தியாவின் தரவரிசையானது ஐந்து புள்ளிகள் குறைந்து இந்த ஆண்டு 85 ஆக உள்ளது.
- ஒரு இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர் 57 இடங்களுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணிக்கலாம்.
- இந்தக் குறியீட்டில் சிங்கப்பூர் நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் 199 வெவ்வேறு கடவுச் சீட்டுகள் மற்றும் 227 வெவ்வேறு பயண இடங்கள் அடங்கும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தக் குறியீட்டின் படி, பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசத்தின் தரவரிசை முறையே 103வது (2024 ஆம் ஆண்டில் 101வது) மற்றும் 100வது (2024 ஆம் ஆண்டில் 97வது) இடத்தில் இருந்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை உலகளவில் 80வது இடத்தில் இருந்தது.
- இந்த ஆண்டு ஜப்பானின் தரவரிசை 2வது இடத்தில் உள்ளதோடு இது 2018-2023 ஆம் ஆண்டு வரை அது முதலிடத்தில் இருந்தது.
- 2024 ஆம் ஆண்டில், ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இரண்டு நாடுகளும் இதில் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டன.

## ஐநா சபையின் உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை 2025

- உலகளாவியப் பொருளாதார வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டில் 2.8% ஆகவும், 2026 ஆம் ஆண்டில் 2.9% ஆகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.8% விகிதத்திலிருந்து மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட அளவிலிருந்து பெரும்பாலும் மாறவில்லை.
- 2024 ஆம் ஆண்டில் 4.9% ஆகவும், 2025 ஆம் ஆண்டில் 4.8% ஆகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதையடுத்து, சீனாவின் பொருளாதார வளர்ச்சி மிகப் படிப்படியான பொருளாதார மாற்றத்தினை எதிர்கொள்கிறது.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 6.8% வளர்ச்சியடைந்த இந்தியப் பொருளாதாரம் ஆனது, முதன்மையாக வலுவான தனியார் நுகர்வு மற்றும் முதலீடுகளின் ஆதரவுடன் 2025 ஆம் ஆண்டில் 6.6% விரிவடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியப் பொருளாதாரம் ஆனது 2026 ஆம் ஆண்டில் சுமார் 6.8% வளர்ச்சி நிலைக்குத் திரும்பும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் நுகர்வோர் விலை பணவீக்கம் ஆனது 2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 4.8 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டில் 4.3% ஆகக் குறையும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

## உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்ட அறிக்கை 2025

- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது (ILO) ஜெனீவாவில் உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்: போக்குகள் 2025 என்ற அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய வேலைவாய்ப்பு ஆனது தொழிலாளர் வளத்திற்கு ஏற்ப வளர்ச்சியடைந்ததாகவும், அது வேலைவாய்ப்பின்மை விகிதத்தினைச் சுமார் 5 சதவீதத்திலேயே நிலையாக வைத்திருந்ததாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- இருப்பினும், இளையோர் வேலைவாய்ப்பின்மை விகிதம் சுமார் 12.6% ஆக அதிகமாக இருந்ததால் சிறிதளவு முன்னேற்றமே பதிவாகியுள்ளது.
- பொருளாதார வளர்ச்சியானது, 2024 ஆம் ஆண்டில் 3.2% ஆக இருந்தது, இது 2023 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் முறையே 3.3 மற்றும் 3.6% ஆக இருந்தது.
- வேலை செய்ய விரும்பும் ஆனால் வேலைவாய்ப்பு இல்லாதவர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 402 மில்லியனை எட்டியது.
- இதில் 186 மில்லியன் வேலைவாய்ப்பற்றோர், 137 மில்லியன் தற்காலிகமாக வேலை செய்ய முடியாதவர்கள் மற்றும் வேலை தேடுவதை நிறுத்திய 79 மில்லியன் ஊக்கம் இழந்தத் தொழிலாளர்கள் அடங்குவர்.
- கல்வி, வேலைவாய்ப்பு அல்லது அதன் பயிற்சியில் (NEET) இல்லாத இளையோர்களின் விகிதங்கள் அதிகரித்துள்ளன.
- மிக குறைவான வருமானம் கொண்ட நாடுகளில், இளையோர்களின் NEET விகிதங்கள் பெருந்தொற்றிற்கு முந்தைய நிலைகளை விட 4 சதவீத புள்ளிகள் அதிகரித்துள்ளன.
- இந்த ஒரு நிலையானது 2024 ஆம் ஆண்டில் 15.8 மில்லியன் இளைஞர்களையும் 28.2 மில்லியன் இளம் பெண்களையும் பாதித்தது.

## QS அமைப்பின் உலக எதிர்காலத் திறன்கள் குறியீடு 2025

- செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பசுமை நுட்பம் சார்ந்தத் திறன்கள் உள்ளிட்ட எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கான தயார்நிலையின் அடிப்படையில் அமெரிக்க நாட்டிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- கல்வி திறன்கள் மற்றும் முதலாளிகளின் தேவைகளுக்கு இடையிலான ஒருங்கமைவு, கல்வியியல் தயார்நிலை மற்றும் பொருளாதார மாற்றம் போன்ற சில ஒட்டுமொத்த குறிகாட்டிகள் அடைப்படையில் உலகளவில் இந்தியா 25வது இடத்தைப் பிடித்தது.
- இந்த அறிக்கையின்படி இந்தியாவின் ஒட்டுமொத்தத் தரவரிசையானது, அதை "எதிர் கால திறன்களில் போட்டித்தன்மை மிக்கது" என்ற நிலையில் வைக்கிறது.
- இதில் முதல் பத்து இடங்களில் உள்ள அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகள் "எதிர்கால திறனில் முன்னோடியான நாடுகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையில் 'வேலை வாய்ப்பின் எதிர்காலம்' என்ற குறிகாட்டியில் இந்தியா இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது.

## உலகளாவிய அபாயம் குறித்த அறிக்கை 2025

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, அதன் சமீபத்திய 2025 ஆம் ஆண்டு உலகளாவிய அபாய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தவறான தகவல் மற்றும் பொய்யான தகவல் ஆனது அடுத்து வரவிருக்கும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் கடுமையான உலகளாவிய அபாயமாக பார்க்கப்படுகிறது.
- தீவிர வானிலை நிகழ்வுகள் இரண்டாவது கடுமையான அபாயமாக உள்ளன என்ற ஒரு நிலையில் அரசு அடிப்படையிலான ஆயுத மோதல் மூன்றாவது பெரிய அச்சுறுத்தலாக பார்க்கப்படுகிறது.
- அடுத்தப் பத்தாண்டுகளில், தீவிர வானிலை நிகழ்வுகள் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன.
- அதைத் தொடர்ந்து பல்லுயிர்ப் பெருக்க இழப்பு, பூமியின் அமைப்புகளில் மிகவும் முக்கியமான மாற்றம் மற்றும் இயற்கை வளங்களின் மீதான பெரும் பற்றாக்குறை ஆகியவை உள்ளன.
- 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முதல் அறிக்கையிலிருந்து, தீவிர வானிலை நிகழ்வுகள் "சுற்றுச்சூழல் சார் அபாயங்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த நிகழ்வுகள் ஆனது 2014 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் முதல் ஆறு அபாயங்களில் ஒன்றாக முன்னேறியுள்ளன.
- இது 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை பெருமளவிலான உலகளாவிய அபாயமாக தர வரிசைப்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டில் மீண்டும் அந்த நிலையைப் பெற்றுள்ளது.
- குறுகிய காலத்தில் (2025-2027), தீவிர வானிலை நிகழ்வுகள் ஆனது இரண்டாவது மிகக் கடுமையான உலகளாவிய அபாயமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த நிகழ்வுகள் தற்போது 28 நாடுகளில் முதல் ஐந்து குறுகிய கால அபாயங்களுள் பட்டியலிடப் பட்டுள்ளன என்பதோடு இது கடந்த ஆண்டு 24 நாடுகளில் பட்டியலிடப் பட்டது.

## உலகளாவிய நம்பிக்கைக் குறியீடு 2025

- அரசாங்கம், வணிகங்கள், ஊடகங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இந்தியாவானது ஒரு இடம் சரிந்து மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது.
- அதிக வருமானம் கொண்ட நாடுகளின் குழுவில், இந்தோனேசியா, சவுதி அரேபியா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா நான்காவது இடத்தில் இருந்தது.
- மிகவும் குறைவான வருமானம் கொண்ட ஒரு மக்கள் தொகையானது, சீனா மற்றும் இந்தோனேசியாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவை மூன்றாவது மிகவும் நம்பகமான நாடாக மாற்றியது.
- இந்தியாவினைத் தலைமையகமாகக் கொண்ட சில நிறுவனங்களின் மத்தியில் மற்ற நாடுகளில் உள்ள மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இந்தியா 13வது இடத்தில் உள்ளது.
- வெளிநாட்டுத் தலைமையகங்களைக் கொண்ட நிறுவனங்களின் பட்டியலில் கனடா முதலிடத்தில் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து ஜப்பான், ஜெர்மனி, ஐக்கியப் பேரரசு, பிரான்சு மற்றும் அமெரிக்கா ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- மெக்சிகோ, தென்னாப்பிரிக்கா, சவுதி அரேபியா, சீனா மற்றும் பிரேசில் ஆகியவை இந்தியாவை விட உயர்ந்த தரவரிசையில் உள்ளன.
- நம்பிக்கைக் குறியீட்டில், உலகின் மிகப் பெரிய 10 நாடுகளில் ஐந்து நாடுகள் ஆனது, ஜப்பான் (37% குறைந்த நம்பிக்கை), ஜெர்மனி (41%), ஐக்கியப் பேரரசு (43%), அமெரிக்கா (47%) மற்றும் பிரான்சு (48%) என்ற வகையில் குறைந்த நம்பிக்கை கொண்ட நாடுகளுள் அடங்கும்.
- வளர்ந்து வரும் நாடுகள் அதிக நம்பிக்கை கொண்டதாக இப்பட்டியலில் இடம் பெற்று உள்ளன, அவை - சீனா (77%), இந்தோனேசியா (76%), இந்தியா (75%) மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (72) %.

## உலகளாவிய புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய ILO அறிக்கை 2022

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது நான்காவது 'சர்வதேசப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய உலகளாவிய மதிப்பீடுகள்' அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய தொழிலாளர் வளத்தில் சர்வதேச புலம்பெயர்ந்தோர் (IM) 4.7% (167.7 மில்லியன்) பேர் இருந்தனர் என்ற ஒரு நிலையில் இது வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு எதுவுமில்லாதவர்கள் (ஆனால் வேலை செய்யத் தயாராக உள்ளவர்கள்) என வரையறுக்கப் படுகிறது; இது 2013 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 30 மில்லியனுக்கும் அதிகமாகும்.
- 155.6 மில்லியன் பேர் வேலைவாய்ப்பில் இருந்தனர் மற்றும் 12.1 மில்லியன் பேர் வேலை வாய்ப்பில்லாமல் இருந்தனர்.
- உலகளவில் ஆண்களுக்கான ஒட்டு மொத்த வேலைவாய்ப்பில் சர்வதேச அளவில் ஆண்களின் பங்கு சுமார் 4.7% ஆகவும், பெண்களின் பங்கு 4.4% ஆகவும் மதிப்பிடப் பட்டுள்ளது.
- இருப்பினும், 2019-2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், வளர்ச்சி விகிதம் ஆனது பெருந் தொற்றினால் பாதிக்கப்பட்டதனால் வருடாந்திர வீதத்தில் 1 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைந்தது.
- மொத்தமுள்ள 102.7 மில்லியனில் 61.3% பேர் என்ற மிக அதிக விகிதத்திலான சர்வதேச புலம்பெயர் ஆண்கள் வேலைவாய்ப்பு பெற்று இருந்தனர்.
- மாறாக, 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 64.9 மில்லியனில் 38.7% சர்வதேச புலம்பெயர்ந்த பெண்கள் மட்டுமே வேலைவாய்ப்பு பெற்று இருந்தனர்.
- 74.9% (125.6 மில்லியன்), முதன்மை வயது வரம்பிலான IM தொழிலாளர்கள் - 25 முதல் 54 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பாலரும் - 2022 ஆம் ஆண்டில் தொழிலாளர் வளத்தில் உள்ள IM தொழிலாளர்களில் மிகப்பெரியப் பெரும்பான்மை பங்கினை கொண்டிருந்தனர்.
- 10 சர்வதேசப் புலம்பெயர் நபர்களில் ஒன்றுக்கும் குறைவானவர்களே 25 வயதுக்குக் குறைவானவர்கள் ஆவர்.
- உலகளாவியத் தொழிலாளர் வளத்தில் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட இளம் சர்வதேசப் புலம் பெயர் தொழிலாளர்கள் 9.3% (15.5 மில்லியன் பேர்) மட்டுமே ஆகும்.
- 55 முதல் 64 வயதுக்குட்பட்ட சர்வதேசப் புலம்பெயர் நபர்கள் 12.5% ஆகவும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 3.4% ஆகவும் இருந்தனர்.

### ஃபோர்ப்ஸ் இதழின் கோடீஸ்வரர்கள் பட்டியல் 2025

- அமெரிக்கா 813 கோடீஸ்வரர்கள்/பில்லியனர்களுடன் முதலிடத்திலும், சீனா சுமார் 473 பில்லியனர்களுடன் இரண்டாவது இடத்திலும், இந்தியா சுமார் 200 பில்லியனர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- எலோன் மஸ்க் 433.9 பில்லியன் டாலர் மதிப்பிலான நிகர சொத்து மதிப்புடன் உலகின் மிகப் பெரியப் பணக்காரராக பட்டியலிடப்பட்டுள்ளார்.
- அமேசானின் ஜெஃப் பெசோஸ் 239.4 பில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துக்களுடன் 2வது இடத்தில் உள்ளார்.
- மெட்டா நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க், ஆரக்கிள் நிறுவனர் லேரி எலிசனை முந்தி உலகளவில் மூன்றாவது பணக்காரர் என்ற இடத்தைப் பிடித்துள்ளார்.
- என்விடியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனர் ஜென்சன் ஹுவாங், முதல் முறையாக முன்னணி 10 பணக்காரர்களின் வரிசையில் இடம் பெற்றுள்ளார்.

### உலக ஆயுத ஆற்றல் குறியீடு 2025

- இராணுவ வலிமையில் அமெரிக்காவானது தனது முதலிடத்தை மீண்டும் மிக நன்கு உறுதிப்படுத்தி உள்ளது.
- அதைத் தொடர்ந்து ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- 4வது இடம் பெற்ற இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க இராணுவ சக்தியாக உருவெடுத்து உள்ளது.
- இதில் தென் கொரியா 5வது இடத்திலும் அதைத் தொடர்ந்து ஜப்பான் 7வது இடத்திலும், துருக்கி 8வது இடத்திலும், ஈரான் 14வது இடத்திலும் உள்ளன.
- பாகிஸ்தானின் தரவரிசை 9வது இடத்திலிருந்து 12வது இடத்திற்குச் சரிந்தது.

## மாநிலச் செய்திகள்

### 2024 ஆம் ஆண்டில் யானைகள் எண்ணிக்கை - அசாம்

- 2024 ஆம் ஆண்டின் யானைகளின் எண்ணிக்கை கணக்கெடுப்பின் போது அசாமில் 5,828 யானைகள் இருப்பதாகப் பதிவாகியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடந்த கணக்கெடுப்பில் பதிவான சுமார் 5,719 என்ற எண்ணிக்கையினை விட இது அதிகமாகும்.
- மொத்த எண்ணிக்கையில் 82% யானைகள் அல்லது 4,777 யானைகள் அம்மாநிலத்தில் உள்ள ஐந்து யானைகள் வளங்காப்பகங்களில் உள்ளன.
- சிராங்-ரிபு யானைகள் வளங்காப்பகத்தில் அதிக எண்ணிக்கையிலான யானைகள் (அடர்த்தி) பதிவாகியுள்ளது.
- இங்கு யானைகளின் எண்ணிக்கையானது 2011 ஆம் ஆண்டில் 5,620 ஆகவும், 2008 ஆம் ஆண்டில் 5,281 ஆகவும், 2002 ஆம் ஆண்டில் 5,246 ஆகவும் இருந்தது.

## சத்தீஸ்கரின் பசுமை GDP முன்னெடுப்பு

- சத்தீஸ்கர் மாநில அரசானது இந்தியாவிலேயே முதன்முறையாக தனது காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளைப் பசுமை சார் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (பசுமை GDP) இணைக்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பல்லுயிர்ப் பெருக்கத்தின் பெரும் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பங்களிப்புகளுக்கும் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இடையே உள்ள நேரடி தொடர்பை எடுத்துக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- எதிர்கால சந்ததியினருக்கு வளமான சூழலை வளங்காத்து பொருளாதார மேம்பாடு எட்டப்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்தச் செயல் திட்டம் வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் 44 சதவீத நிலப் பரப்பில் காடுகள் பரவியுள்ளன.

## குஜராத் - இந்திய ஓநாய்களின் வாழ்விடங்களை பாதுகாப்பதற்கான வரைபடம்

- குஜராத் மாநில அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையானது, அந்த மாநிலத்தில் இந்திய ஓநாய்களின் எண்ணிக்கை 222 ஆக உள்ளதாக மதிப்பிட்டுள்ளது.
- சுமார் 80 என்ற எண்ணிக்கையுடன், பாவ்நகர் மாவட்டம் ஆனது குஜராத்தில் அதிக எண்ணிக்கையிலான ஓநாய்களைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து நர்மதா மாவட்டத்தில் 39, பனஸ்கந்தாவில் 36, சுரேந்திரநகரில் 18, ஜாம்நகர் மற்றும் மோர்பியில் தலா 12, கட்ச் மாவட்டத்தில் 9 என்ற அளவில் ஓநாய்கள் உள்ளன.
- அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் வேலவதாரில் உள்ள பிளாக்பக் (புல்வாய்) தேசியப் பூங்கா மற்றும் தோலேராவைச் சுற்றியுள்ளப் பகுதிகளை உள்ளடக்கிய பாவ் நகரில் உள்ள பால் பகுதியும் அடங்கும்.
- இந்த வரைபடமானது, அவற்றின் முக்கிய வாழ்விடங்களை இணைக்கும் முக்கியமான 'வழித்தடங்களை' அடையாளம் காண உதவும்.

## குஜராத்தின் முதல் கடலோரப் பறவைகள் கணக்கெடுப்பு

- குஜராத் மாநில அரசு ஆனது, ஜாம்நகரில் உள்ள கடல் சார் தேசியப் பூங்கா மற்றும் சரணாலயத்தில் நாட்டின் முதல் கடலோர மற்றும் கடல் பறவைகள் கணக்கெடுப்பை மேற்கொண்டது.
- குஜராத்தில் உள்ள கடல் சார் தேசியப் பூங்கா மற்றும் கடல் சார் சரணாலயம் ஆனது இந்தியாவின் முதல் பிரத்தியேக கடல் சார் தேசியப் பூங்கா ஆகும்.
- இது தேவபூமி துவாரகா, ஜாம்நகர் மற்றும் மோர்பி மாவட்டங்களில் பரவியுள்ளது என்ற நிலையில் இது சுமார் 170 கிலோ மீட்டர் நீளக் கடற்கரை மற்றும் ஒகா மற்றும் நவ்லாகி இடையே உள்ள 42 தீவுகளை உள்ளடக்கியது.
- கட்ச் வளைகுடாவில் உள்ள இப் பாதுகாக்கப்பட்ட பகுதியானது கடல்சார் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சதுப்புநில சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக நிறுவப் பட்டது.
- ஜாம்நகர் மாவட்டத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட கரையோர வாழ் பறவைகள் உட்பட 300 வகையான உள்நாட்டு மற்றும் வலசை போகும் பறவை இனங்கள் உள்ளன.

## இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நகரங்கள் 2024

- 'இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நகரங்கள் 2024' (TCWI) என்பதின் மூன்றாவது பதிப்பு அறிக்கையில் பெங்களூரு நகரானது சென்னையை விஞ்சியுள்ளது.
- பெங்களூருவைத் தொடர்ந்து சென்னை, மும்பை, ஐதராபாத் மற்றும் புனே ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், மதுரை, சேலம் ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய 8 நகரங்கள் இந்தக் குறியீட்டில் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ்நாட்டின் நகரங்கள் ஆனது இந்தக் குறியீட்டில் முதல் 25 இடங்களில் முன்னணி வகிக்கின்றன.
- தெற்கு மாநிலங்கள் ஆனது அதிக உள்ளடக்க வாய்ப்புகள் கொண்ட பிராந்தியமாக உருவெடுத்து, சமூகம் மற்றும் தொழில்துறைகளில் பெண்களின் உள்ளடக்கத்தில் ஒப்பீட்டளவில் அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.
- தெற்கு மாநிலங்களின் சராசரி நகர உள்ளடக்க மதிப்பெண் 18.56 ஆகும்.
- இதில் தெற்கு மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மேற்கு மாநிலங்கள் இடம் பெற்று உள்ளன (16.92).
- மத்திய மற்றும் கிழக்கு மாநிலங்கள் சராசரியாக முறையே 11.79 மற்றும் 10.55 என்ற மதிப்பெண்களுடன் இந்தக் குறியீட்டில் பின்தங்கியுள்ளன.
- வடக்கு மாநிலங்களுக்கான சராசரி நகர உள்ளடக்க மதிப்பெண் 14 ஆகும்.

## Z-மோர்ஹ் சுரங்கப்பாதை

- பிரதமர் ஜம்மு காஷ்மீரில் அமைக்கப்பட்டுள்ள சோனமார்க் சுரங்கப் பாதை என்றும் அழைக்கப் படும் 6.5 கி.மீ. நீளமுள்ள Z-மோர்ஹ் என்ற சுரங்கப்பாதையைத் திறந்து வைத்தார்.
- அனைத்து வகையிலான வானிலைகளிலும் போக்குவரத்து இணைப்பினை வழங்கும் இந்த சுரங்கப் பாதையானது ஸ்ரீநகருக்கும் சோனமார்க்கிற்கும் இடையிலுள்ள இந்தப் போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்தும்.
- பல மாதங்களாக கனமழையின்காரணமாக தடை பட்டிருந்த, அடிக்கடிப் பனிச்சரிவு ஏற்படக் கூடிய பாதையின் ஒரு பகுதியைத் தவிர்த்து பயணிக்க இது உதவுகிறது.
- இந்த சுரங்கப் பாதையானது 8,500 அடிக்கு மேலான உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

## போடா தியோஹர் திருவிழா

- கிரி பிராந்தியத்தினை ஒட்டியப் பகுதிகளில் வாழும் ஹட்டி பழங்குடியினரின் போடா தியோஹர் திருவிழாக்களின் கொண்டாட்டமானது இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்று வருகிறது.
- ஒரு மாத காலம் நடைபெறும் இந்தத் திருவிழாவானது அந்தப் பகுதியில் மாகோ கோ தியோஹர் என்று அழைக்கப்படுகிறது.
- இது மூன்று முக்கிய தனித்துவமான சிறு திருவிழாக்களாகப் பிரிக்கப்படுவதன் மூலம் வேறுபடுத்தப் படுகிறது என்பதோடு அவை ஒவ்வொன்றும் அதன் தனித்துவமானப் பழக்க வழக்கங்கள் மற்றும் சடங்குகளால் குறிக்கப் படுகின்றன.

## மகா கும்ப மேளா 2025

- உலகின் மிகப்பெரிய ஆன்மீக நிகழ்வுகளில் ஒன்றான மகா கும்ப மேளா உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில் தொடங்கியது.
- கும்ப மேளாவானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நான்கு வெவ்வேறு இடங்களில் நடைபெறுகிறது.
- இருப்பினும், பிரயாக்ராஜ் நகரில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே மகா கும்ப மேளா ஏற்பாடு செய்யப்படுகிறது.
- கூடுதலாக, சுமார் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே நிகழும் அரிய வானியல் அமைப்புகளின் நேர்க்கோட்டு ஒருங்கிணைவு காரணமாக 2025 ஆம் ஆண்டு மஹா கும்பமேளா நிகழ்வானது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டில், கும்பமேளா நிகழ்வானது யுனெஸ்கோ அமைப்பினால் இந்திய நாட்டின் 'தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியம்' ஆக அறிவிக்கப்பட்டது.

## கானமயில் வளங்காப்பு – இராஜஸ்தான்

- இராஜஸ்தானில் உள்ள காடுகளில் ஒரே குழுவில் குறைந்தது 12 கானமயில்கள் (GIB) தென்பட்டுள்ளன.
- வடக்கு மற்றும் மேற்கு இந்தியப் பகுதிகளில் "கோடவன்" மற்றும் "மால்தோக்" என்று அழைக்கப் படும் இந்தப் பறவைகள், டெசர்ட்/பாலைவன தேசியப் பூங்காவில் (DNP) தென்பட்டுள்ளன.
- GIB என்பது இராஜஸ்தானின் தார் பகுதியில் காணப்படும் மிக அருகி வரும் பறவை இனமாகும்.
- இன்று, 173 பறவைகள் மட்டுமே எஞ்சியுள்ளன, அவற்றில் 128 பறவைகள் காடுகளில் காணப்படுகின்றன என்ற நிலையில் மீதமுள்ளவை உயிர்க் காப்பகங்களில் மட்டுமே வளர்க்கப் படுகின்றன.
- இராஜஸ்தானைத் தவிர, குஜராத், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவிலும் இந்தப் பறவை காணப்படுகிறது.
- 2011 ஆம் ஆண்டில், இந்தப் பறவைகள் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "மிக அருகி வரும் நிலையில் உள்ள இனமாக" பட்டியலிடப்பட்டன.

## INROAD திட்டம் 2025

- வடகிழக்கில் மேற்கொள்ளப்படும் INROAD திட்டம் ஆனது இயற்கை ரப்பரின் தரத்தை மேம்படுத்துவதற்காக 100 கோடி ரூபாய் நிதி உதவியைப் பெற்றுள்ளது.
- INROAD என்பது உதவிகளுடன் கூடிய வளர்ச்சிக்கான இந்திய இயற்கை ரப்பர் செயல் பாடுகள் என்பதைக் குறிக்கிறது.
- INROAD என்பது உலகிலேயே ரப்பர் தோட்டங்களின் உருவாக்கத்திற்கு டயர் / உருளிப் பட்டைகள் தொழில் துறை நேரடியாக பங்களிக்கும் முதல் வகையிலான திட்டமாகும்.
- அப்பல்லோ, சியட், JK மற்றும் MRF உள்ளிட்ட நான்கு ATMA உறுப்பினர்களால் இந்தத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது, மேலும் இது இந்திய ரப்பர் வாரியத்தினால் செயல்படுத்தப்படுகிறது.

## புருலியா ஆய்வகம்

- S.N.போஸ் அடிப்படை அறிவியல் மையத்தினால் (SNBCBS) மேற்கு வங்காளத்தில் உள்ள பஞ்செட் மலையின் உச்சியில் இந்த ஆய்வகம் நிறுவப்பட்டது.
- தரை மட்டத்திலிருந்து 600 மீட்டர் உயரத்திலும், தோராயமாக 86° E தீர்க்கரேகையிலும் இந்த ஆய்வகம் அமைந்துள்ளது.
- இது கிழக்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளவிலும் ஒரு முக்கிய ஆய்வகமாக இருக்கும்.

## கான்-ஞாய் 2025

- டெல்லி தேசியத் தலைநகரப் பிராந்தியத்தின் ரோங்மெய் என்ற பெண்கள் கலாச்சார நடனக் குழுவானது (RWCDT) 2025 ஆம் ஆண்டு கான்-ஞாய் திருவிழாவினைக் கொண்டாடியது.
- இந்த முக்கியத் திருவிழாவானது ரோங்மெய் நாகா பழங்குடிச் சமூகத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தையும் அடையாளத்தையும் எடுத்துக் காட்டுகிறது.
- இந்தத் திருவிழாவானது "Our Festival, Our Identity" என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.

## திரிபுரா - அதிகாரப்பூர்வ மாநிலச் சின்னம்

- உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, திரிபுராவின் மாநில சின்னத்தை அங்கீகரித்து உள்ளது.
- திரிபுரா அரசின் மாநிலச் சின்னத்திற்கான முன்மொழிவு ஆனது, 2007 ஆம் ஆண்டு இந்திய மாநிலச் சின்னம் (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகளின் 4(2)வது விதியின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ளது.
- 1994 ஆம் ஆண்டு S.R. பொம்மை மற்றும் இந்திய ஒன்றிய வழக்கில், மாநிலங்கள் தேசியக் கொடியை அவமதிக்காத வகையில் அவற்றிற்கென சொந்தக் கொடிகளை வைத்தருக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டமும் மாநிலங்கள் அவற்றிற்கான சொந்தக் கொடிகளை வைத்திருப்பதைத் தடை செய்யவில்லை.

## வாட்நகர் தொல்பொருள் அனுபவ அருங்காட்சியகம்

- இந்த அருங்காட்சியகம் ஆனது, அந்த நகரத்தின் சுமார் 2,500 ஆண்டுகால வரலாற்றை ஒரு உள்ளார்ந்த மற்றும் ஊடாடும் அனுபவத்தின் மூலம் ஒரு விரிவான காட்சியினை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சுமார் 5,000க்கும் மேற்பட்ட கலைப் பொருட்களை நன்கு காட்சிப்படுத்துகின்ற இந்த அருங்காட்சியகம் ஆனது, அந்நகரத்தின் கலாச்சார விவரிப்பு முறையில் உள்ளார்ந்த காட்சியினை வழங்குகிறது.
- வாட்நகர் ஆனது குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது இந்து, பௌத்தம், சமணம் மற்றும் இஸ்லாமிய கலாச்சாரத் தாக்கங்களின் மிக தனித்துவமானக் கலவைக்குப் பெயர் பெற்றது.

## சினார் மரத்திற்குப் புவிசார் குறியிடல்

- ஜம்மு-காஷ்மீர் அரசாங்கம் ஆனது, காஷ்மீரில் உள்ள பாரம்பரிய சினார் மரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் புவிசார் குறியிடல் செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- சினார் மரங்கள் ஆனது அதிக ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் மரங்களாகும்.
- அந்த மாநில அரசானது இந்த மரங்களுக்கு 'எண்ணிம ஆதார்களை' வழங்கி ஊடறி செய்யக் கூடிய விரைவுக் குறியீடுகளை (QR) நிறுவியுள்ளது.
- தற்போது, ஒவ்வொரு சினார் மரத்திற்கும் அதன் சொந்த 'ஆதார்' எண் உள்ளதுடன் அது டிஜிட்டல் இந்தியா கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சினார் மரங்களின் எண்ணிக்கையுடன் கூடிய அதன் சொந்த மாவட்டக் குறியீடு உள்ளது.
- இதுவரையில், அந்த மாநில அரசானது 28,560 சினார் மரங்களை அடையாளம் கண்டு புவிசார் குறியீடுகளை வழங்கியுள்ளன.

## உத்தரப் பிரதேச ஸ்தாபன தினம் 2025

- 1902 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் ஆட்சியின் போது இது ஆக்ரா மற்றும் அவாத் ஐக்கிய மாகாணங்களாக நிறுவப்பட்டன.
- சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த ஐக்கிய மாகாணங்கள் 1947 ஆம் ஆண்டில் ஒரு நிர்வாக அலகாக மாற்றப் பட்டதோடு 1949 ஆம் ஆண்டில் தெஹ்ரி கர்வால் மற்றும் ராம்பூர் ஆகிய சுதேச மாநிலங்கள் அதில் இணைக்கப்பட்டன.
- இறுதியாக, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று, இந்த மாநிலமானது உத்தரப் பிரதேசம் என மறுபெயரிடப்பட்டது.
- ஆனால் உத்தரப் பிரதேச தினமானது முதன்முதலில் 1989 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டில், இந்த மாநிலத்தின் மலைப் பகுதிகள் பிரிக்கப்பட்டு, முதன்முதலில் உத்தராஞ்சல் என்று பெயரிடப்பட்டு, பின்னர் உத்தரக்காண்ட் என மறுபெயரிடப்பட்ட ஒரு புதிய மாநிலம் உருவாக்கப்பட்டது.

## இமாச்சலப் பிரதேச மாநில தினம் 2025

- இமாச்சலப் பிரதேச தலைமை ஆணையர் மாகாணம் ஆனது 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயல் படுத்தப்பட்டதன் மூலம் இது ஒரு C பிரிவு மாநிலமாக மாற்றப்பட்டது.
- இமாச்சலப் பிரதேசம் ஆனது, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் ஆனது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று, இந்திரா காந்தி அரசு ஆனது இமாச்சலப் பிரதேசத்திற்கு முழு மாநில அந்தஸ்தினை வழங்கியது.

### சம்மன் சஞ்சீவனி செயலி

- ஹரியானா மாநில அரசானது, 'சம்மன் சஞ்சீவனி' எனும் செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்தச் செயலியானது, 'மகிளா எவம் கிஷோரி சம்மன் யோஜனா' என்ற திட்டத்தின் கீழ் வழங்கப் படும் பலன்களின் பரவலைக் கண்காணிக்கிறது.
- அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகள் மூலம் 10 முதல் 45 வயதுடைய வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு மாத விடாய்க் காலப் பயன்பாட்டுத் துணிகள் வழங்கப்படுகின்றன.
- இந்தச் செயலியானது, சரியான நேரத்தில் அவற்றின் விநியோகத்தை மிகவும் நன்கு உறுதி செய்வதோடு, பயனாளிகளின் தரவைச் சேகரித்து, மாதாந்திரச் சலுகைகளைப் புதுப்பிக்கிறது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

| நபர் | தொடர்புடைய துறைகள் | குறிப்பு |
|---|---|---|
| **ஜிம்மி கார்ட்டர்** | **39வது அமெரிக்க அதிபர்** | உலகம் முழுவதும் அவர் ஆற்றிய மனித உரிமைப் பணிகளுக்காக அவருக்கு 2002 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது |
| **K.S.மணிலால்** | **தாவரவியலாளர்** | இந்திய ஆஞ்சியோஸ்பெர்ம்/பூக்கும் தாவரங்கள் வகை பிரித்தல் சங்கத்தின் (IAAT) நிறுவனத் தலைவர் |
| **ஆக்னஸ் கெலேட்டி** | ஹங்கேரியா நாட்டினைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் (சீருடற்பயிற்சிகள்) வீராங்கனை | ஐந்து முறை ஒலிம்பிக் சாம்பியன் பட்டம் |
| **டாக்டர் இராஜகோபால சிதம்பரம்** | அணுசக்தி அறிவியலாளர் | சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) ஆளுநர் குழுவின் தலைவர் |
| **யூன் சுக்-யியோல் கைது** | அதிபர் | பதவி நீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய அதிபர் யூன் சுக் யியோல் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். |
| **டாக்டர் K.M.செரியன்** | அறுவை சிகிச்சை நிபுணர் | இருதய அறுவை சிகிச்சையின் முன்னோடி |

| தமிழ்நாடு அரசு விருதுகள் 2025 | |
|---|---|
| **M. படிக்கராமு** | அய்யன் திருவள்ளுவர் விருது |
| **L. கணேசன்** | அண்ணா விருது |
| **கபிலன்** | மகாகவி பாரதியார் விருது |
| **பொன். செல்வகணபதி** | பாரதிதாசன் விருது |
| **G.R.இரவீந்திரநாத்** | தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது |
| **வெ. மு. பொதியவெற்பன்** | KAP விஸ்வநாதம் விருது |
| **இராஜேந்திரன்** | தந்தை பெரியார் விருது |
| **ரவிக்குமார்** | அண்ணல் அம்பேத்கர் விருது |
| **முத்து வவாசி** | கலைஞர் விருது |

| கலைஞர் பொற்கிழி விருது 2025 | |
|---|---|
| **அருணன்** | உரைநடை/ஆராய்ச்சிக்கான விருது |
| **நெல்லை ஜெயந்தா** | கவிதைக்கான விருது |
| **சுரேஷ் குமார் இந்திரஜித்** | புதினத்திற்கான விருது |
| **N.ஸ்ரீராம்** | சிறுகதைகளுக்கான விருது |
| **கலை இராணி** | நாடகத்திற்கான விருது |
| **நிர்மால்யா** | மொழிபெயர்ப்புக்கான விருது |
| **K.கனதியின் கற்பகம் புத்தகாலயம்** | சிறந்த பதிப்பகத்திற்கான BAPASI / பாபாசி விருது |
| **R.கோதண்டராமன்** | சிறந்த நூலகர் விருது |
| **S.மெய்யப்பன்** | சிறந்தப் புத்தக விற்பனையாளருக்கான விருது |

| அயலகத் தமிழர்கள் தின விருதுகள் 2025 | |
|---|---|
| **டாக்டர் விஜய் ஜானகிராமன்** | 'தமிழ் மாமணி' விருது |
| **கிருஷ்ணகாந்தன்** | சிறந்தக் கலாச்சாரத் தூதர் விருது |
| **இராஜாராம் இராமசுப்பன்** | கல்வி பிரிவு |
| **S.கமலக்கண்ணன்** | சமூக மேம்பாட்டுப் பிரிவு |
| **ஸ்ரீதேவி சிவானந்தம்** | மகளிர் பிரிவு |
| **இலட்சுமணன் சோமசுந்தரம்** | வணிகப் பிரிவு |
| **S.ஆரோக்கியராஜ்** | அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவு |
| **கங்காதர சுந்தர்** | மருத்துவப் பிரிவு |

| ஆளுநர் விருதுகள் 2024 | |
|---|---|
| **சமூக சேவை' பிரிவு(நிறுவனங்கள்)** | இதயங்கள் (கோயம்புத்தூர் மாவட்டம்)<br>ஹோப் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை மாவட்டம்) |
| **சமூக சேவை' பிரிவு (தனிநபர்)** | S. இராமலிங்கம் (சென்னை மாவட்டம்)<br>J. ஸ்வர்ணலதா<br>A. ராஜ்குமார் |
| **சுற்றுச்சூழல் பாதுகாப்பு (நிறுவனங்கள்)** | சிட்லபாக்கம் ரைசிங் சாரிட்டபிள் டிரஸ்ட் |

| தமிழ்நாட்டில் பத்மஸ்ரீ விருது பெற்றவர்கள் | |
|---|---|
| **குப்புசாமி செட்டி** | பட்டுப் புடவைகள் தயாரிப்பு நிறுவனம் |
| **அஸ்வின்** | விளையாட்டுத் துறை |

| தமிழ்நாடு குடியரசு தின விருதுகள் 2025 | |
|---|---|
| **K. வெற்றிவேல்** | வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் |
| **S.A. அமீர் அம்சா** | கோட்டை அமீர் விருது |
| **R. முருகவேல்** | நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறன் விருது |
| **P. சின்னகாமணன்**<br>**K. மகா மார்க்ஸ்**<br>**K. கார்த்திக்**<br>**K. சிவா**<br>**P. பூமாலை** | காந்தி அடிகள் காவல் பதக்கம் |

| 2025 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்புக் காட்சி வாகனங்கள் | |
|---|---|
| **உத்தரப் பிரதேசம்** | 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த அணிவகுப்புக் காட்சி வாகனம் |
| **திரிபுரா** | 2025 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது சிறந்த அணிவகுப்புக் காட்சி வாகனம் |
| **ஆந்திரப் பிரதேசம்** | 2025 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது அணிவகுப்புக் காட்சி வாகனம் |
| **டெல்லி காவல் அணி வகுப்புப் படை** | மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) /துணைப் படைகள் பிரிவு |

| | |
|---|---|
| **பழங்குடியின விவகாரங்கள் அமைச்சகத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** | மத்திய அமைச்சகங்கள்/துறைகள் பிரிவு |
| **மத்தியப் பொதுப் பணித் துறை**<br>**'ஜெயதி ஜெய் மமா பாரதம்' நடனக் குழுவிற்கு வேண்டி அதன் நடன நிகழ்ச்சி** | இரண்டு சிறப்பு பரிசுகள் |

| சென்னை இசை அகாடமி விருதுகள் | |
|---|---|
| **கிருஷ்ணா** | சங்கீத கலாநிதி 2024 |
| **பரஸ்சல ரவி மற்றும் கீதா ராஜா** | சங்கீத கலாச்சார்யர் |
| **டாக்டர் மார்கரெட் பாஸ்டின்** | 2024 ஆம் ஆண்டிற்கான இசையமைப்பாளர் விருது |
| **திருவையாறு சகோதரர்கள் S.நரசிம்மன் மற்றும் S.வெங்கடேசன்** | TTK விருது |

| தேசிய விளையாட்டு விருதுகள் 2024 | |
|---|---|
| **மனு பாக்கர், D.குகேஷ், ஹர்மன்ப்ரீத் சிங் மற்றும் பிரவீன் குமார்** | மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது |
| **சுச்சா சிங் (முன்னாள் சைக்கிள் பந்தய வீரர்)** | அர்ஜுனா விருதுகள் (வாழ்நாள்) |
| **முரளிகாந்த் ராஜாராம் பெட்கர் (முன்னாள் மாற்றுத் திறனாளி-நீச்சல் வீரர்)** | (அர்ஜுனா விருதுகள் (வாழ்நாள்) |
| **துளசிமதி, நித்ய ஸ்ரீ மற்றும் மனிஷா (பேட்மிண்டன் வீராங்கனைகள்)** | அர்ஜுனா விருது |
| **அபய் சிங் (ஸ்குவாஷ் வீரர்)** | அர்ஜுனா விருது |
| **சுபாஷ் ராணா (மாற்றுத் திறனாளி வீரர் - துப்பாக்கிச் சுடுதல் வீரர்)**<br>**தீபாலி தேஷ்பாண்டே (துப்பாக்கி சுடுதல்)**<br>**சந்தீப் சங்வான் (ஹாக்கி)** | துரோணாச்சார்யா விருதிற்காகத் |
| **S.முரளிதரன் (பேட்மிண்டன்) அர்மாண்டோ அக்னெலோ கோலாகோ (கால்பந்து)** | துரோணாச்சார்யா விருது(வாழ்நாள்) |

| அணு ஆயுதம் இல்லாத எதிர்காலத்திற்கான விருதுகள் 2025 | |
|---|---|
| **P. உதயகுமார்**<br>**மார்சியா கோம்ஸ் டி ஒலிவேரா மற்றும் நோர்பர்ட் சுச்சானெக்.** | 2025 ஆம் ஆண்டு அணு ஆயுதம் இல்லாத ஒரு எதிர்காலத்திற்கான விருது |

| | |
|---|---|
| **எட்விக் மாட்ஸிமுரேவுக்கு** | தி சொல்யூஷன் விருது |
| **ஜோனா மேசி** | கௌரவ வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் |
| **க்ளீ பெனாலி** | கௌரவ வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் |

| **தேசிய விளையாட்டு விருதுகள் 2025** | |
|---|---|
| **மனு பாக்கர், D.குகேஷ், ஹர்மன்பிரீத் சிங் மற்றும் பிரவீன் குமார்** | கேல் ரத்னா விருது |
| **சரப் ஜோத் சிங் மற்றும் ஸ்வப்னில் குசலே** | அர்ஜுனா விருது |
| **முரளிகாந்த் இராஜாராம் பெட்கரருக்கு** | இந்தியாவின் வாழ்நாள் சாதனையாளர் விருது |
| **சண்டிகர் பல்கலைக் கழகம், லவ்லி புரொஃபஷனல் பல்கலைக் கழகம் மற்றும் குரு நானக் தேவ் பல்கலைக் கழகத்திற்கு** | மௌலானா அபுல் கலாம் ஆசாத் கோப்பை |
| **முரளிகாந்த் பெட்கர்** | வாழ்நாள் சாதனையாளருக்கு ஆன அர்ஜுனா விருது |
| **இந்திய உடற்கல்வி அறக்கட்டளைக்கு** | இராஷ்ட்ரிய கேல் புரோட்சஹான் புரஸ்கார் விருது |
| **தீபாலி தேஷ்பாண்டே (துப்பாக்கி சுடுதல் பயிற்சியாளர்) மற்றும் அர்மாண்டோ அக்னெலோ கோலாகோ (கால்பந்து)** | துரோணாச்சார்யா விருது |

| **ICC அமைப்பின் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் 2024** | |
|---|---|
| **ஸ்மிருதி மந்தனா** | சர்வதேச கிரிக்கெட் சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த வீராங்கனை |
| **ஜஸ்பிரித் பும்ரா** | ICC ஆடவர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த வீரர் |
| **ரோஹித் சர்மா** | ICC ஆடவர் T20I போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த அணித் தலைவர் |
| **அர்ஷ்தீப் சிங்** | ICC ஆடவர் T20I போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் |
| **அமெலியா கெர் (நியூசிலாந்து)** | ICC மகளிர் T20I போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனை |

| | |
|---|---|
| **அர்ஷ்தீப் சிங் ஜஸ்பிரித் பும்ரா, ஹர்திக் பாண்டியா மற்றும் ரோஹித் சர்மா** | ICC ஆடவர் T20 போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த அணி |
| **ஸ்மிருதி மந்தனா, ரிச்சா கோஷ் மற்றும் தீப்தி சர்மா** | ICC மகளிர் T20 போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த அணி |
| **அசமதுல்லா ஓமராசி ஆப்கானிஸ்தான்** | ICC ஆடவர் T20 ஒரு நாள் போட்டிகளின் சிறந்த கிரிக்கெட் வீரர் |

## பத்ம விருதுகள் 2025

- நாட்டின் மிக உயரியக் குடிமை விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள் ஆனது, பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ என மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகின்றன.
- கலை, சமூகப் பணி, பொது விவகாரங்கள், அறிவியல் மற்றும் பொறியியல், வர்த்தகம் மற்றும் தொழில்துறை, மருத்துவம், இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, ஆட்சிப் பணி போன்ற பல்வேறு துறைகள்/ செயல்பாட்டுத் துறைகளில் வழங்கப்படுகின்றன.
- மகத்தான மற்றும் சிறப்பான சேவைக்காக பத்ம விபூஷண் வழங்கப் படுகிறது.
- சிறப்பான பொதுச் சேவைக்காக பத்ம பூஷண் விருதும், எந்தவொரு துறையிலுமான சிறப்பான சேவைக்காக 'பத்ம ஸ்ரீ' விருதும் வழங்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று இந்த விருதுகள் அறிவிக்கப்படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டில், 1 இரட்டை விருது (இரட்டை விருதில், அந்த விருது ஒன்றாகக் கணக்கிடப் படும்) உட்பட 139 பத்ம விருதுகளை வழங்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்தப் பட்டியலில் 7 பத்ம விபூஷண், 19 பத்ம பூஷண் மற்றும் 113 பத்மஸ்ரீ விருதுகள் அடங்கும்.
- விருது பெற்றவர்களில் 23 பேர் பெண்கள் ஆவர் என்பதோடு 10 பேர் வெளிநாட்டினர்/ வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) / இந்திய வம்சாவளியினர் (PIO) / வெளிநாட்டுக் குடியுரிமை கொண்ட இந்தியர்கள் (OCI) என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்ற நிலையில் 13 பேருக்கு மறைவுக்குப் பின்னதாக இந்த வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பேர் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவர் இந்த ஆண்டு பத்ம விருதுகளைப் பெற்றுள்ளனர்.

## சர்வதேச சூரியசக்தி மாநாடு 2025

- இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) ஆனது, 'சூரியன், விண்வெளி சார்ந்த வானிலை மற்றும் சூரிய-நட்சத்திர மண்டல இணைப்புகள்' குறித்த மாநாட்டினைப் பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்துள்ளது.
- கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தின் 125வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய வானியலின் ஓர் பெரும் அடித்தளமான இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் கொடைக்கானல் சூரிய ஆய்வகம் (KSO) ஆனது 1899 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## வீரதீர விருதுகள் 2025

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 12 பேருக்கு அவர்களின் மறைவிற்குப் பின்னதாக வழங்கப்பட்ட விருதுகள் உட்பட ஆயுதப்படைகள் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படை வீரர்கள் 93 பேருக்கு வீரதீர விருதுகளை வழங்கினார்.
- இவற்றில் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஒரு விருது உட்பட இரண்டு கீர்த்தி சக்ரா விருதுகள்; மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட மூன்று விருதுகள் உட்பட 14 சௌர்ய சக்ரா விருதுகள், ஒரு துணை சேனா பதக்கம் (வீரதீரச் செயல்); மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஏழு விருதுகள் உட்பட 66 சேனா பதக்கங்கள்; இரண்டு நவோ சேனா பதக்கம் (வீரதீரச் செயல்) மற்றும் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஒரு விருது உட்பட எட்டு வாயு சேனா பதக்கங்கள் (வீரதீரச் செயல்) அடங்கும்.
- ஆயுதப் படைகள் மற்றும் பிற துறைப் பணியாளர்களுக்கு வேண்டி 305 பாதுகாப்பு விருதுகளையும் குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கினார்.
- இவற்றில் 30 பரம் விஷிஷ்ட் சேவா பதக்கங்கள்; ஐந்து உத்தம் யுத் சேவா பதக்கங்கள்; 57 அதி விஷிஷ்ட் சேவா பதக்கங்கள்; 10 யுத் சேவா பதக்கங்கள்; சேனா பதக்கத்திற்கு இணையான பதக்கம் (கடமைப்பற்று); 43 சேனா பதக்கங்கள் (கடமைப்பற்று); எட்டு நவோ சேனா பதக்கங்கள் (கடமைப்பற்று); 15 வாயு சேனா பதக்கங்கள் (கடமைப் பற்று); நான்கு விஷிஷ்ட் சேவா பதக்கம் மற்றும் 132 விஷிஷ்ட் சேவா பதக்கங்களை குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கினார்.
- மேலும், எட்டு கடலோரக் காவல்படை வீரர்களுக்கு குடியரசுத் தலைவரின் தத்ரக்சக் பதக்கம் மற்றும் தத்ரக்சக் பதக்கத்தினையும் குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கச் செய்தானார்.
- குடியரசுத் தலைவரின் பதக்கப் பட்டியலில் தமிழக காவல்துறையின் 21 காவல்துறை அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.
- ஊர்க்காவல் மற்றும் குடிமைப் பாதுகாப்பு பிரிவின் கீழ், தமிழ்நாடு ஊர்க் காவல் படையின் உதவித் தலைவர் மஞ்சித் சிங் நாயர், மகத்தான சேவைக்கான குடியரசுத் தலைவர் பதக்கத்தைப் பெற்றார்.

## 55வது உலகப் பொருளாதார மன்றம்

- சமீபத்தில் 55வது உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வருடாந்திரக் கூட்டம் ஆனது, சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் "Collaboration for the Intelligent Age" என்ற ஒரு கருத்துருவுடன் நடைபெற்றது.
- கால்பந்து ஜாம்பவானான டேவிட் பெக்காம், ஆடை வடிவமைப்பாளர் டயான் வான் ஃபர்ஸ்டன்பெர்க் மற்றும் கட்டிடக் கலைஞர் ரிக்கன் யமமோட்டோ ஆகியோருக்கு மதிப்புமிக்க கிரிஸ்டல் விருதுகள் வழங்கப்பட்டன.
- சமூக, சுற்றுச்சூழல் மற்றும் படைப்புகளின் முன்னேற்றத்திற்கான அவர்களின் பெரும் பங்களிப்புகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.
- இந்த நிகழ்வில் ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, தெலுங்கானா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய ஆறு இந்திய மாநிலங்களைச் சேர்ந்த உயர் நிலைப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

- சுவிட்சர்லாந்தில் உள்ள இலாப நோக்கமற்ற அறக்கட்டளையான WEF என்பது 1971 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதோடு இதன் தலைமையிடம் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு கோ கோ உலகக் கோப்பை போட்டி கோப்பை & சின்னம்

- இந்தியாவானது முதல் முறையாக புது தில்லியில் இதனை நடத்த உள்ளது.
- இந்திய கோ கோ கூட்டமைப்பு (KKFI) ஆனது முதலாவது கோ கோ உலகக் கோப்பைப் போட்டிக்கான கோப்பைகளை வெளியிட்டுள்ளது.
- இந்தப் போட்டியில் ஆறு கண்டங்களில் உள்ள 24 நாடுகளைச் சேர்ந்த 21 ஆண்கள் மற்றும் 20 பெண்கள் அணிகள் பங்கேற்க உள்ளன.
- இந்த உலகக் கோப்பை போட்டியில் ஆண்கள் சாம்பியன்ஷிப் போட்டிக்கான நீலநிறக் கோப்பை மற்றும் பெண்கள் போட்டிக்கான பச்சை நிறக் கோப்பை ஆகிய இரண்டு கோப்பைகள் வழங்க ப்படும்.
- KKFI ஆனது ‘தேஜஸ்’ மற்றும் ‘தாரா’ என்ற இரட்டை இந்தியச் சிறுமான்களை இந்தப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ உருவச் சின்னங்களாகப் பயன்படுத்துகின்றது.
- இந்த உருவச் சின்னங்கள் ஆனது இவ்விளையாட்டின் முக்கியப் பண்புகளான வேகம், சுறுசுறுப்பு மற்றும் குழுப்பணி ஆகியவற்றை உள்ளடக்கியது.
- தேஜஸ் ஆனது புத்திசாலித்தனம் மற்றும் ஆற்றலைக் குறிக்கிறது மற்றும் தாரா, வழி காட்டுதல் மற்றும் விழைவு ஆகியவற்றைக் குறிக்கிறது.

## முதலாவது கோ கோ உலகக் கோப்பைப் போட்டி

- முதலாவது கோ கோ உலகக் கோப்பை போட்டியினை (2025) இந்தியா நடத்தியது.
- இந்தப் போட்டியில் 20 ஆடவர் அணிகளும் 19 மகளிர் அணிகளும் பங்கேற்றன.
- நேபாள அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி வெற்றி பெற்று கோப்பையினை வென்றது.

## கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2025

- ஐந்தாவது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் (KIWG-2025) ஆனது லடாக்கின் லே நகரில் நிறைவடைந்தது.
- இதன் முதல் கட்டப் போட்டிகளானது ஜனவரி 23 முதல் 27 ஆம் தேதி வரை லடாக்கில் நடைபெற்ற நிலையில் இரண்டாம் கட்டப் போட்டிகள் ஆனது பிப்ரவரி 21 முதல் 25 ஆம் தேதி வரை ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடைபெற உள்ளன.
- தற்போது, இந்தப் போட்டியில் லடாக் நான்கு தங்கங்கள், இரண்டு வெள்ளிகள் மற்றும் ஒரு வெண்கலத்துடன் பதக்கப் பட்டியலில் முன்னிலை வகிக்கிறது.
- தமிழ்நாடு மூன்று தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

# முக்கிய தினங்கள்

| தேதி | முக்கிய நாள் | கருத்துரு |
|---|---|---|
| **ஜனவரி 01** | DRDO அமைப்பின் 67வது ஸ்தாபன தினம் | |
| **ஜனவரி 04** | உலக பிரெய்லி தினம் | |
| **ஜனவரி 06** | போர்களால் ஆதரவிழந்தவர்களுக்கான உலக தினம் | |
| **ஜனவரி 08** | புவி சுழற்சி தினம் | |
| **ஜனவரி 09** | பிரவாசி பாரதிய திவாஸ் | "The Diaspora's Contribution to a Viksit Bharat" |
| **ஜனவரி 10** | உலக இந்தி மொழி தினம் | "Hindi: A Global Voice of Unity and Cultural Pride" |
| **ஜனவரி 11 முதல் 17 வரை** | தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் 2025 | Be a Road Safety Hero |
| **ஜனவரி 12** | தேசிய இளையோர் தினம் | |
| **ஜனவரி 14** | உலக தர்க்க தினம் | |
| **ஜனவரி 14** | மூத்த ஆயுதப்படை வீரர்கள் தினம் | |
| **ஜனவரி 15** | 77வது இந்திய இராணுவ தினம் | |
| **ஜனவரி 16** | தேசியப் புத்தொழில் நிறுவனங்கள் தினம் | |
| **ஜனவரி 16** | லோக்பாலின் முதல் ஸ்தாபன தினம் | |
| **ஜனவரி 19** | NDRF எழுச்சி தினம் | |
| **ஜனவரி 21** | மாநிலங்கள் உருவாக்க தினம் (மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா) | |
| **ஜனவரி 23** | பராக்கிரம் திவாஸ் | |
| **ஜனவரி 24** | தேசியப் பெண் குழந்தைகள் தினம் | "Empowering Girls for a Bright Future" |
| **ஜனவரி 24** | சர்வதேசக் கல்வி தினம் | "AI and education: Preserving human agency in a world of automation" |
| **ஜனவரி 25** | தேசிய வாக்காளர் தினம் | "Nothing Like Voting, I Vote for Sure" |
| **ஜனவரி 25** | தேசியச் சுற்றுலா தினம் | "Tourism for Inclusive Growth" |
| **ஜனவரி 25** | தமிழ் மொழி தியாகிகள் தினம் | |

| | | |
|---|---|---|
| **ஜனவரி 26** | சர்வதேச சுங்க தினம் | “Customs Delivering on its Commitment to Efficiency, Security and Prosperity” |
| **ஜனவரி 26** | உலக தொழுநோய் தினம் | "Unite. Act. Eliminate." |
| **ஜனவரி 27** | சர்வதேச இன அழிப்பு நிகழ்வின் நினைவு தினம் | “Holocaust Remembrance for Dignity and Human Rights” |
| **ஜனவரி 29** | இந்தியப் பத்திரிக்கை தினம் 2025 | “Role of Print Media in the Digital Age” |
| **ஜனவரி 31** | சர்வதேச வரிக்குதிரை தினம் | |

# இதரச் செய்திகள்

## PoK பகுதியின் கில்கிட்டில் சமஸ்கிருத கல்வெட்டு

- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள கில்கிட் பகுதிக்கு வெளியே உள்ள ஒரு பாறையில் சமஸ்கிருத கல்வெட்டு ஒன்றை இந்தியத் தொல்லியல் துறை கண்டறிந்து உள்ளது.
- இது பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது; இது தோராயமாக கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.
- பாகிஸ்தானில் சமஸ்கிருதக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்ட சம்பவங்கள் இதற்கு முன்பும் பதிவாகியுள்ளன.

## சர்வதேச ஆண்டுகள் 2025

- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினைச் சர்வதேச குவாண்டம் (துளிம) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாக (IYQ) அறிவித்துள்ளது.
- UNGA ஆனது 2025 ஆம் ஆண்டானது "Cooperatives Build a Better World" என்ற கருத்துருவின் கீழ் சர்வதேசக் கூட்டுறவு ஆண்டாக (IYC2025) கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை சர்வதேசப் பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டாக அறிவித்துள்ளது.
- இதனுடன் சேர்த்து, 2025 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 21 ஆம் தேதி ஆனது உலகப் பனிப்பாறைகள் தினமாக கொண்டாடப் படும் என்றும பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஆனது இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் அங்கீகரிக்கப்பட்ட அதன் 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- எனவே, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2025 ஆம் ஆண்டினைச் சர்வதேச அமைதி மற்றும் நம்பிக்கை ஆண்டாக (IYPT) அறிவித்துள்ளது.

## 10 ஆம் நூற்றாண்டு சோழர் கால வணிகர் சங்கக் கல்வெட்டு

- இந்தியத் தொல்லியல் துறையானது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலுப்பூர் தாலுக்காவில் உள்ள பிலிப்பட்டி என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட சோழர் கால வணிகர் சங்கக் கல்வெட்டினைப் பொருள் கண்டுணர்ந்துள்ளது.
- மங்கல நாடு, புறமலை நாடு, பூங்குன்றம் நாடு, மணலூர் நாடு மற்றும் கொடும்பாளூர் வீரப்பட்டினம் ஆகியவற்றின் ஐநூற்றுவர்கள் உட்பட பல்வேறு பிராந்திய பிரிவுகளின் வணிகக் குழுக்களை இது குறிப்பிடுகிறது.
- 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டு ஆனது பராந்தக சோழன் அல்லது உத்தம சோழன் ஆட்சியின் போது நிறுவப்பட்டிருக்கலாம்.
- இந்தக் கல்வெட்டில் அங்குசம் (அக்காலங்களில் யானைகளை கட்டுப்படுத்த வேண்டி பயன்படுத்தப் பட்ட கூர்மையான ஒரு கூரான கொக்கி), திரிசூலம் மற்றும் விளக்குகள் உள்ளிட்ட பல்வேறு குறியீடுகள் உள்ளன.

## நிம்சுலைடு மருந்திற்குத் தடை

- பரவலாக விலங்குகளுக்கான வலி நிவாரணியாகப் பயன்படுத்தப்படும் நிம்சுலைடு மருந்தின் அனைத்து வடிவங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை மத்திய அரசு தடை செய்துள்ளது.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) ஆனது, 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் இந்தத் தடையை அமல்படுத்தியுள்ளது.
- சுற்றுச்சூழலின் சமநிலையைப் பேணுவதற்கு அவசியமான கழுகுகள் மற்றும் பிற பிணந்திண்ணி இனங்களைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிம்சுலைடு மருந்து ஆனது கால்நடைகள், பன்றிகள் மற்றும் குதிரைகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு வலி நிவாரணியாக பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த மருந்தின் உருவாக்க முறைமையானது மனிதர்கள் மற்றும் விலங்குகளின் பயன்பாட்டிற்கு வேறுபடுகின்றன.
- பல்வேறு பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏற்கனவே பல நாடுகளில் குழந்தைகளில் நிம்சுலைடு மருந்தினைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150வது ஆண்டு நிறைவு

- 1875 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்திய வானிலை ஆய்வுத் துறையானது தனது 150 ஆண்டு காலத்திய சேவை நிறைவு விழாவினைக் கொண்டாட உள்ளது.
- இந்தியத் துணைக்கண்டத்தில் வானிலை பற்றிய ஒரு முறையான கண்காணிப்பு, மிகவும் வழக்கமான அறிக்கையிடல் மற்றும் அறிவியல்துறை சார் முன்னறிவிப்பு ஆகியவற்றிற்காக வேண்டி உருவாக்கப்பட்ட ஆரம்ப கால அரசு துறைகளில் இதுவும் ஒன்றாகும்.
- 1793 ஆம் ஆண்டில் (அப்போதைய) மதராசில் முதலாவது வானிலை மற்றும் வானியல் ஆய்வகம் நிறுவப்பட்டது.
- பின்னர் 1875 ஆம் ஆண்டில் H.F.பிளான்ஃபோர்ட் அவர்களை வானிலை அறிக்கையாளர் எனக் கொண்டு இந்திய வானிலை ஆய்வுத் துறையானது நிறுவப்பட்டது.

## மாவட்ட அளவிலான பருவநிலை இடர் மதிப்பீடு

- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், மண்டியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வு மையம் (CSTEP) ஆனது, "இந்தியாவின் மாவட்ட அளவிலான பருவநிலை இடர் மதிப்பீடு: IPCC கட்டமைப்பைப் பயன்படுத்தி வெள்ளம் மற்றும் வறட்சி சார் இடர்களை வரைபடமாக்குதல்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 51 மாவட்டங்கள் 'மிக அதிக அளவிலான வெள்ள அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும், மேலும் 118 மாவட்டங்கள் 'மிக அதிக வெள்ள அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும் அடங்கும்.
- இவை முதன்மையாக அசாம், பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத், ஒடிசா மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ளன.
- 91 மாவட்டங்கள் 'மிக அதிக அளவிலான வறட்சி அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும், 188 மாவட்டங்கள் 'அதிக வறட்சி அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும் அடங்கும்.
- இவை முதன்மையாக பீகார், அசாம், ஜார்க்கண்ட், ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ளன.
- 11 மாவட்டங்கள் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டு பிரிவிலும் 'மிக அதிக அளவிலான பாதிப்பு உள்ள பகுதிகள்' என்ற பிரிவிலும் உள்ளன.

## இந்திய இரயில்வே - விளையாட்டு விருதுகளை வென்றவர்களின் எண்ணிக்கை

- 2024 ஆம் ஆண்டில், அர்ஜுனா விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட 32 வீரர்களில், ஐந்து பேர் இந்திய இரயில்வே நிறுவனத்தினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இந்த 5 அர்ஜுனா விருதுகளுடன், மொத்தம் 183 அர்ஜுனா விருதுகளையும், 28 பத்மஸ்ரீ, 12 தியான் சந்த், 13 துரோணாச்சார்யா மற்றும் 9 மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதுகளையும் இத்துறையினைச் சேர்ந்தவர்கள் பெற்றுள்ளனர்.
- இந்தியாவில் ஒரே நிறுவனத்திலிருந்து இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான விருது பெற்றவர்கள் பதிவாகியுள்ளது இரயில்வே துறையேயாகும்.

## மெத்தில்கோபாலமின் குறித்த FSSAI அமைப்பின் தெளிவாக்கம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் ஆனது, B12 வைட்டமினின் ஒரு வடிவமான இந்த மெத்தில்கோபாலமினை, உடல்நலத்திற்கான ஊட்டக் குறைநிரப்பு மருந்துகள், மருத்துவ நோக்கங்கள் மற்றும் ஊட்டச்சத்து மருந்துப் பொருட்களில் பயன்படுத்துவது குறித்து தெளிவுபடுத்தியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்கான FSSAI விதிமுறைகளின் படி அனுமதிக்கப்பட்ட வைட்டமின் B12 வடிவங்களில் தற்போது சயனோகோபாலமின் மற்றும் ஹைட்ராக்ஸோகோபாலமின் ஆகியவை அடங்கும்.
- வைட்டமின் B12 என்பது ஒரு முக்கியமான நீரில் கரையக்கூடிய வைட்டமின் ஆகும் என்பதோடு இது டிஎன்ஏ தொகுப்பு, இரத்தச் சிவப்பணு உற்பத்தி மற்றும் நரம்பியல் செயல்பாடு ஆகியவற்றில் ஒருங்கிணைந்த ஒன்றாகும்.
- இந்த வைட்டமின் குறைபாடு கடுமையான உடல்நல விளைவுகளுக்கு வழி வகுக்கும், எனவே இதற்காகப் பெரும்பாலும் ஊட்ட குறைநிரப்பு மருந்துகள் தேவைப் படுகிறது.

## இந்தியாவின் பீட்டா தலைமுறையின் முதல் குழந்தை

- ஜனவரி 01 ஆம் தேதியன்று நள்ளிரவு 12:03 மணிக்கு மிசோரமில் உள்ள ஐஸ்வாலில் பிறந்த பீட்டா தலைமுறையின் முதல் குழந்தையாக பிரான்கி ரெம்ருதிகா ஜாடெங் பிறந்தார்.
- ஆஸ்திரேலிய எதிர்காலவாதியான மார்க் மெக்ரிண்டில் என்பவர் இந்தச் சொல்லினை உருவாக்கினார்.
- இந்த பீட்டா தலைமுறையில் 2025 மற்றும் 2039 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பிறந்த குழந்தைகளும் அடங்கும்.
- இந்த நபர்கள் மில்லினியல்கள் (தலைமுறை Y) மற்றும் பழைய ஜென் Z பெற்றோரின் சந்ததிகளாக இருப்பார்கள்.
- 2035 ஆம் ஆண்டில், உலகளாவிய மக்கள்தொகையில் பீட்டா தலைமுறையின் பெரும் பங்கானது 16% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு இது எதிர்காலச் சமூக மற்றும் பொருளாதார நிலப்பரப்பில் அவர்களின் மிகப்பெரும் குறிப்பிடத்தக்கதொரு பங்கைப் பிரதிபலிக்கிறது.

## 13 ஆம் நூற்றாண்டின் புனிதத் துறவி நரஹரி தீர்த்தரின் சிலை

- 13 ஆம் நூற்றாண்டின் துறவியான நரஹரி தீர்த்தரின் சுமார் மூன்றடி உயரச் சிலையை ஆராய்ச்சியாளர் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- அவர் சிகாகோலு நகரத்தினைச் சேர்ந்தவராக இருக்கலாம் (தற்போதைய ஸ்ரீகாகுளம்).
- தீர்த்தரின் முன்னோர்கள் தற்போதைய ஒடிசா மாநிலமாக உள்ள முந்தைய கஜபதி பேரரசில் நிலப்பிரபுக்களாக இருந்தனர்.
- கிழக்கு கங்கை வம்சத்தின் மன்னர்களுக்கு 30 ஆண்டுகளாக துறவிகள் உதவியாக இருந்ததாக இந்தக் கல்வெட்டுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.
- அவர் ஏற்கனவே மத்வாச்சார்யா அவர்களால் நான்காவது வரிசையில் ஒரு குருவாக நியமிக்கப் பட்டார் என்பதை இது குறிக்கிறது.
- சிம்மாசலம் மற்றும் ஸ்ரீகூர்மம் (ஸ்ரீகாகுளம்) ஆகிய கோயில்களில் கிடைக்கப் பெற்ற சில கல்வெட்டுகளில் இது குறித்த அவரதுப் பங்களிப்புகள் நன்கு ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்த துறவியின் பெயருடன் 'லோக சுரக்சானா அதி நிபுண:', 'யோ அவதி கலிங்கப் பூ சாம்பவான்' ஆகிய சில பெரும் மரியாதைக்குரிய முன்னொட்டுகள் பயன்படுத்தப் படுகின்றன.

## இந்திய வனவிலங்குகளில் HPAI H5N1 தொற்று

- நாக்பூரில் உள்ள பாலா சாஹேப் தாக்கரே கோரேவாடா சர்வதேச விலங்கியல் பூங்காவில், பொதுவாக 'பறவைக் காய்ச்சல்' என்று அழைக்கப்படும் அதிகத் தொற்று மிக்க பறவைக் காய்ச்சல் (HPAI) H5N1 வைரஸால் பாதிக்கப்பட்டு மூன்று புலிகளும் ஒரு சிறுத்தைப்புலியும் உயிரிழந்துள்ளன.
- (HPAI) H5N1 வைரஸ் ஆனது மிகப் பொதுவாக 'பறவைக் காய்ச்சல்' என்று அழைக்கப் படுகிறது.
- இந்தியாவில் காப்பகங்களில் வைத்து நன்கு காக்கப்படும் வனவிலங்குகளிடையே மிகப்பெரும் உயிரிழப்பை ஏற்படுத்திய முதல் நோய்ப் பாதிப்பு இதுவாகும்.

- ஐந்து கண்டங்களில் உள்ள 108 நாடுகளில் இந்த வைரஸ் நிலையாக பரவிக் காணப் படுகிறது.

## BIS நிறுவனத்தின் 78வது ஸ்தாபன தினம்

- இது 1947 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று இந்தியத் தரநிலை நிறுவனமாக (ISI) அமைக்கப்பட்டது.
- பின்னர் இது 1986 ஆம் ஆண்டு இந்தியத் தரநிலைகள் வாரியச் சட்டத்தின் கீழ் மறு சீரமைக்கப் பட்டது.
- BIS ஆனது தர நிலைகளை வலுப்படுத்தவும் ஒரு போட்டித் தன்மையை அதிகரிக்கவும் பணியாற்றுகிறது.
- இது நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- 1955 ஆம் ஆண்டு முதல் பல்வேறு உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கு BIS நிறுவனத்தினால் ISI முத்திரை வழங்கப்படுகிறது.

## DSIR துறையின் 40வது ஸ்தாபன தினம்

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறையானது (DSIR) 1985 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- தொழில்நுட்ப மேம்பாடு, பரிமாற்றம் மற்றும் பயன்பாட்டில் கவனம் செலுத்துவதன் மூலம் உள்நாட்டுத் தொழில்துறை ஆராய்ச்சியை ஊக்குவிப்பதே DSIR துறையின் முதன்மையான பணியாகும்.
- வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த தொழில் நுட்பங்களை உருவாக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் (R&D) நன்கு ஈடுபடுவதற்கு தொழில்துறைகளை ஊக்குவிப்பதை இந்தத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மோசமான போக்குவரத்து நெரிசல் கொண்ட ஆசிய நகரங்கள்

- ஓட்டுநர்கள் ஆண்டுதோறும் சராசரியாக 132 மணிநேரம் போக்குவரத்தில் சிக்கிக் கொள்வதால், ஆசியாவிலேயே மிகவும் மோசமான போக்குவரத்து நெரிசல் கொண்ட நகரங்களில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு டாம்டாம் போக்குவரத்துக் குறியீட்டின் படி, நகரத்தில் ஓட்டுநர்கள் 10 கிலோமீட்டர் பயணம் செய்வதற்கு சராசரியாக சுமார் 28 நிமிடங்கள் 10 வினாடிகளை செலவிடுகிறார்கள்.
- மேற்கு இந்தியாவின் புனே நகரம் 10 கிலோ மீட்டருக்கு 27 நிமிடங்கள் 50 வினாடிகள் என்ற நீண்ட பயண நேரத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸில் உள்ள மணிலா (27 நிமிடங்கள் 20 வினாடிகள்) மற்றும் தைவானில் உள்ள தைச்சுங் (26 நிமிடங்கள் 50 வினாடிகள்) இடம் பெற்றுள்ளன.

## ஆசியாவின் மிகவும் நெரிசலான நகரம் 2024

- 2024 ஆம் ஆண்டில் கொல்கத்தா நகரானது உலகின் இரண்டாவது மிகவும் நெரிசலான நகரமாகவும், ஆசியாவின் மிகவும் நெரிசலான நகரமாகவும் இருந்தது.
- இந்த நகரத்தில் வாகன ஓட்டுநர்கள் 10 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க சராசரியாக 34 நிமிடங்கள் 33 வினாடிகள் செலவிட்டுள்ளனர்.
- இதில் கொல்கத்தாவைத் தொடர்ந்து பெங்களூரு இடம் பெற்றுள்ளது என்ற நிலையில் இந்த நகரத்தில் வாகன ஓட்டுநர்கள் 10 கி.மீ தூரம் கடக்க 34 நிமிடங்கள் 10 வினாடிகள் செலவிட்டுள்ளனர்.
- கொல்கத்தாவில் போக்குவரத்து நிலைமைகள் காரணமாக ஆண்டிற்கு சுமார் 110 மணி நேரம் இழப்பு பதிவாகியுள்ளது என்ற நிலையில் பெங்களூருவில் 117 மணி நேரமும், புனேவில் 108 மணிநேரமும், ஐதராபாத்தில் 85 மணிநேரமும் இழக்கப் பட்டு உள்ளன.
- அதே தூரத்தினைக் கடப்பதற்கு 33 நிமிடங்கள் 22 வினாடிகள் பயண நேரத்துடன் புனே இதில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது, இதனால் உலகின் நெரிசல் மிக்க முதல் ஐந்து இடங்களில் மூன்று இந்திய நகரங்கள் இடம் பிடித்துள்ளன.
- கொலம்பியா நாட்டின் பாரன்குவிலா நகரம் (36 நிமிடங்கள், ஆறு வினாடிகள்) முதல் இடத்தையும், இலண்டன் (33 நிமிடங்கள், 17 வினாடிகள்) இந்தத் தரவரிசையில் முதல் ஐந்து இடங்களில் இடம் பிடித்துள்ளன.

## அண்டார்டிகாவில் உள்ள பண்டைய கால பனிக்கட்டி

- உலகின் மிகப் பழமையான பனிக்கட்டியை அறிவியலாளர்கள் வெற்றிகரமாக உறை பனியிலிருந்து பிரித்தெடுத்துள்ளனர்.
- அண்டார்டிகாவின் ஆழ் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட இது 1.2 மில்லியன் ஆண்டுகள் பழமையானது.
- இந்தப் பனிக்கட்டி உட்கருவத்தில் சிக்கியுள்ள காற்றுக் குமிழ்கள், பசுமை இல்ல வாயு செறிவுகள் உட்பட முந்தைய/ பழங்கால வளிமண்டல கலவையின் பல்வேறு நேரடித் தகவல்களை வழங்குகின்றன.

## பறவைகளில் ஆண்ட்ரோஜன் ஏற்பிகளின் பங்கு

- ஆண்ட்ரோஜன் பாலியல் ஹார்மோன்கள் ஆனது, ஆண் பாலியல் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகின்ற அதே நேரத்தில் ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ட்டிரோன் ஆகியன பெண்களில் அதே பங்குகளை வகிக்கின்றன.
- ஆண்ட்ரோஜன் ஏற்பிகள் ஆண்களின் உடலில் உள்ளதைப் போலவே பெண்களிலும் பாலியல் வளர்ச்சி மற்றும் கருவுறுதலுக்கு முக்கியம் என்று மிகவும் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- ஆண்ட்ரோஜன் ஏற்பிகள் இல்லாத ஆண் மற்றும் பெண் கோழிகள் இரண்டுமே தற்போது மலட்டுத் தன்மை கொண்டவை என்று தெரிய வந்துள்ளது.
- சேவல்கள் மற்றும் ஆண் கோழிகளின் உடல்கள் விடியற்காலையில் கூவுவதற்கு என வலுவான சமிக்ஞைகளை அனுப்புகின்ற ஒரு நாள்சார் சீரியக்கம் (circadian) அல்லது உயிரியல் உள் உடல் கடிகாரத்தைக் கொண்டுள்ளன.

- இந்தக் கூவும் நடத்தையுடன் தொடர்புடைய நரம்பியல் சுற்று ஆனது, ஆண்ட்ரோஜன் ஹார்மோன்கள், குறிப்பாக டெஸ்டோஸ்டிரோன் இருப்பு குறித்த உணர்திறன் சார்ந்து ஆகும்.

## இந்தியாவின் போர்க்களச் சுற்றுலா

- பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆனது 'பாரத் ரன்பூமி தரிசனம்' எனப்படும் தனது ஒரு புதிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, அதன் வரலாற்று மற்றும் பயன்பாட்டில் உள்ள சில போர்க்களங்கள் மற்றும் புவிசார் அரசியல் சூழல் மண்டலங்களுக்குச் சுற்றுலாப் பார்வையாளர்கள் வருகை தருவதற்கு அனுமதியளித்துள்ளது.
- இந்த முக்கிய முன்னெடுப்பானது அதன் சிறப்பு மிக்க மற்றும் அணுக முடியாத போர் மண்டலங்களுள் சிலவற்றைச் சுற்றுலாத் தலங்களாக மாற்ற உள்ளது.
- புதிதாகத் தொடங்கப்பட்ட 'பாரத் ரன்பூமி தரிசனம்' முன்னெடுப்பில் கல்வான் மற்றும் டோக்லாம் மற்றும் கடந்த காலங்களில் சில இராணுவ நடவடிக்கைகள் நிகழ்ந்த 75 பிற தளங்கள் அடங்கும்.
- இந்திய இராணுவமானது சுற்றுலாத் துறை அமைச்சகத்துடன் இணைந்து "போர்க்கள சுற்றுலாவிற்காக" இந்த போர்க்களத் தளங்களைப் பட்டியலிட்டுள்ளன.

## அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளின் தயாரிப்புகளுக்குப் புதிய புவிசார் குறியீடுகள்

- முதல் முறையாக, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் ஏழு தயாரிப்புகள் ஆனது ஒரே நேரத்தில் புவி சார் (GI) குறியீடுகளைப் பெற்றுள்ளன.
- அந்தத் தயாரிப்புகள் ஆனது நிக்கோபர் தேங்காய், நிக்கோபாரி தவி-இ-நைச் (சுத்தமான தேங்காய் எண்ணெய்), அந்தமான் கரேன் மஸ்லி அரிசி, ஹோடி (ஒரு புறங்களில் நீண்ட சிறுபடகு), நிக்கோபாரி பாய் (சத்ராய்-ஹிலுவோய்), நிக்கோபாரி ஹட் (சான்வி பட்டி - நிய் ஹுபுல்), படௌக் மரக் கைவினைப்பொருள் ஆகியனவாகும்.
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியானது (NABARD), இதற்கான ஒரு விண்ணப்பச் செயல்முறையை மேற்கொண்டது.

## களரிப் பயற்று மற்றும் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள்

- களரிப் பயற்று கலையானது, 2023 ஆம் ஆண்டு கோவாவில் நடைபெற்ற 37வது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் போட்டிப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், இந்தக் கலை வடிவம் ஆனது இந்த ஆண்டில் ஒரு செயல்விளக்கப் போட்டி நிகழ்வாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- களரிப் பயற்றுக் கலையானது உலகின் பழமையான மற்றும் மிகவும் அறிவியல் ரீதி ஆன தற்காப்புக் கலை வடிவங்களில் ஒன்றாகும்.
- கேரளாவில் தோன்றிய இந்தக் கலையானது அங்குப் பரவலாகப் பயிற்சி செய்யப் படுகிறது.
- ஒன்றுக்கொன்று சற்று வேறுபடுகின்ற வடக்கு மற்றும் தெற்கு எனப்படும் இரண்டு வகையான களரிப்பயற்று கலைகள் உள்ளன.

- வடக்கு வகையில், தெற்கு வகையை விட மிக அதிகமான ஆயுதங்கள் பயன்படுத்தப் படுகின்றன என்பதோடு வடக்கு களரியில் உள்ள அனைத்து உடல் இயக்கங்களும் முன்னோக்கி மற்றும் பின்னோக்கி என ஒரே நேர்கோட்டில் உள்ளவாறு அமைகின்றன.
- இருப்பினும், தெற்கு களரியில், மக்கள் அதைப் பயிற்சி செய்யும் போது அவர்கள் எந்த திசையிலும் நகரலாம்.
- கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஷாவ்லின் என்ற ஒரு கோவிலில் போதிதர்மர் அவர்களால் இந்தக் களரிப் பயற்றுக் கலையானது சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டது என நம்பப் படுகிறது.

## இந்தியாவின் முதல் eVTOL வான்வழி வாடகை வாகனம் 'ஷுன்யா'

- பெங்களூருவில் உள்ள சர்லா ஏவியேஷன் நிறுவனமானது, ஷுன்யா எனப்படும் அதன் புதுமையான வான்வழி வாடகை மின்சார வாகனத்தினை அறிமுகப்படுத்தியது.
- இந்த ஷுன்யா முன்மாதிரியானது, மணிக்கு 250 கி.மீ வேகத்தில் 20 முதல் 30 கி.மீ வரையிலான குறுகிய தூரப் பயணங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆறு பயணிகளை ஏற்றிச் செல்லும் ஒரு திறன் கொண்ட இந்த வாகனம் ஆனது அதிக பட்சமாக 680 கிலோ எடையை சுமக்கும் திறன் கொண்டது.

## கேரளப் பழங்குடி மன்னர்

- கேரளாவின் இடுக்கியைச் சேர்ந்த பழங்குடி மன்னர் இராமன் இராஜமன்னன் மற்றும் அவரது மனைவி பினுமோல் ஆகியோர் புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் கலந்து கொண்டனர்.
- இடுக்கியில் உள்ள 48 பட்டியலிடப்பட்ட பழங்குடியின கிராமங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட மன்னன் சமூகக் குடும்பங்கள் உள்ளன.
- அவர்களின் சடங்குகளில் மன்னருக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு.
- அரசக் குடும்பங்களிலிருந்து, பாரம்பரியத் தாய்வழி மரபுரிமை முறையின்படி அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- அரசருக்குச் சமூகத்தில் எந்தக் குடிமை உரிமைகளும் கடமைகளும் இல்லை, ஆனால் நான்கு உப ராஜாக்கள் (பிரதிநிதிகள்), ஒரு இளையராஜா (இளவரசர்) மற்றும் கானிகள் என்று அழைக்கப்படும் 50 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைச்சர்கள் குழுவின் உதவியுடன் சமூகத்தின் விவகாரங்களை அவர் மேற்பார்வையிடுகிறார்.

## சர்த் ஹவா நடவடிக்கை 2025

- எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஆனது, ஜெய்சால்மரில் பாகிஸ்தாந நாட்டுடனான எல்லைப் பகுதியில் ஊடுருவல் முயற்சிகளைத் தடுப்பதற்காக என்று கண்காணிப்பை அதிகரித்துள்ளது.
- குளிர்காலத்தில் மூடுபனியால் ஏற்படும் குறைவான புலப்படும் தன்மை காரணமாக நிகழும் ஊடுருவல் முயற்சிகளைத் தடுப்பதே இந்தச் சிறப்புப் பயிற்சியின் நோக்கம் ஆகும்.
- வழக்கமாக, BSF ஆனது கோடையில் 'கரம் ஹவா நடவடிக்கை' மற்றும் குளிர்காலத்தில் 'சர்த் ஹவா நடவடிக்கை' ஆகியவற்றை நடத்துகிறது.

- மறுபுறம், BSF ஆனது இந்திய-வங்காளதேச எல்லையில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தடை செய்யப் பட்ட இருமல் நிவாரணி மருந்துகள் அடங்கிய மூன்று நிலத்தடி இரும்புப் பதுங்கு குழிகளைக் கண்டுபிடித்துள்ளது.
- இந்தப் பதுங்கு குழிக்குள் சுமார் 1.41 கோடி ரூபாய் மதிப்புள்ள 62,200 குடுவைகள் பென்செடைல் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
- கோடீனை அடிப்படையாகக் கொண்ட இருமல் நிவாரணி மருந்தான பென்செடைல், வங்காள தேசத்தில் தடை செய்யப்பட்டுள்ளது, ஆனால் அங்குள்ள மிக அதிகத் தேவை காரணமாக பெரும்பாலும் அது இந்தியாவிலிருந்து கடத்தப்படுகிறது.

## கோடீஸ்வரர்களின் வருடாந்திரச் செல்வ வளம் - ஆக்ஸ்பாம் அறிக்கை

- பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்ட செல்வ வளங்களை "Takers, Not Makers" என்று தலைப்பிடப் பட்ட ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் அறிக்கை எடுத்துரைக்கிறது.
- 1765 மற்றும் 1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இங்கிலாந்து நாடானது இந்திய நாட்டில் 64.82 டிரில்லியன் டாலர் பணத்தைச் சுரண்டியது என்ற நிலையில் அதில் 33.8 டிரில்லியன் டாலர் முன்னணியில் இருந்த 10% பேருக்கு சென்றது.
- 1750 ஆம் ஆண்டில், இந்தியாவானது உலகளாவியத் தொழில்துறை உற்பத்தியில் 25% பங்கினைக் கொண்டிருந்தது, ஆனால் 1900 ஆம் ஆண்டில் இது 2% ஆகக் குறைந்தது.
- ஆனால் 2024 ஆம் ஆண்டில், கோடீஸ்வரர்களின் செல்வ வளம் 2023 ஆம் ஆண்டினை விட மூன்று மடங்கு வேகமாக அதிகரித்தது.
- 3.5 பில்லியனுக்கும் மிக அதிகமான மக்கள் ஒரு நாளைக்குச் சுமார் 6.85 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வெகு நாட்களாக வாழ்கின்றனர்.
- பணக்காரர்களில் 1% பேர் தற்போது உலக மக்கள்தொகையில் 95 சதவீதம் பேரை விட அதிக செல்வத்தைக் கொண்டுள்ளனர்.

## ஃபோர்ப்ஸ் இதழின் உலகளவில் முன்னணியில் உள்ள 50 வயதிற்கு மேற்பட்ட 50 பெண்மணிகளின் பட்டியல் 2025

- ஃபோர்ப்ஸ் இதழின் உலகளவில் முன்னணியில் உள்ள 50 வயதிற்கு மேற்பட்ட 50 பெண்மணிகளின் பட்டியலில் மூன்று இந்தியப் பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.
- உயிரி மருந்துத் தொழில்துறையின் முக்கியத் தொழில்முனைவரும், இந்தியாவின் மிக வெற்றிகரமான மற்றும் சுயமாக உழைத்து முன்னேறிய பெண்களில் ஒருவருமான பெங்களூருவைச் சேர்ந்த கோடீஸ்வரரான கிரண் மஜும்தார்-ஷா இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- ஊர்மிளா ஆஷர் குஜராத்தி சமையல் நிபுணத்துவத்தில் வேரூன்றிய குஜ்ஜு பென் நா நாஸ்டா என்ற உணவு வணிகத்தைத் தொடங்கினார்.
- 1952 ஆம் ஆண்டில் பிறந்த ஷீலா படேல், குடிசைவாசிகளின் உரிமைகளுக்காக எனப் போராடுவதற்கும், சமமான நகர்ப்புற இடங்களை உருவாக்குவதற்கும் மிகப்பெரும் அர்ப்பணிப்புடன் செயல்படும் ஒரு புகழ்பெற்ற ஆர்வலர் மற்றும் கல்வியாளர் ஆவார்.
- 1984 ஆம் ஆண்டில் இவர் மும்பையில் உள்ள முக்கியப் பகுதி வள மையங்களை மேம்படுத்துவதற்கான சங்கத்தினை (SPARC) இணைந்து நிறுவினார்.

## SSI மந்த்ரா

- ஜெய்ப்பூரில் இரண்டு இருதய அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக இந்திய மருத்துவர்கள் முதன்முறையாக தொலைதூரத்தில் இருந்து இயக்கக்கூடிய ஒரு எந்திர அமைப்புகளைப் பயன்படுத்துகின்றனர்.
- SSI மந்த்ரா எனப்படுகின்ற இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை எந்திர அமைப்பு இதுவாகும்.
- இது சுமார் 286 கிலோ மீட்டர் தூரத்தில் தொலை தூரக் கட்டுப்பாடு மூலமான அறுவை சிகிச்சை மூலம் குருகிராமில் உள்ள மருத்துவமனையில் ஒன்றும், ஜெய்ப்பூரில் உள்ள மணிப்பால் மருத்துவமனையில் மற்றொன்றும் என இரண்டு எந்திர அமைப்புகள் மூலமான இருதய அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- உள் மார்பக தமனி அகற்றல் செயல்முறை மற்றும் இதயத் துடிப்பினை ஒத்திசைந்த வகையிலான முழுமையாக உள்நோக்கியியல் கருவி சார்ந்த இருதய தமனிகளுக்கு இடையேயான திசைமாற்ற அறுவைச் சிகிச்சையான (TECAB) இரண்டுமே இருதய அறுவைச் சிகிச்சைகள் ஆகும்
- இந்த வகையில் இம்மாதிரியான ஒரு அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவது உலகிலேயே முதல் முறையாகும்.
- SSI மந்த்ரா 3 என்பது எந்திரவியல் அறுவைச் சிகிச்சை அமைப்பு என்பது தொலை தூரக் கட்டுப்பாடு மூலமான ஒரு அறுவைச் சிகிச்சை மற்றும் மிக தொலைதூரக் கண்காணிப்புகளுக்கான ஒழுங்குமுறை சார்ந்த ஒப்புதலைப் பெற்ற உலகின் ஒரே எந்திரவியல் அமைப்பு ஆகும்.
- இது மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பினால் (CDSCO) அங்கீகரிக்கப் பட்டதாகும்.
- மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) ஆனது, இந்திய அரசாங்கத்தின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தில் உள்ள சுகாதாரச் சேவைகள் இயக்குநரகத்தின் (DGHS) கீழ் செயல்படுகிறது.

## ஜீனோம் இந்தியா திட்டத்தின் தரவு மாநாடு

- பிரதமர் தலைமையில், இந்திய மரபணுத் தரவுத் தொகுப்பு ஆனது வெளியிடப்பட்டது, இதன்படி இந்தியா இனி வெளிநாட்டு மரபணு தரவுகளைச் சார்ந்திருக்காது.
- மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 'Framework for Exchange of Data Protocols - தரவு நெறிமுறைகள் பரிமாற்றத்திற்கான கட்டமைப்பு (FeED)' மற்றும் இந்திய உயிரியல் தரவு மையம் (IBDC) ஆகிய இணையதளங்களைத் தொடங்கி வைத்தார்.
- இது இந்தியா மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு 10,000 முழுமையான மரபணு மாதிரிகளை அணுக வாய்ப்பளிக்கிறது.
- இது உயிரித் தொழில்நுட்பத் துறையின் (DBT) கீழான 'ஜீனோம்இந்தியா' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவின் மரபணு பன்முகத்தன்மையின் மிக வலுவான மற்றும் விரிவான தரவுத் தளத்தினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- எனவே, இந்தியாவில் உணவு, கலாச்சாரம் மற்றும் புவியியல் ஆகியவற்றில் மட்டும் அல்லாது, மரபணுவிலும் பன்முகத்தன்மை உள்ளது.

- 2014 ஆம் ஆண்டில் சுமார் 10 பில்லியன் டாலர்களாக இருந்த இந்தியாவின் உயிரியல் பொருளாதாரம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 130 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது, என்ற நிலையில் இது 2030 ஆம் ஆண்டிற்குள் 300 பில்லியன் டாலர்களை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- உயிரித் தொழில்நுட்பத்தில் இந்தியா தற்போது உலகளவில் 12வது இடத்திலும், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 3வது இடத்திலும் உள்ளது.
- இந்தியாவானது உலகின் மிகப்பெரிய தடுப்பூசி உற்பத்தியாளராகவும், மூன்றாவது பெரியப் புத்தொழில் நிறுவனச் சூழல் அமைப்பாகவும் உள்ளது.

## வடகிழக்குப் பருவமழை 2024

- சென்னையின் பிராந்திய வானிலை ஆய்வு மையம் ஆனது, தெற்கு இந்தியத் தீபகற்பப் பகுதியிலிருந்து வடகிழக்குப் பருவக்காற்று விலகியதாக அறிவித்துள்ளது.
- இந்தப் பருவத்தின் இடையிடையே மழைப் பொழிவில் இடைவெளிகள் இருந்தாலும், வானிலை அமைப்புகளின் இயக்கம் ஆனது பருவக்காற்றினைச் செயலில் இருப்பதாக கருதியது.
- ஜனவரி மாத இறுதி வரையில் பருவக் காற்று நீடித்த சில அரிய ஆண்டுகளில் இதுவும் ஒன்றாகும்.
- பொதுவாக, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 26 முதல் டிசம்பர் 30 ஆம் தேதிக்கு இடைப் பட்ட காலத்தில் பருவக்காற்று விலகும்.
- அக்டோபர் மற்றும் டிசம்பர் போன்ற பருவக் காற்று மாதங்களில் சராசரியாக 44.3 செ.மீ மழை பெய்யும் நிலையில், தமிழ்நாட்டில் சுமார் 58.9 செ.மீ மழை பெய்தது.
- ஜனவரி 28 ஆம் தேதியன்று தமிழகம் மாநிலம் ஆனது, 1933-34 ஆம் ஆண்டின் மிகவும் தாமதமான பருவமழையினை எதிர்கொண்டது.
- 1901 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையிலான ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு ஆண்டுகளில் முந்தைய ஆண்டின் பருவக்காற்றானது அடுத்த ஆண்டிற்கும் நீடித்தது.
- 1901 ஆம் ஆண்டு முதல் கடந்த 28 ஆண்டுகளில் ஜனவரி மாதத்தின் முதல் 10 நாட்களில் பருவமழையானது தமிழக மாநிலத்திலிருந்து பின்னடைந்தது.
- இத்தகைய நீட்டிக்கப்பட்டதொரு பருவமழை நிகழ்வு ஆனது 2011 ஆம் ஆண்டு முதல் அடிக்கடி நிகழ்கிறது.
- தென்மேற்கு பருவமழையைப் போல அல்லாமல், பின்வாங்கும் பருவமழை என்றும் அழைக்கப் படும் வடகிழக்கு பருவமழையானது, பின்னடையும் போது காற்று ஒட்ட வடிவத்தில் திசை மாற்றம் போன்ற வானிலை அளவுருக்களில் வியத்தகு மாற்றத்தைக் கொண்டிருக்கவில்லை.
- மழைப் பொழிவுக் குறைவு என்பது பருவமழை மீதான பின்னடைவிற்கான முக்கிய அளவுருக்களில் ஒன்றாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★